390

OFFICE OF THE ...
10 DEC 1928

மேயோ கூற்று மெய்யா-பொய்யா?



கோவை. அ. அய்யாமுத்து.

R34
N27
150502
434

மேயோ கூற்று
மெய்யா-பொய்யா?

கோவை. அ. அய்யாமுத்து
எழுதியது.

1929.

இதன் விலை] உரிமை பதிவு செய்யப்பட்டது. [அணா 4.

காஞ்சீபுரம் "குமரன் அச்சு நிலையத்தில்"
பதிப்பிக்கப்பட்டது.
5-11-1929.

முகவுரை.

திருவாளர் A. அய்யாமுத்து அவர்களால் எழுதப்பட்ட "மேயோ கூற்று மெய்யா பொய்யா" என்னும் இப்புத்தகத்திற்கு முகவுரை ஒன்று தேவையில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

ஏனெனில் திரு. அய்யாமுத்து அவர்களையும், அவரது வீரத்தையும், தீவிர உணர்ச்சியையும் தமிழ் உலகம் நன்றாய் அறியும். அன்றியும் அவரால் எழுதப்பட்ட மேல்கண்ட புத்தகத்தில் கண்ட விஷயங்கள் பெரும்பாலும் ஏற்கனவே குடியரசுவில் வெளியாகி வந்துகொண்டிருந்ததின் மூலம் அநேகர் அறிந்திருப்பார்கள்.

எனினும், யான் அப் புத்தகம் எழுதப்பட்டதின் கருத்தை வெளிப்படுத்துவான் வேண்டி சில வார்த்தைகள் மட்டும் முகவுரை என்னும் சாக்கைக் கொண்டு எழுதத் துணிகின்றேன். நண்பர் திரு அய்யாமுத்து அவர்கள் ஒத்துழையாமையில் ஈடுபட்டு உண்மையுடன் உழைத்தவர். வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது அதில் இறங்கி மனப்பூர்த்தியாய் உழைத்து உறுதியுடன் சிறைக்கும் சென்றவர். இது சமயம் கதர்த்தொண்டில் ஈடுபட்டு உழைத்துக்கொண்டு வருபவர். அன்றியும் சுயமரியாதை இயக்கத்தில் ஆரம்பமுதல் முழுப்பற்றுக்கொண்டு அதன் கொள்கைகள் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொண்டு தனது நித்திய வாழ்விலும் அவைகளை அநுசரித்து நடந்துவருவதுடன் அக்கொள்கைகள் நாட்டில் பரவ, தனது மன மொழி மெய்களால் முயற்சி செய்துகொண்டும் வருபவர்,

எனவே, இத்தகைய ஒரு உறுதியும், வீரமும், சுயமரியாதை உணர்ச்சியும் கொண்ட ஒரு இளைஞர், இந்தியர்களில் சிறப்பாய் இந்துக்கள் என்பவர்களில் அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் என்பவர்களாலும், சமூக இயலில் பிரமுகர்கள் தொண்டர்கள் என்பவர்களாலும் தூற்றி இழித்துரைக்கப்பட்டு வரும் ஒரு புத்தகமாகிய மிஸ் மேயோவின் "இந்தியத்தாய்" என்னும் புத்தகத்தைப்பற்றி ஆராய்ந்து பார்த்து அவற்றில் உள்ள விஷயங்கள் பெரிதும் உண்மை என்று எடுத்துக் காட்டும் மாதிரியில் "மேயோ கூற்று மெய்யா—பொய்யா?" என்று ஒரு புத்தகம் எழுதவானேன் என்னும் விஷயம் பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது மிக்க அவசியமானதாகும். அன்றியும் மேயோவின் இந்தியத்தாய் என்னும் புத்தகத்தைப்பற்றி திரு அய்யாமுத்து போன்ற மற்றும் சில சுயமரியாதை வீரர்கள் கொண்ட அபிப்பிராயமெதுவோ அதுவேதான் சற்றேறக்குறைய என்னுடைய அபிப்பிராயமுமாகும். அதாவது நாங்கள் மேயோவின் இந்தியத்தாய் என்னும் புத்தகத்தைப்பற்றி, அது எழுதப்பட்ட நோக்கத்தின் விஷயத்தில் சிறிது ஐயுற்றாலும்கூட அதில் கண்ட பெரும்பான்மையான விஷயங்களை உண்மை என்று ஒப்புக்கொள்வதில் சிறிதும் சந்தேகமோ பயமோ உடையவர்கள் அல்ல என்பதை பொது ஜனங்களுக்கு முதவில் தெரிவித்துக்கொண்டு மற்றபடி இப்புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கத்தை விவரிக்கிறேன்.

சாதாரணமாக ஒரு இந்திய மனிதன் மிஸ் மேயோ புத்தகத்தில் இந்தியர்களைப்பற்றிக் கூறியிருக்கும் குறைகளை அடியோடு மறைத்தும், மறுத்துப் பேசியும், அவ்வம்மையை சில இழிமொழிகளால் வைதும்விட்டு சும்மா இருந்துவிடுவதினால் தனது நாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்யவேண்டிய

கடமையைச் செய்த வீரனுகிவிடுவானு? அல்லது அப்புத்த கத்தில் உள்ள குறைகளில் உண்மையானவற்றை தைரிய மாய் ஒப்புக்கொண்டு அவைகளை இந்திய மக்களுக்கு நன் ருய் விளக்கிக் காட்டி அக்குறைகளை ஒழிக்க முற்படுபவன் உண்மையாகத் தனது நாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய தொண்டை செய்த வீரனுவானு? என்பதே இப் பொழுது ஒவ்வொருவரும் யோசித்து முடிவு செய்யவேண் டிய விஷயமாகும்.

மிஸ். மேயோ அம்மையார் இந்தியாவைப் பற்றிச் சொல்லி உள்ள உண்மைகளும் கருத்துக்களும் இன்றைக்கு நூற்றுக் கணக்கான ஐந்நூற்றுக் கணக்கான வருஷங்க ளுக்குமுன் அனேக பெரியோர்களும் அறிவாளிகளும் நடு நிலைமை கொண்ட பல அயல் நாட்டு சுற்றுப் பிரயாணக் காரர்களும் மற்றும் உலகம் போற்றும், உத்தமர்கள், தேச பக்தர்கள், தேசிய தியாகிகள் என்று சொல்லப்படும் கபி லர், திருவள்ளுவர், இராமானுஜர், வேமன்னர் இராமதீர்த் தர், விவேகானந்தர், காந்தி முதலிய அனேகர்களால் ஒப் புக்கொள்ளப்பட்டு வெளியில் எடுத்துச் சொல்லப்பட்டும், விலக்க முயற்சிக்கப்பட்டும் வந்திருப்பதும், மேலும் இன் னும் அக்கொடுமைகளை நீக்க பல இயக்கங்கள் சங்கங்கள் முதலியவை மூலம் பிரசாரம் சட்டம் முதலியவைகள் செய் துக்கொண்டும் வரப்படுகின்ற விஷயங்களே அல்லாமல் அடி யோடு இல்லாததாகவோ கற்பனை செய்ததாகவோ காணப் படவே இல்லை. தவிரவும் முன் ஒவ்வொரு காலத்திலும் அனேக பெரியார்கள் மிஸ். மேயோவால் கூறப்பட்ட இக் குறைபாடுகளை வெளிப்படுத்திய காலத்திலெல்லாம் நமது நாட்டில் ஒரு கூட்டத்தார் அவைகளை மறைத்தும், மற்றும் வஞ்சகமாயும் சூட்சியாயும் திரித்தும் பேசிப்பேசி அடி

யோடு மூடிவைத்து விட்டதினாலேயே. இப்போது இவைகள் நமது விடுதலைக்குத் தடையாய் வந்து குறுக்கிடுகின்றது என்று சொல்லவேண்டிய நிலைக்கும் வந்து விட்டது.

ஆதலால்தான் இப்போது திரு. அய்யாமுத்து அவர்கள், அக்குறைபாடுகளையும், ஒழுக்க ஈனங்களையும், நாட்டிற் கேற்பட்டுள்ள அவமானங்களையும், இழிவுகளையும் தைரியமாய் ஒப்புக்கொண்டு சீறி ஆற்றப்புறையில் உள்ளது உள்ளபடி வெளிப்படுத்தி அவைகளை ஒழிக்கும் முயற்சியில் இறங்கி வேலை செய்கின்றார். ஆதலால் இப்பேர்ப்பட்ட புத்தகங்கள் எழுத நமது நாட்டில் மற்றெவரிலும் திரு. அய்யாமுத்து அவர்களே உரியராவார்.

எனெனில், மேலே குறிப்பிட்டபடி குற்றங்களை வெளியிலெடுத்துச் சொல்லிவிட்டு சும்மா இருந்துவிடாமல் அவைகளை ஒழிக்கத்தனது மனமொழி மெய்களால் முயற்சி எடுத்துக்கொண்டும் வருகின்றவர்.

ஆகையால் இப்புத்தகத்தை நான் மனப்பூர்வமாய் வரவேற்பதுடன் தமிழ் மக்கள் எல்லோரும் இதை வாங்கிப் படித்து நமது நாட்டின் சமூகத்துறையில் உள்ள குற்றங்களையும் கொடுமைகளையும் உண்மையாய் உணர்ந்து அவைகள் நீங்க முயற்சிக்க வேண்டும். என்றும் வேண்டிக் கொள்ளுவதுடன் தைரியமாய் இத்தொண்டில் இறங்கிய வீரர் திரு. அய்யாமுத்து அவர்களையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

ஈ. வெ. ராமசாமி.

"திராவிடன்" பத்திராதிபர்

திரு. சனக சங்கர கண்ணப்பர் அவர்களது

அபிப்பிராயம்.

சுயமரியாதை வீரரும் நமது நண்பருமாய திரு. அய்யாமுத்து அவர்கள் எழுதியுள்ள "மேயோ கூற்று மெய்யா பொய்யா" என்ற புத்தகத்தை நாம் வரவேற்கின்றோம். இப்புத்தகம் மிஸ். மேயோவின் "இந்தியத்தாய்" என்ற புத்தகத்துக்கு ஒரு விளக்கவுரை என்றே சொல்லவேண்டும்.

ஏனெனின், ஒரு சிலர் மிஸ். மேயோவைக் குப்பைக்காரியென்றும் அவள் கூற்றுப் பொய் என்று கூற நம் நண்பர் அய்யாமுத்து அவர்கள், அவ்வம்மையார் கூறியவைகள் எல்லாம் மெய் என்று தக்க ஆதாரத்துடன் எவரும் மறுக்கத்தகாத முறையில் விளக்கிக் காட்டுகின்றார்.

நம் அய்யாமுத்து அவர்கள் விளக்கவுரையோடு மட்டும் நின்றனரல்லர். திரு. அய்யாமுத்து தம் புத்தகத்தின் வாயிலின் நம் நாட்டிலுள்ள மதச் சாக்கடைகள், சமுதாயச் சாக்கடைகள் முதலியவைகளைத் தோண்டிக்காட்டி, அவைகளைப் புதைக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றார்.

திரு. அய்யாமுத்து ஒரு தேசிய சுயமரியாதை வீரர்; தீண்டாமை ஒழிப்பதற்காக வைக்கத்தில் சத்தியாக்கிரகப் போர்புரிந்து சிறைவாசம் பெற்ற பெரியார். கதர் இயக்கத்தில் ஈடுபட்டு உழைப்பவர். அடிக்கடி குடியரசிலும் திராவிடனிலும் வீர அறிவுரைக் கட்டுரைகள் எழுதி நம் மக்களுக்குச் சுய மரியாதை உணர்ச்சியை எழுப்புபவர். எனவே இவர் புத்தகம் நம்மனோரால் வரவேற்கப் பாலதொன்றாகும். இப்புத்தகம் மிக எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. மக்களுக்கு நல்லறிவைப் புகட்டி விடுதலைக்கு வழியைக் காட்டுவது. இத்தகைய புத்தகங்கள் பல எழுத நாம் திரு. அய்யாமுத்து அவர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

கண்ணப்பன்.

பொருளடக்கம்.

பொருள்.		பக்கம்.
பீடிகை.	...	1.
உயிர்ப் பலி.	...	3.
பிள்ளை வரம்.	...	5.
தீர்த்த விசேடம்.	...	6.
குப்பைக் காரி.	...	7.
வெறும் பேச்சு.	...	9.
சிற்றின்பம்.	...	11.
பிள்ளைப்பித்து.	...	13.
விபசாரம்.	...	14.
எங்குமில்லா விபசாரம்.	...	16.
விபசார உற்பவம்.	...	19.
புருஷனே தெய்வம்.	...	22.
பெண் அடிமை.	...	24.
மாமிகள் கொடுமை.	...	25.
விதவைகள் பரிதாப நிலைமை.	...	28.
பிள்ளைப் பேறு.	...	36.
நமது மடமை.	...	41.
ஆங்கில ஆட்சி.	...	43.
பார்ப்பன ஆட்சி.	...	46.
பார்ப்பன வஞ்சகம்.	...	49.
பார்ப்பனீயக் கொடுமை	...	52.
பார்ப்பனவரிப்பளு.	...	55.
பார்ப்பன அடிமைகள்.	...	58.
பஞ்சமர் துயரம்.	...	60.
பஞ்சமர்களை உயர்த்தும் வழிகள்.	...	66.
பிறவியில் வேற்றுமை உண்டா?	...	69.
சைவர்களின் பிதற்றல்.	...	71.
குற்றங் கூறுபவன் நமது நண்பனே.		73.
பிற நாட்டிற்கும் நமது நாட்டிற்கும் உள்ள வேற்றுமை	...	76.
நாம் அடிமைப் பட்டுக் கிடப்பதேன்?		77.
விடுதலைக்கு வழி என்ன?	...	81.
மேயோ சொன்னதும் அதுவே.	...	82.
நமது வந்தனம்.	...	84.

மேயோ கூற்று மெய்யா-பொய்யா?

(இந்திய மாதா)

பீடிகை. அமெரிக்காவி லிருந்து சில மாதங்கட்கு முன் மிஸ் மேயோ என்ற ஒரு மாது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு, இத்தேச மக்களிடையில் காணப்படும் பல குற்றங் குறைகளைத் திரட்டி ஒரு புத்தக ரூபமாக எழுதி "இந்திய மாதா" வெனப் பெயரிட்டு ஆங்கிலத்தில் வெளியிட்டிருக் கிறார். இப்புத்தகம் தமிழிலும், பிறமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு உலகின் பல பாகத்திலும் பிரசுரம் செய் யப்பட்டு வருகிறது. இப்புத்தகத்தைப் படித்தவுடன் பிற நாட்டார் இந்தியரின் மனப்பான்மையைக் குறித்து எள்ளி நகையாடுவரென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இந்தியா வின் கலைகளையும், ஆத்மஞான முடிவுகளையும் நமது நாட் டுப் பெரியோர்கள் பலர் வெளிநாடுகளில் சென்று வெகு வாகப் பிரசித்தி செய்துவிட்டு வந்திருக்க, அத்தகைய மகா உன்னதமான மதக் கொள்கைகளை யுடைய இந்நாட்டில் மதத்தின்பேரால் மூடத்தனமாக அனுட்டிக்கப்படும் பல தீய ஒழுக்கங்களை "இந்தியமாதா" வில் காணும்போது மேல் நாட்டார் திகைத்துப்போவர் என்பதில் சந்தேக மில்லை இந்திய மாதாவைக் கண்ணுற்ற நம் நாட்டுச் சுதந் திர வீரர்கள் பல மேடைகளிலும் பத்திரிகைகளிலும் ஸ்ரீமதி மேயோவின் 'அடாத செய்கை' யைக் கண்டித்து, அவருக் கும் அவருடைய புத்தகத்துக்கும் அதிக விளம்பரங்கொடுத் ததை நேயர்கள் அறிவார்கள்.

மேயோ வென்னும் இம்மாது எந்த நோக்கத்தோடு இந்நாட்டுக்கு வந்தார்? அவர் இந்தியாவைப் பிறநாட்டார் முன்னிலையில் அவமானப்படுத்தும் எண்ணத்தோடு வந்திருக்கலாம். அவர், நம்மையாளும் அரசாங்கத்தாரின் வேவுகாரியாக இந்தியா சுயாஜ்யத்துக்கு லாயக்கில்லையென்று பிரசுரிக்கும் கெட்ட எண்ணத்தோடு இங்கு வந்திருக்கலாம். அவர் இந்தியரையும், இந்நாட்டையும் எந்நாளும் மீளாத படுகுழியில் ஆழ்த்திவிடும் எண்ணத்தோடு அலைந்து திரிபவராயிருக்கலாம். அவர் நமக்கு ஜன்ம சத்ருவாகவுமிருக்கலாம். ஆனால் அறிவும், முன்னேற்ற ஆர்வமும் படைத்த இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும கவனிக்கவேண்டிய ஒரு விஷயம் இங்குளது.

அதாவது, மேயோ கூறியுள்ள குறைகள் என்ன? அவை இந்நாட்டில் எங்கேனும் உளவா? இந்நாட்டில் மதக் கொள்கையோடு கூடிய அறியாமையால் மக்கள் அனுஷ்டித்துவரும் குறைகள் ஏதேனும் இவர் சொல்லாமல் விட்டுவிட்டாரா? அல்லது மிகைப்படக் கூறியிருந்தால் எந்த அளவில்? இவர் காட்டியிருக்கும் குற்றங்கள் நம் நாட்டில் எங்கேனுமிருந்தால் அவற்றைப் போக்கி நாட்டில் உண்மையான சீர் திருத்தம் செய்யவேண்டுவது அவசியமா இல்லையா? அவசியமாயின் சீர் திருத்தத்திற்கு தடையாகவுள்ள கொள்கைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்னென்ன விருக்கின்றன? அவைகளைப் போக்கவேண்டிய உபாயங்க ளென்ன? இன்னோரன்ன விஷயங்களையும் ஆராய்ந்தறிந்து வருங்காலத்திலேனும் நம்மைப் பிறநாட்டார் எள்ளி நகையாடாமலிருக்குமாறு நமது வீட்டை நாம் சீர் திருத்திக்கொள்வது நமக்கு இன்றியமையாத கடமை

யாகத் தோன்றவில்லையா? நம்மிடமுள்ள குறைகள் பலபிற நாட்டினரிடம் இருந்தும் அவர்கள் மேலான நிலையில் இருக்கும் ரகசியமென்ன? என்றிவ்வாறான உணர்ச்சியின் மேலீட்டால் மேயோவின் கூற்றுக்களை ஆராய்ந்தெழுத எண்ணங் கொண்டேன்.

இந்தியாவின் மானத்தையும், சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் இரட்சிக்க இந்தியருடைய இரத்தம் சிந்தியாகவேண்டுமென்றால், சுதந்தர மேடையில்—ஞானயக மேடையில் தம்மைத்தாமே வதைத்துக்கொள்ள ஆர்வத்துடன் காத்து நிற்கும் இளைஞர்களில் யானுமொருவன் எனச் சொல்லிவிட்டு, இச்சிறு நூலை வரையத் தொடங்குகின்றேன்.

உயிர்ப்பலி. அமெரிக்க மாதின் கண்களை முதன் முதல் உறுத்தியது கல்கத்தாவின் அருகிலுள்ள காளி கோவிலாகும். இந்தியாவின் ஆத்ம சக்தியையும், அபூர்வ ஞானத்தையும், அத்துவைத, துவைத மார்க்கங்களையும், வேதாந்தத்தின் பரந்த நோக்கத்தையும் அமெரிக்க மேடைகளில் பிரசங்க மாரி பொழிந்து வந்த சுவாமி விவேகானந்தருடைய ஆத்மஞான குருவாகிய சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சேவை புரிந்துவந்த கோவில், ஒரு காளி கோவிலாகும். "எனது குரு நாதர்" என்ற பிரசங்கத்தை அமெரிக்காவில் நிகழ்த்தியபோது சுவாமிகள் காளிகோவிலைப் பற்றி வெகுவாகப் பேசியுள்ளார். ஆதலின் காளி தேவியின் கோவில் உலகப் பிரசித்தி பெற்ற தொன்றாகும். இத்தகைய கோவிலுக்

ருள் ஸ்ரீமதி மேயோ அம்மையை அழைத்துச் சென்று, அங்குள்ள காளி தேவியின் கோர சொரூபத்தையும், இதர "சில்லரைச் சாமிகளையும்" காட்டிக் கொடுத்தது ஒரு வங்காளப் பார்ப்பனர். பார்ப்பன அகராதியில் மேல்நாட்டார் "மிலேச்சர்" என எழுதப்பட்டிருந்தும், இம் மிலேச்ச மாதை கோவிலுக்குள் இப்பிராமணர் எங்ஙனம் அழைத்துச் சென்றார்? சிதம்பரப் பார்ப்பனர் நந்தனரை தீக்குளிக்கச் செய்ததுபோல், இவ்வங்காளப் பார்ப்பனர் இம்மாதையும் கோயிலுட் புகுமுன்னர் தீக்குளிக்கச் செய்திருப்பாராகில் "இந்திய மாதா" வென்ற வசை புராணம் தோன்றியிராதல்லவா? நந்தனர் கதையைப்போல் மேயோவின் கதையை பாகவதர் காலட்சேப மல்லவா செய்திருப்பர்.

ஒரு பார்ப்பனக் குருக்கள் ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டதும், மற்றொரு பார்ப்பனர் அதை ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கினதும், இம்மாது அக்கோவிலில் கண்ணுற்ற ஒரு காட்சியாகும். இவ்விதமாக இந்தியாவெங்கும் உயிர்ப்பலிகள் சர்வ சாதாரணமாக நடக்கின்றதல்லவா? இதை யாரே மறுக்க வல்லவர்? "வேதமறியாத ஞானமில்லாத கீழ்மக்கள் இக்காரியம் செய்கின்றனர்" என ஒரு பார்ப்பனப் பண்டிதர் மறுப்புக் கூறினர். கல்கத்தா வினருகிலுள்ள காளி கோவிலில் இப்பலியிடுபவர் வேதமறிந்த, ஞான முதிர்ந்த பார்ப்பனக் குருக்கள் தானே? "பண்டைக் காலத்தில் பார்ப்பனர் யாகத்தில் பலி கொடுத்தனர். இவ்விருபதாம் நூற்றூண்டில் இல்லை" என மற்றொரு பண்டிதர் எழுதியுள்ளார். சென்ற சில மாதங்கட்கு முன்னே திருவான்மியூரிலும் கும்பகோணத்திலும் பல ஆடுகளைப் பலியிட்டுக் கொன்றவர்கள் இவ்வேதப் பார்ப்பனர்

கள் தானே! மிருகங்களைப் பலியிடுவதால் கடவுள் திருப்தி யடைந்து வேண்டிய வரங்களைக் கொடுப்பார் என்ற எண்ணம் "இந்துக்கள்" மனத்தில் ஊன்றிக் கிடக்கிறது. நீங்கள் ஜன சங்கைக் கணக்கில் 22 கோடி "இந்துக்கள்" இந்தியாவிலிருப்பதாகக் காட்டிக்கொள்கிறீர்களே! இந்த 22 கோடியில் பலிகொடாத இந்துக்கள் எத்தனைபேருளர்? ஒரு புறம் ஜீவகாருண்யப் பிரசங்கம், மற்றொரு புறம் கொலை. அதுவும் ஆண்டவன் பேரால், ஆண்டவனை திருப்தி செய்யுமாறு கொலை. இம்சையும், அஹிம்சையும் இரண்டும் "இந்து" மதத்தின் பேரால் நடக்கும்போது இதைக் கண்ணுற்ற மேயோ எள்ளி நகையாடாமல் பின் என் செய்வார்! மக்கள் மேம்பட வேண்டுமானால் இப்பலிக் காதாரமாயுள்ள உங்கள் வேதங்கள் பொசுக்கப்பட வேண்டுமல்லவா?

பிள்ளை வரம். வெட்டிய ஆட்டின் இரத்தத்தை பிள்ளை வரம் வேண்டி வந்த ஒரு மாது நாவினால் நக்கியதையும், மற்றொருத்தி இந்த ரத்தத்தை சேலையில் துவைத்தெடுத்து அப்புறம் சென்றதையும் மேயோ கூறியிருக்கிறார். இதில் என்ன பொய் இருக்கின்றது? பிள்ளை வரத்துக்காக "இந்துக்களால்" செய்யப்படும் கோரிக்கைகளையும், வேண்டுதல்களையும் அறிந்தவர்கட்கு, இந்த இரத்தத்தை நக்கிய சம்பவம் மிகவும் சாதாரணமாகவே தோன்றும். கோயமுத்தூர் ஜில்லாவில் காரமடையென்ற ஊரில், ரங்கநாதர் கோவில் முன்னிலையில், மாசிமாதத்தில் நீங்கள் சென்று பாருங்கள். தாசர்கள் ஆடவும், அவர்கள் வாயில் வாழைப்பழத்தை பக்தர்கள் நுழைக்கவும்,

அவர்கள் அதை தங்கள் ஊத்தை வாயில் மெல்லவும், பிள்ளைவரம் வேண்டும் பெண்பணிகள் தங்கள் "முந்தானையை" யேந்தவும், அதில் தாசர் தம் வாயிலுள்ளதைத் துப்பவும் அம்மாதர் அதை எடுத்துக் "சுடுக்கென்று" விழுங்குவதும் காண்பீர்கள். சேலம் ஜில்லாவில் மற்றொரு உற்சவகாலத்தில் மிகவும் ஆபாசமான. சொல்லத்தரமற்ற வேண்டுதலுமுண்டு. ஒரு முறை இரண்டு முறையென வேண்டிக்கொண்டு, சில குறிப்பிட்ட ஆபாசமான விக்ரகங்களுடன் பெண்கள் கூடுகின்றார்கள். சில சமயங்களில் மறைவான பச்சைப்பந்தலடியில் உயிருள்ள விக்ரகங்களுக்கும் இப் "பூசை" நடப்பதுண்டு.

இதே சேலம் ஜில்லாவில் பிள்ளைகளை கொல்லுவதற்கும் ஒரு சாமியுண்டு. யாராவது ஒருவர் சாகவேண்டுமானால் இக்கோவிலில் உயிரோடு ஒரு ஆடோ, கோழியோ, தலைகீழாக தொங்கவிடப்பட்டு, அதுசெத்து, நாறிப்புழுத்து விழவைப்பார்கள். இவ்வளவும் இந்து பதர்ந்த கிரீடமாக அணிந்துள்ள மக்களின் மூடப் பழக்கங்களாகும். இப் பழக்க வழக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது உங்கள் கோவில்களும், சுவாமிகளுமாகும். மக்கள் மனம் தூய்மை பெற்று வாழவேண்டுமானால் இத்தகைய சுவாமிகளையும், கோவில்களையும் ஜர்மன் பீரங்கிகளால் தகர்த்தெறிய வேண்டாமா?

தீர்த்த விசேடம்

காளிகோவிலில் மேயோவெனும் மாது கண்ட மற்றொரு காட்சி யென்னவெனில், காளிக்கு அபிஷேகமாகும் ஜலமும், மற்றதும் சாக்கடைவழியாக வெளியில் வந்து தொட்

டியில் விழுந்து, புழுத்து நாறியிருக்கும் ஜல-திட பதார்த் தத்தை மக்கள் தீர்த்தம் தீர்த்தமென்று அள்ளி குடித்த தாகும். இதுவென்ன பொய்யா? சாமியின்பேரால் இவ் வித விஷக்கிருமிகளும், மற்றதும் நிறைந்த சாக்கடை நீரை தலையில் தெளித்துக் கொள்வதிலும், கண்களைக் கழுவிக் கொள்வதிலும் குடிப்பதிலும் நமது மனம் லஜ்ஜை கொள்வ தில்லையே. என்னே நமது மதப்பற்று! சுத்த ஜலமும், சுத்த ஆகாரமும் சாப்பிடும் சைவமக்கள் இப்புழுத்த மலத்தை நாடோறும் சிவ க்ஷேத்திரங்களில் பருகுகின்றனரா இல் லையா! இதைச் சாப்பிட வைக்கும் 'மதத்தை' வெட்டிப் புதைக்க வேண்டுவது அவசியமென உங்களுக்குத் தோன்ற வில்லையா? இதைச் சாப்பிடுவது மதசம்மத மல்லவாயின் நாளையத்தினமே இவ்வழுக்கு கோவில் தொட்டிகளில் தேங்க வொட்டாமல் வெளிப்படுத்துங்கள். "இது தீர்த்த மல்ல அழுக்கு: இதைத் தொடுவது சுகக்கேடாகும்" என்று விளம்பர மெழுதி யொட்டி மக்களின் மனதைத் திருப்ப முயற்சியுங்கள். இல்லையேல் அவ்வழுக்கு நீரைப்போல் உங்கள் சாமியும், கோவிலும் விரைவில் அழுகிப் புழுத்து விடும்.

குப்பைக்காரி. உலகத்தின் பல பாகங்களையும் சுற்றி, பற் பல தேயத்தினரும் வாழும் முறையை நேரில் கண்டறிந்து, அறிவு வளர்ச்சி பெறும் நோக்கத்துடனே இவ்வமெரிக்க மாது இந்தியாவுக் கும் போந்ததாகக் கூறுகின்றனர். இவர் இந்தியாவில் பல முக்கிய விடங்களையும் பார்த்தார். உத்தியோகஸ்தர்கள், வைத்தியர்கள், தனவந்தர்கள், ஏழைகள், ஆசிரியர்கள்,

பிரமுகர்கள், இளவரசர்கள், ராஜீய வாதிகள், ராஜாங்க நிர்வாகிகள், மதத் தலைவர்கள் ஆகியவர்களிடம் சென்று சம்பாஷித்து விஷயங்களறிந்திருக்கிறார். கல்விச் சாலைகள், வைத்திய சாலைகள், தொழிற் சாலைகள், தனவந்தர் வீடுகள், கிராமங்கள், சட்ட சபைகள் முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு நிகழ்வனவற்றையும் நேரிற் கண்டார்.

இந்தியாவின் கலைகளையும், காவியங்களையும், ஓவியங்களையும், சிற்பம், சித்திரம் ஆகியவற்றையும், ஆத்மஞான வளர்ச்சி, மதமாகிய வற்றையும் பற்றி இம்மாது எடுத்துக் கூறாமல், இங்கு மக்களிடையே காணப்பெறும், சோம்பல், அறிவீனம், மூட நம்பிக்கை, நோய், சுகாதாரமின்மை ஆகிய கொடியவற்றையே பிரஸ்தாபித்திருக்கிறார். இதனால் இவ்வம்மையை 'குப்பைக்காரி' யென்றும், 'பன்றை' யென்றும், 'சாக்கடை இன்ஸ்பெக்டர்' என்றும் பலர் பல விதமாகக் கடிந்து கொண்டனர். ஆதலால் இங்ஙனம் கடிந்தவர் குப்பைக்காரி யுடையவும், பன்றை யுடையவும், சாக்கடைவாரி புடையவும் அரிய சேவையைப் புகழ்ந்தார்களில்லை. குப்பைக்காரியால் உங்கள் குப்பைகளைக் கூட்டிப் புறக்கி அப்புறப்படுத்த சமயம் பெற்றீர்கள். பன்றையால் உங்கள் கசடுகளைப் போக்கிக்கொள்ள இதோ தருணம் வாய்த்திருக்கிறது. சாக்கடை நாற்றம் அறிந்த பின்னர் அதைக் கழுவிக்கொள்ள இதோ உங்களுக்கு ஏற்ற சந்தர்ப்பத்தை இவ்வமெரிக்க மாது அளித்திருக்கிறார். அவர் மீது சீறி விழுந்து, ஓங்காரமிட்ட வீரர்காள்! எழுந்து நின்று பாருங்கள். மேயோ கூட்டித் திரட்டிக் குவித்திருக்கும் குப்பை கூளங்கள் உங்களுக்குச் சொந்தமானவை. அவற்றைக் கொளுத்தி யெறிந்து பிறநாட்டார் முன்னிலை

யில் உங்கள் மானமற்ற தன்மையைப் போக்க முயலுங்கள். இல்லையேல் அக்குப்பையோடு குப்பையாய் உங்கள் நாடும் நீங்களும் செல்வீர்களென்பது திண்ணம்.

உங்கள் மதங்களையும் காவியங்களையும் மேயோ எடுத்துரைக்காத குறையை நீக்கும் பொருட்டு உங்கள் சரோஜினி தேவியை மேல்நாடு சென்று உங்கள் 'மதத் தன்மையை' பிரசாரம் செய்ய அனுப்பியுள்ளீர்கள். இப்பிரசாரத்தால் நீங்கள் அடையவுள்ள பலன் தூசியளவு மில்லை. ஏனெனில், இறந்த காலத்தில் அத்தகைய, காதுக்கும் மனதுக்கும் இனிய பிரசாரங்கள் வேண்டாத அளவு செய்து சலித்துப் போய்விட்டோம். ஆதலால் உங்கள் தேவிகள் இந்தியாவின் மூலை முடுக்குகள் சென்று மூடப்பிசாசு, சாதிப்பிசாசு, சமயப்பிசாசு, சாமிப்பிசாசு, கோவில் பிசாசு, தாசிப் பிசாசு, ஆகிய பைசாசங்களை விரட்டுவார்களானால் அதுவே உங்களுக்குப் பலனைத் தரும். உங்கள் ஏடுகளில் உங்கள் மதத்தன்மை எப்படி அச்சிடப்பட்டிருந்தால் தான் என்ன? அவற்றைக் குறித்து நீங்கள் வானளவாகப் பெருமையுடன் பேசிக்கொண்டிருப்பதில் பயனென்ன? உங்களுடைய நித்ய வாழ்க்கையில், நீங்கள் உங்கள் அண்டை வீட்டுக்காரனோடு நடந்துகொள்ளும் பாவனையில் அல்லவா உங்கள் உண்மையான மதத்தன்மை பிரகாசிக்கிறது. பிரத்யக்ஷக் காட்சியல்லவா மதத்துக்கும் கலைக்கும் சாட்சியங்களாகும்.

வெறும் பேச்சு. ஹே! வெறும் பேச்சுப் பேசும் வீணர்களே! மேயோ கூறுவதைக் கூர்ந்து கவனியுங்கள்.

"உதாரணமாக பன்னிரண்டு வயதுள்ள ஒரு இந்தியச் சிறுமியை எடுத்துக் கொள்ளுவோம். உடம்பில் எலும்பும் தோலும் தவிர வேறொன்றுமில்லை. அச்சிறுமியோ கல்வி பயிலாதவள், அறிவைப் பெறாதவள், தேக சௌக்கியத்தை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்பதை எவரும் அச்சிறுமிக்குக் கற்பிக்கவில்லை. இந்நிலைமையில், அவள் ஒரு குழந்தையைப் பெற்று விடுகிறாள். இத்துணை திடகாத்திரமுள்ள ஒரு சிறுமிக்குப் பிறக்கும் குழந்தை எந்நிலையிலிருக்குமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். அக்குழந்தையை தேகப்பயிற்சி செய்ய விடுவதில்லை. சுத்தமான காற்று வசதியுள்ள இடத்தில் தூங்கச் செய்வதில்லை அக்குழந்தை பால்யப் பருவமடைகிறான். அப்பொழுதும் அவனுடைய தேக சௌக்கியத்தைக் கவலையுடன் கவனிப்பவர் எவருமில்லை. ஆகவே அவனுக்கு முப்பது வயது ஆனவுடன் உடல் மெலிந்து அங்கம் தளர்ந்து ஆண்மை இழந்து வாடி நிற்கிறான்."

ஆனால் ராஜீய வாதிகள், மேடைப் பிரசங்கிகள், தேசத் தலைவர்கள், மதத் தலைவர்கள், மதாச்சாரியார்கள் இன்றைய தினம் இக்கொடுமையான நிலையை மாற்ற எத்தனித்து சட்ட சபை விசாரணையில் நிற்கும் இளம் வயது விவாக விலக்கு மசோதாவுக்கு எத்துணை எதிரிடையாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். மக்கள் நலங் கருதி சமூக சீர்திருத்த விஷயமாக எதாவதொரு சட்டமியற்றுங்கால் இம்மத ஓநாய்கள் எத்துணை ஊளையிடுகின்றன. மதம் போய்விடுமே! மதத்தில் தலையிடலாமா? விக்டோரியா மஹாராணி சொல்லை மீறலாமா? என்பதல்லவோ பேச்சு. ஹே! வைதிகப் பிடுங்கல்களே! உங்கள் மதம் என்று

ஆணவம் போகத்தான் செய்யும்; மதத்தின்போரால் நடைபெறும் உங்கள் வயிற்றுப் பிழைப்பு குன்றத்தான் செய்யும் காலத்தோடு ஒட்டியொழுகத் தயங்குவீர்களாயின் எம் மதத்தைக் காக்க முயலுகிறீர்களோ அம் 'மதமே' உங்களை அழித்துவிடுமென்பது திண்ணம். கிறிஸ்தவ மதப்பெருக்கே உங்கள் மதம் குன்றுதற்குச் சான்றாகும். சுயமரியாதைக் கிளர்ச்சியே உங்கள் மதத்தின் எமனாகும்!

சிற்றின்பம்.

இத்தலைப்பின்கீழ் மேயோ கூறுவது:— "இந்தியருடைய வறுமைக்கும், அறியாமைக்கும், கல்விக் குறைவிற்கும், தைரியமின்மைக்கும், அடிமைப் புத்திக்கும் காரணம் அவர்கள் அதிகமாகச் சிற்றின்பத்தில் உழன்று கிடப்பதுதான்."

சதாசர்வ காலமும் தாசி வேசிகளுடைய இல்லத்தில் உழன்று திரியும் புருடர்களைக் குறித்து இவை கூறப்பட்டதன்று. இந்தியாவில் "புலபுலெனப் புதல்வர்களைப் பெற்று காப்பதற்கு வகையுமின்றி கைவிடவும் மனமுமின்றி ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப்போல அகப்பட்டு" விழிக்கும் கோடிக்கணக்கான 'குசேலர்' களைக் குறித்தே இவை கூறப்பட்டவையாகும். குசேலர் ஒரு பெரிய பார்ப்பன முனிவர், சாஸ்திர வல்லவர், பக்தியி லுயர்ந்தவர். இவரே தமது சிற்றின்ப இச்சையை அடக்காமல் இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்று காக்கச் சக்தியற்று கடவுளிடம் சென்று தாம் பிள்ளைகள்பெற்ற சாமர்த்தியத்தைச் சொல்லி பரிசு பெற்றார் என்றால் இவர் சந்ததியிலுதித்த நீங்கள் வேறு எவ்விதமாய் இருக்கக் கூடும்? குசேலர் பெரிய பக்திமானு

யிருந்தும், எவ்வளவு சிற்றின்பப் பிரியராயிருந்தார் என்பதை அவருடைய இருபத்தேழு குழவிகள் சாட்சி கூறவில்லையா!

மற்றும் நீங்கள் சிற்றின்பப் பிரியர்களென்பதற்கு உங்கள் நாட்டில் எத்தனை சாட்சிகள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்! உங்கள் வீடுகளில் நீங்கள் அழகாகத் தொங்கவிட்டிருக்கும் கிருஷ்ணன் சேலை திருடிய படங்கள், உங்கள் தேர்களில் செதுக்கப்பட்டிருக்கும் விசித்திர பொம்மைகள், உங்கள் கோயில்களில் செதுக்கப்பட்டிருக்கும் நிர்வாண விக்கிரகங்கள் ஆகிய இவைகளெல்லாம் சாட்சிகளல்லவா? ஏன் உங்கள் 'உயிருள்ள பொம்மைகள்' கோயிலில் நடனமாடுதல் மற்றொரு சாக்ஷியன்றோ! மனிதரோடு மனிதப் புணர்ச்சி போதாதென்று மனிதரோடு மிருகப்புணர்ச்சியுமுண்டெனக் காட்ட எத்தனை தூரம் உங்கள் சிற்பிகள் பாடுபட்டுத் தேரிழைத்திருக்கிறார்கள்? மற்றும் உங்கள் சாமிகள் நாடோறும் பள்ளி அறைக்குச் செல்லுவதை என்னவென்று கூறுவது?

மேலும் உங்கள் நாட்டுப் பத்திரிகைகளிலும் சுவர்களிலும் டிராம் வண்டிகளிலும் விளம்பரம் செய்யப்படும் "ஆதங்க நிக்ரஹ மாத்திரை" இன்னும் இதுபோன்ற கணக்கற்ற "மன்மத சிந்தாமணி லேகியங்கள்" "ஸ்தம்பன மெழுகுகள்" "வீரிய விர்த்தி லேகியங்கள்" முதலியவைகள் நிரூபிக்கும் விஷயமென்ன? "பத்துலட்சம்பேர் வாங்கியுண்டு நரம்புத் தளர்ச்சி நீங்கப்பெற்றார்கள்" என்பதும் "மேக வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து" என்பதுமல்லவோ ஒவ்வொரு விளம்பரமும் கூறுகின்றது. பல் தேய்க்காத ஊரில் பற்பொடி விற்பவன் இருக்கமாட்டான் என்பதுபோல சிற்றின்பவாய்ப்பட்டு உழலும் மாந்தரில்லாத நக

ரங்களில் இத்தனை விளம்பரங்கள் செய்யப்படுவானேன்? இதைப் போக்க நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

பிள்ளைப் பித்து. ஒரு வீட்டில் ஒரு குழந்தை பிறந்தவுடன் தாயாருக்கு உதிக்கும் கவலையென்ன? சீக்கிரம் பெயர் வைக்க வேண்டும், முடியெடுக்க வேண்டும், காது குத்தவேண்டும், கல்யாணம் செய்யவேண்டும், சாந்திக் கல்யாணம் செய்யவேண்டும், பேத்தெடுக்க வேண்டும், பிதிரெடுக்க வேண்டும் என்பவைகளேயாகும். இதைவிடச் சத்தியமாய் வேறு எண்ணம் கிடையாது. "என்ன பாட்டி சௌக்கியமா" என்றால் உடனே அக்கிழவி சொல்வதென்ன? "என்னமோவப்பா எனக்கென்ன சௌக்கியம், காலமெல்லாம் சென்றுவிட்டது, எனது பேத்தி லட்சுமிக்கு சட்டென்று ஒரு குழந்தை பிறந்தால் அதைக் கண்ணாரப் பார்த்துவிட்டு சாகவேண்டும் என்ற ஒரே ஆசைதானிருக்கிறது" என்பாள். இல்லையேல் "பேரப்பிள்ளைக்கு நான் சாகுமுன்பே கல்யாணம் செய்து பார்க்கவேண்டும்" என்பாள். பிள்ளையென்ற சனியன் உங்கள் பிதிர்லோகத்தையும் விடவில்லையே! சதா சர்வ காலமும் உங்கள் வீடுகளில் பிள்ளைப்பாட்டுத்தான். பிள்ளை! பிள்ளை!! பிள்ளை!!! சாகப்போகும் கிழவனும் ஒரு குமரியைக் கட்டி பிள்ளை பெற ஆசைப்படுகிறான். என்னைப்போல் பிள்ளை பெறாத "பாவிகளை" காண்பவர்களெல்லாம் முதலில் போடும் கேள்விதானென்ன? "என்னப்பா! இன்னும் குழந்தையொன்றும் இல்லையோ" என்பதுவேயாகும்.

இக்கட்டுக்கடங்காத பிள்ளை மோகத்தால் நீங்கள் சதா கணக்கற்ற பிள்ளை பெற்றிடும் இயந்திரங்களாக மாறி உணர்

வற்று, உயிரற்று, சோம்பலுற்று, ஆண்மையற்று இருக்கிறீர்கள் என்பதில் என்ன அதிசயமிருக்கிறது! இந்நிலைமை மாற வேண்டுமானால் விவாக வயது உயர்த்தப்படவேண்டும். சந்தானமில்லாத புருடன் இறந்தால் அவன் சொத்துக்கள் மனைவியைச் சேரச் சட்டமியற்றவேண்டும், ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்தில் சம பாகம் வழங்கப்படல் வேண்டும், அப்போதுதான் இப்பிள்ளைப் பித்துக் குறையும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை எவனுமே அப்போது கொள்ளமாட்டான்.

விபசாரம். என்ற தலைப்பின்கீழ் இவ்வமரிக்க மாது கூறுவதின் சாரமாவது:—"இந்தியாவில் சில பாகங்களில், முக்கியமாக சென்னை மாகாணத்திலும், ஒரிசா பிரதேசங்களிலுமுள்ள இந்துக்கள் ஏதோ சில தேவதைகளை திருப்திபடுத்தும்பொருட்டு தங்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளிலொன்றை கோயிலுக்கு "கடவுளின் பொருட்டு கொடுத்துவிடுகிறோம்" என ஒரு பிரார்த்தனை செய்துகொள்வதுண்டு. இக்குழந்தைகளுக்கு நாட்டியமும் சங்கீதமும் கற்பிக்கப்படுகிறது. இவர்கள் பூஜா காலங்களில் கோயிலில் நாட்டியமாடுவார்கள். கோயிலைச் சுற்றிலுமுள்ள தெருக்களில் வசிப்பார்கள். குருக்களுடனும் இதர பக்தர்களுடனும் சுகிப்பார்கள். இவ்வாறு கடவுள் வியபிசாரம் செய்யும் பெண்கள் சேர்ந்து "தேவதாசிகள்" என்ற சமூகமாய்விட்டது."

இதில் தேவதாசிகள் உற்பத்தி வரலாறு இவ்விதமல்ல. "அவர்கள் இந்திரனுக்குப் பிறந்தவர்கள்; பிரம்மாவுக்குப் பிறந்தவர்கள்; சுப்பிரமணியனுக்குப் பிறந்தவர்கள்" என்

றிவ்வாறாக ஏதேனுமொன்றை உங்கள் குலப்புராணங்கள் கூறலாகும். அதைப்பற்றி எமக்குக் கவலையில்லை. இவ்விதமான ஒரு சமூகம் உங்கள் மதத்தின் பெயரால் தற்போது நிலைபெற்றிருக்கின்றதல்லவா? லட்சக்கணக்கான பெண்கள், மேக ரோகக் களஞ்சியங்களாக, பொட்டிட்டு மினுக்கி வர்ணச் சேலையுடுத்தி சலங்கை கட்டி, உங்கள் தெய்வீகத் தன்மை பொருந்திய பஞ்சம சகோதரர் செல்லவொண்ணாத நாடார் பெருமக்கள் அணுகவொண்ணாத, ஈழவப் பெருங்குடி மக்கள் எட்டவொண்ணாத, பக்தி பொழியும் மூர்த்திகள் முன்பு நடனமாடி, நல்லிளஞ் சிங்கங்களைத் தம் வயப்படுத்தி மேகரோகந் தந்து, அவர்தம் வாணாளை வீணாக்கி அவர் உடலில் ஊறிய ரோகத்தை அவர் தம் இல்லாளுக்கும் உடலிலேற்றி, உங்களாண்டவன் பெயரால் அல்லல்படுவதை நீங்கள் அறியீர்களா? இதையெடுத்துச் சுட்டிக்காட்டி உங்கள் தெய்வங்களை நாணமுறச் செய்த ஸ்ரீமதி மேயோவுக்கு ஒரு பொன் சிலை நாட்டினும் தகுமோ தகாதோ கூறுங்கள்!

பொட்டுக்கட்டும் வழக்கத்தை நிறுத்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் மசோதா கொண்டுவந்தவுடன் உங்கள் சாமிகள் கூத்தாடவில்லையா? உங்கள் சாஸ்திரிகள் ஓலமிடவில்லையா? உங்கள் மூர்த்திகள் ஊளையிடவில்லையா? "இன்று தேவதாசிகளின் திருப்பணி வேண்டாமென்பீர், நாளை அர்ச்சகர் ஆகாதென முயலுவீர். ஆதலால் நாங்கள் எவ்விதமான மத சீர்திருத்தத்திற்கும் சம்மதியோம்" எனக் கூறவில்லையா உங்கள் சண்டாளப் பார்ப்பனத் தரகர்கள்! செங்கான் பஜார்த் தாசிகளை வயப்படுத்தி உங்கள் காங்கிரஸ் தலைவர்களான மைலாப்பூர் பார்ப்பனர்கள் தாசிகள் கைச்சாத்திட்ட விளம்பரங்களில் முத்துலட்சுமித் தாயா

ரின் மசோதாவைத் தாக்கவில்லையா? நண்பர்களே யோசியுங்கள்! இந்திய வியபிசாரத்தைப்பற்றிப் பறை சாற்றிய மிஸ் மேயோவைத் தூற்றினீர்களே! கடவுளின் பேரால் மதத்தின்பேரால் வீழ்ந்து கிடக்கும் சோதரிகளை மீட்கும் முயற்சியில் எதிர் நின்று போராடும் இப் பார்ப்பனத் தாசர்களை என்செய்வது? கூறுங்கள்!

“அமெரிக்காவை விடவா இங்கு வியபசாரம்! பிக்காடலி பார்க்கில் இல்லாத ஊழல்களா இங்கே? நாங்கள் அடக்கமாக வீட்டினுள்ளே வியபசாரம் செய்கிறோம், உங்களைப் போல தெருக்களிலும் சாலையோரங்களிலும், நந்தவனங்களிலும் அலைந்து திரிவதில்லையே” என்றார் நம் நாட்டு வீரசிகாமணியொருவர். இவர் கூறியது மேயோவுக்கு ஏற்ற பதிலென்று பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் எழுதின.

எங்குமில்லா வியபசாரம்.

ஆனால் எந்நாட்டிலும் இராத நவீன வியபசாரம் ஒன்று இந்தியாவின் சில பாகங்களில் உள்ளதாக மேயோ கூறியிருக்கிறார். அதாவது பையன்களை வாலிபர்கள் புணர்வதாகும். அது இல்லவே இல்லையென ஒருவர் “சவுக்கடி” அடித்தார். வடநாட்டின் பழக்கம் எனக்குச் சரியாகத் தெரியாது; ஆனால் வடநாட்டில் இது நிகழ்வதாக மேயோ கூறியிருக்கிறார். இவ்வமரிக்க மாதை யான் கண்டிருப்பேனாயின் இன்னுமோர் பெரிய பாரதம் எழுதச் செய்திருப்பேன். இச் “சவுக்கடி” அடித்தவராவது என்னோடு மலையாளத்திற்குப் புறப்படட்டும். பையன்கள் வாலிபர்களுடைய மோக தாகத்தை எவ்வளவு எளிதாகத் தீர்த்து

விடுகிறார்கள் என்பதை இவர் கண்ணாரப் பார்க்கலாம். "எந்தா முதலாளி ஒரு முக்கால் தாட்டே" என்பான் ஒரு சிறிய பையன் உமது வீட்டு வாயிலின் முன்பு வந்து. உடனே முதலாளி அப்பையனை வீட்டினுள் அழைத்துச் சென்று அப்பையனின் சோறு தின்னும் வாயை—தண்ணீர் குடிக்கும் வாயை—கடவுளை வழுத்தும் வாயை, கவி பாடும் வாயை—மனேவெழுச்சிகளையும் அறிவின் ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் வாயை பெண்ணின் மர்மஸ்தானமாகப் பயன்படுத்திக்கொள்வார். இவ்வளவு பச்சை கொச்சையாக எழுதாமல் தீராது. இதை நீங்கள் பரீட்சித்துப் பாருங்கள். யான் பார்த்த பின்பே இதை எழுதுகிறேன். ஆனல் நான் முற்கூறிய முதலாளியைப்போல் அனுபவிக்கவில்லை. அவ்வழக்கம் தமிழ் நாட்டில் இல்லாத காரணத்தால்தான் எனது மனமொப்பவில்லை. யானும் மலையாளத்தில் பிறந்து வளர்ந்திருப்பேனயின் அது சர்வ சாதாரணமாகவே எனக்குத் தோன்றியிருக்கும்.

திருவனந்தபுரம் ஜெயிலில் ஒரு புதுக் கைதி வந்தான். ஆனல் அவன் கருப்புத் தொப்பிக்காரன். அவன் நானிருந்த அறையின் பக்கத்தறையில் எழு தினங்களிருந்தான். அவன் வந்த மறுதினமே கைதிகளிற் சிலர் அவனுக்கு ஒருவன் எண்ணை கொடுப்பதும், ஒருவன் ரொட்டி கொடுப்பதும், ஒருவன் காபி கொடுப்பதும், ஒருவன் முறுக்கான் கொடுப்பதும், ஒருவன் பீடி கொடுப்பதுமாக அடிக்கடி வந்து அவனை உபசரித்தார்கள். எனக்கே ஒரு அதிசயமாயிற்று. அப்பையனை மெள்ளக் கூப்பிட்டு சந்தோஷமாக சில நேரம் வார்த்தையாடியபின்னர் "உன்னையேன் இவ்வளவு பேர் பேசிக்கிறார்கள்?" என்று கேட்டேன். அதற்கவன் "நான்

இந்த ஜெயிலில் முன்பு பலதடவை இருந்திருக்கிறேன், ஆத லால் அவர்கள் எனக்குச் சினேகமானவர்கள்" என்றான். "இருந்தால் என்ன? எத்தனையோ பேர் அவ்விதம் பழகி யிருக்க உன்மீதுமட்டும் அவர்களுக்கு அதிக வாஞ்சை ஏற் படுவானேன்?" என்று கேட்டேன். உடனே அவன் அந் தப்பக்கமும் இந்தப் பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு என்னை நோக்கி தனது வாயில் ஒரு விரலை வைத்தாட்டிக் கொண்டு "நான் இந்த வேலையில் "முடுக்கன்" ஆதலால்தான் அவர்கள் என்னைத் தேடி வருவது" என்றான். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை: வார்டரைக் கூப்பிட்டு விபரமாகக் கேட்டேன். அவன் விபரப்படுத்தியதும் திகைத்துப்போ னேன். இதை மறுநாள் ஜெயிலரிடமும் கேட்டேன். அவ ரும் நகைத்தார். விடுதலையடைந்தபின்பு "சென்ட்ரல் ஜெயி லில் துர் அவஸ்த" என்ற தலைப்பிட்டு சமதர்சினி என்ற மலை யாள பத்திரிகையில் இதைப்பற்றி எழுதினேன். எவரும் மறுக்கவில்லை. இது மலையாள நாடெங்கும் நாடோறும் நடை பெறும் ஒரு "சிக்கன போக முறை!" "நோயில்லை, தொடி யில்லை, காலணாச் செலவில் மிருக இச்சை தீர்ந்துவிடும்" என்கிறார்கள். மலையாளத்தில் நடைபெறும் கணக்கற்ற சிக்கன முறைகளில் இதுவுமொன்று.

எப்பவோ ஒரு காலத்தில் பஞ்சபாண்டவர் இருந்தார் கள். அவர்கள் ஐவரும் ஒரு மனைவியுடன் சுகித்தார்கள். அம்மாது சிரோமணி "பதிவிரதை"ப் பட்டம் கொண்ட வர். இது மகா பாரதக் கதை. ஒருவர் நம்பலாம், மற்றொரு வர் மறுக்கலாம், ஆனால் நமதுசவுக்கடிப் பார்ப்பனர் இன்று மலையாளம் சென்று பார்க்கட்டும். அங்கு கணக்கற்ற பஞ்ச பாண்டவர்கள் துரோபதை போன்ற மனைவியுடன் வாழ்

கிறார்கள், இது மலையாளத்துச் சிக்கனம். கல்யாணச் செலவு ஒன்றே. குடும்பப் பெருக்கு இல்லை, செலவுமில்லை.'' இந்தச் சிக்கன வாழ்வு மேயோவுக்குத் தெரியாது. ஆனால் இதற்கு உங்கள் பாழான மதமும், புராணக் குப்பையும் இடந்தரு கிறது. உதாரணமாகப் பின் வருபவர்களின் பிறப்பு வர லாற்றை ஆராய்ந்தால் இனிது விளங்கும்.

வியபசார உற்பவம். வியபசாரத்தை பிர்மாவே சிருஷ்டித்து விட்டதாக மனு கூறிவிட்டார். பெண்களை பிரமா சிருஷ்டிக்கும்போதே வியபசார தோஷத்துடன் பிறப்பித்துவிட்டாராம். ஆணைப் பிறந்த ஒவ்வொருவனும், தனது தாய் மனதினுலாவது பாபுருஷரை இச்சித்திருப்பாள் என முடிவு செய்து அதற்கான பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ள வேண்டுமென்பது மனுவுடைய ஆக்ஞையாகும். இந்த விபசார உற்பவத்தை அமெரிக்க மாதுக்கு யாரும் எடுத்துக் கூறுததுபற்றி யான் மெத்தவும் வருந்துகிறேன். இந்தியாவின் வேதங்களையும், சாஸ்திரங்களையும், புராணக் குப்பைகளையும் மேயோ எனும் மாது கிளராமற்போனது தம்பிரான் செய்த புண்ணியமாகும்.

வேதவியாசர்—வேதத்தை வகுத்தவர்—விபசாரத்தால் பிறந்தவர். அதாவது பாரசர் சத்யவதி என்னும் செம்படவப் பெண்ணைக் கூடியதன் பயனாக வியாசர் பிறந்தார். சத்யவதியோ சந்தனுவுக்கு வாழ்க்கைப்பட்டவள். இவளோடு பாரசரன் விபசாரம் செய்தான். இவ்விபசாரத்தால் பிறந்த குழந்தை விநாயகரைக்கொண்டு பாரதமெழுதினான்.

வடமொழி வேதக்காரன் சங்கதி இப்படியிருக்க தென்மொழி வேதக்காரனை அகத்தியனும் விபசாரத்தால் பிறந்தவனே, அதுவும் இரண்டுபேருடைய இந்திரியத்தால் குடத்தினின்றும் கிளம்பியவன். அதாவது ஊர்வசியை மித்திரனும் வருணனும் கண்டார்கள். கண்டதும் மோகங் கொண்டார்கள். ஊர்வசி என்ன சொன்னளோ தெரியவில்லை. இருவரும் தங்கள் இந்திரியத்தை குடத்தில் விட்டார்கள். அதிலிருந்து தோன்றிய குடமுனியே தமிழுக்கு இலக்கணம் செய்தவர்.

அமராவதிக்கு அதிபதியான தேவேந்திரன், கௌதமர் மனைவியாகிய அகல்யாவை வஞ்சித்துக் கூடிச் சென்றான்.

சூரபன்மன் தங்கையாகிய அஜமுகி விபசாரத்தால் பிறந்தவள்.

சாரகுமாரன் திலோத்தமைக்கும் அநாகுலன் என்ற பாண்டியனுக்கும் பிறந்தவன்.

விசித்திர வீரியனுடைய விதவைகளாகிய அம்பிகை, அம்பாலிகையோடு வியாசன் கூடி திருதாஷ்டிரன் பாண்டு ஆகியவர் பிறந்தனர்.

உக்கிரசேனன் மனைவிக்கும் காட்டில் திரிந்த ஓரக்கனுக்கும் கம்சன் பிறந்தான்.

சூரியனுக்கும், கன்னியாயிருந்த குந்திக்கும் பிறந்தவன் கர்ணன் என்ற கொடையாளி.

விசுவாமித்திரன் மேனகையிடத்துக் கூடி சகுந்தலையைப் பெற்றான்.

பட்டினத்தடிகள் எருக்கிலையில் விட்ட விந்தை விழுங்கிய ஒரு விபசாரி, அருணகிரி நாதர் என்ற "பெண் வசைப் புகழ்" பாடியவனைப் பெற்றாள்.

இம்மாதிரி கோடான கோடி "ஒட்டு மாங்கன்றுகள்" உங்கள் வேதங்களிலும் இதிகாசங்களிலும், புராணக்குப்பைகளிலும் நிரம்பிக் கிடக்கின்றன. இவர்களைப்பற்றி எழுதவதென்றால் ஆயிரம்பக்கங்கொண்ட அபிதானகோச மாகி விடும். இவர்களே உங்கள் வேதாச்சாரிகள், சமயாசாரிகள், அவதாரங்கள், சத்யதரிசிகள், ஞானிகள் ஆவர். இவர்கள் செய்தது விபசாரம்!

தேவர்கள் தேவலோகத்தில் விபசாரத்துக்கென கந்தர்வ மாதர்களை கணக்கின்றி வைத்திருக்கின்றனர். தேவர்களால் இம்மாதர்கள் பூலோகத்துக்கும் அனுப்பப்பட்டு பற்பல காலங்களில் பிரஜா உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது.

இதுவெல்லாம் மேயோவுக்குத் தெரியாது. தெரிந்திருப்பின் இன்னும் மானக்கேடாகவே இருந்திருக்கும்.

ஆனால், இதில் உள்ள வேடிக்கை யென்னவென்று நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விபசாரம் என்பது பெண்களுக்கு மட்டும் தனிப்பட்ட சொத்தா? பெண்களே தனிமையாக விபசாரம் செய்ததாக எங்கேனும் அத்தாட்சியுண்டா? பெண்ணுடன் ஆணும் சம்பந்தப்பட்டால் தானே விபசாரம் ஏற்படுகிறது? விபசாரத்துக்குக் காரண பூதமாய் நிற்பவன் ஆணா பெண்ணா? ஆணில்லாமல் பெண், பிள்ளை பெற்றதுண்டா? பெண்ணில்லாமலே, குடத்திலும், குதிரையிலும், மீனிலும், தூணிலும் ஆண்கள் சம்பந்தப்

பட்டதாக உங்கள் இதிகாசங்களும், புராணங்களும் கூறு கின்றனவே! அப்படியிருக்க பெண் பிறக்கும்போதே விப சார தோஷத்தோடு பிறந்தாளென்று சொல்வது எப்படிப் பொருந்தும்? ஆண்கள் அல்லவா இத்தோஷத்தில் இரண் டறக் கலந்து நிற்கின்றனர். ஆண்கள் அல்லவா விபசாரம் வேண்டும் வேண்டுமென சட்டசபையில் வாதாடுகின்றனர்? ஆணாய்ப் பிறந்த பண்டார சந்நதிகள் அல்லவா "உடல் நிலை" கருதி விபசாரம் செய்ய கோர்ட்டார் அனுமதி தேடு கின்றனர். இப்படியிருக்க உங்கள் சாஸ்திரங்களாலும் சாஸ் திரிகளாலும் பெண்களே விபசார தோஷமுடையவர்கள் என்று கேவலமாகப் பேசப்பட்டிருக்கின்றார்கள். இது பெண்களை தோஷம் சொல்வதற்கென்றே கற்பிக்கப்பட் டிருக்கிறது. இது மேயோவுக்குத் தெரியாமற் போய்விட் டது.

புருஷனே தெய்வம்! இந்தியாவைச் சுற்றிச் சென்ற ஸ்ரீமதி மேயோ பெண்ணினமாகையால், இவர் தம் 'இந்தியமாதா'வில் பெண் களின் கேவல நிலையைப்பற்றி வெகுவாகக் கூறியிருத்தல் ஆச்சரியமல்ல. இந்தியமாதர்களை இழிவு படுத்தியது இம் மாதென பல "திலகர்கள்" கர்ஜித்தார்கள். ஆனால் அவர் களுக்கு நான் சொல்லவுள்ளது என்னவெனில் 'உங்கள் மாதர்களை எவ்வளவு தூரம் இழிவுபடுத்த முடியுமோ அவ் வளவு தூரம் உங்கள் புராணங்களும் மற்ற கிரந்தங்களுமே இழிவாகக் கூறியிருக்கின்றன. இதைவிட இனியும் கேவல மாகக் கூறுதற்குவேண்டிய விஷயமும், பதமும் உலகத்தில் வேறெங்குமில்லை' என்பதே ஆகும்.

பத்ம புராணத்திலே மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமை கூறப்பட்டிருக்கிறது. இதை அமெரிக்க மாது தனது புத்தகத்தில் எடுத்தாண்டுள்ளார். அதாவது:—

"புருஷனைத்தவிர பெண்ணுக்கு வேறு தெய்வமில்லை. அவனுக்கு தான் பணிந்து, அவன் காலாலிட்ட வேலையை தலையாலேற்றுச் செய்து முடிப்பதே மனைவியின் கடமையாகும். அதுவே அவளுடைய வாழ்வின் லட்சியமாகும்."

"புருஷன் சூதாடியாயிருப்பினும் சரி, ஊரிலுள்ள பெண்களுடன் நேசம் வைத்திருப்பவனாயினும் சரி, வீட்டிலுள்ள மனைவியைக் கண்ணால்கூட பார்க்க விருப்பமில்லாதவனாயினும் சரி, மூர்க்கனாயிருந்தாலும் சரி, இன்னும் எடுத்துரைக்க இயலாத குற்றங்கள் புரிந்தாலும் சரி, அதை யெல்லாம் சற்றும் பொருட்படுத்தாது, மனைவி அவனையே தெய்வமெனக்கருதி அவனுக்குப் பணிவிடை செய்வதைவிட தனக்கு வேறு கடமை யில்லையென எண்ணி, தான் ஊண் உறக்கமின்றி வாடினாலும் அவன் மனம் கோணாது, அவனைத் திருப்திப்படுத்துவதே தனது முக்கியவேலையென எண்ணி வாழவேண்டும்."

"புருஷன் உண்டபின்பே மனைவி உண்ணவேண்டும். புருஷன் பட்டினியாக இருந்தால் தானும் பட்டினியாக இருக்கவேண்டும். அவனுக்கு வந்த கவலை தன்னுடையதென எண்ணவேண்டும். புருஷன் இறந்துவிடுவானாகில், அவனுடன் தானும் உடன்கட்டை ஏறவேண்டும். அவ்விதம்செய்தால்தான் அவளை உலகத்தார் மெச்சுவார்கள்."

"புருஷன் பாடுவானாகில் மனைவி அதைக்கண்டுமகிழ்ச்சியுறவேண்டும். தன் புருஷனைவிட உலகில் அறிவாளி வேறெவருமில்லையென மனைவி எண்ணவேண்டும்."

"மனைவி வீட்டில் யாதொரு கலகத்தையும் உண்டு பண்ணக்கூடாது. புருஷன் மனைவியை விடுத்து வேறு பெண்ணிடம் வியபசாரம் செய்வதற்காக, அவள் புருஷனிடம்அருவருப்புக் கொள்ளுதல் கூடாது. வீட்டிலுள்ள தொந்தரவு பொறுக்கமாட்டாதவளாய் வீட்டை விட்டு வெளியில் போய்விடுவாளாயின், அவளை உலகத்தார் அதிகமாகத்தான் பழிப்பார்கள்."

"புருஷன் மனைவியை அடித்துத் துன்புறுத்துவானாயின், பதிலொன்றும் பேசாது மிகப் பொறுமையுடனே இருக்கவேண்டும். சுருங்கச் சொல்லின் புருஷனை ஒவ்வொரு விதத்திலும் தெய்வமென்றே மதித்து ஒழுகல் வேண்டும். அவ்விதம் செய்வாளாயின் அவளை உலகம் புகழும்."

பெண் அடிமை.

இந்த பத்ம புராணத்தை மேல் நாட்டார் படித்து நமது நாகரிகத்தை எங்ஙனம் மெச்சுவார்கள்! இக்கடுமையான சட்டமுள்ள நாட்டில் எவர்தான் பெண்ணாய்ப் பிறக்கவும் மணமுடித்து வாழவும் இசைவர்? எனினும் இதுவல்லவோ ஒரு எழுத்துக்கூடத் தவறாமல், நமது பெண்களுக்கு அவர்கள் குழந்தைப்போழ்திலிருந்தே பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதுவல்லவோ நமது பெண்களின் ரத்தத்தில் ஊறிப்போய்க் கிடக்கிறது. பெண்களை வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும், பணியாளாகவு மன்றோ இந்நியக் கணவன் நடாத்துகிறான். இந்த நிலைமை, பெண்களுக்குச் சரியான கல்வி யறிவு இல்லாத காரணத்தாலன்றோ ஏற்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி நமது மேயோ கூறுவதாவது: "புருஷன் வீட்டுக்குச் செல்லுமுன் பெண் அதிகமாகக் கல்வி கற்றிருக்க முடியாது. சென்றபின் கல்வி கற்பதற்குப் போதிய சாவகாசமில்லை. அவளுடைய கல்வி வளர்ச்சியில் சிரத்தை எடுத்துக் கொள்வாருமில்லை. ஆனால் புருஷன் வீட்டில் அவள் இரண்டே விஷயங்களைக் கற்றுக் கொள்கிறாள். புருஷனுக்குத் தான் செய்யவேண்டிய ஊழியம் என்னவென்பது ஒன்று. வீரன், இருளன், காட்டேரி, சாமுண்டி, வெறியன், நொண்டி, தூறி, தொண்டி, நல்லண்ணன், மாடன், கருப்பன், பாவாடை, காளி, கருப்பாயி முதலிய சில தெய்வங்களை வணங்குவது எப்படி? அவைகளுக்குப் பூசை போடுவது எப்படி என்பது மற்றொன்று!"

இந்த வர்ணனையில் என்ன குற்ற மிருக்கிறது? பெண்கள் தங்கள் கடமை இதுவன்றி வேறென்னவாகத்தான் இந் நாட்டில் பூண்டு வாழ்கின்றனர்? இது அவர்களுக்குச் சரியான கல்வி யில்லாத குறையாலன்றோ ஏற்பட்டிருக்கும் நிலைமை!

மாமிகள் கொடுமை

இதைப்பற்றி இந்நாட்டில் எத்தனையோ மலிவான புத்தகங்கள் இருக்கின்றன. மேயோ கூறுவதாவது:—

"இந்துக்களுடைய வைதீகச் சட்டம், ஒருபெண் தன்னுடைய மாமியிடம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அவளுக்குத் தான் செய்யவேண்டிய கடமை என்ன என்பதையும் கூறுகின்றது. ஒரு பெண்ணுக்கு விவாகமாகி தன் புருஷனுடைய வீட்டிற்குச் செல்லுவா

ளாகில் அவளை உடனே வீட்டு வேலைக்காரியாகவே மாமி யார் கருதுகின்றாள். மாமியாரிட்ட வேலைகளை மருமகள் தவறாமல் செய்து முடித்தல் வேண்டும். மாமியார் நாத்தி மார் இவர்கள் இருவரின் வேலைகளைச் சிறிதும் தயங்காது யாதொரு மறுமொழியும் கூறாது மருமகள் செய்து முடிக்க வேண்டும். மருமகளுக்குச் சிறிதுகூட சுதந்திரமென்பது கிடையாது. வீட்டிலுள்ள மாமி புருஷன் முதலியவர்கள் அவளுக்குச் சுதந்திரம் கொடுப்பதில்லை என்பது ஒரு புற மிருக்க, சுதந்திர உணர்ச்சியே பெண்ணிடம் தோன்றுவ தில்லை. உழைப்பதே அவள் கடமை. வீட்டிலுள்ளவர்கள் மனங் கோணாமல் நடந்துகொள்வதே அவள் லட்சியம். சிறுவயதிலிருந்தே இதே எண்ணத்துடன் வாழ்ந்து வந்தி ருக்கும் ஒரு பெண்ணிடம் சுதந்திர உணர்ச்சி எவ்வாறு எழும்? எழுவதற்கு நியாயமுமில்லை. மாமியாரோ மருமக ளிடம் சிறிதுகூட இரக்கம் வைப்பதில்லை. அவளை மிகவும் கொடுமையாகவே நடத்துவது வழக்கம். அதிலும் மரு மகள் குழந்தை பெறுவிட்டால் மாமியாளிடம் அவள் படும் பாட்டை எடுத்துரைக்க முடியாது. அப்படியே மருமகள் குழந்தைகளைப் பெற்று அவைகள் பெண் குழந்தைகளாகப் போய்விடுமாயின் மாமியாருக்கு வரும்கோபத்துக்கு அளவு கிடையாது. அவளை அடித்துத் துன்புறுத்தவும் செய்வாள். அவளைத் தள்ளி வைத்துவிட்டு தன் மகனுக்கு வேறொரு விவாகம் செய்து விடுவதாகப் பயமுறுத்துவாள்."

உள்ளதை உள்ளவாறு இம்மாது எடுத்துக் கூறியிருக் கிறார். இந்நிலைமையை யாரே மறுக்க வல்லவர்? இதைப் போக்க நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் பெண்கள் குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போலல்

லவா வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அறிவு வளர்ச்சிக்கான கல்விச் சாலைகள் எங்கே? கிராமங்கள் தோறும் கல்விச் சாலைகள் அமைத்தல் அவசியமாய்த் தோன்றவில்லையா? “கோவிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்” என்று சொன்னார் ஔவைப் பிராட்டியார். இக் கோவில்களால் தான் உங்கள் நாடு இவ்வளவு கேவல நிலைக்கு வந்துளது. இதைப்பற்றி விரிக்கிற் பெருகும். உங்கள் கோவில்களைப் பெண்கள் கல்விச் சாலைகளாக உடனே மாற்றுங்கள். உங்கள் கோவில் மான்யங்களைப் பெண்கள் கல்விக்காக விற்று உபயோகியுங்கள். உங்கள் பூசை உற்சவங்களை நிறுத்தி பெண் கல்வியில் அப்பணத்தை செலவு செய்யுங்கள். கல்விச் சாலையில்லா ஊரைச்சுட்டெரியுங்கள். அன்றே பெண்கள் விடுதலை பெற்ற நாளாகும். அன்றே பெண்கள் சோதிருபங் கொள்வார்கள். அன்றே மேயோ போன்ற பிற நாட்டுப் பெண்கள் நமது தாய்மார்களைக் கண்டு வணங்குவார்கள். இதுவின்றி “எங்கள் ஔவையைப்பார்! அசலாம்பிகையைப் பார்! லட்சுமியைப் பார்! சரஸ்வதியைப் பார்! சரோஜினியைப்பார்! சாரளா தேவியைப் பார்! கஸ்தூரி பாய் காந்தியைப் பார்” என்று கூறிவிட்டு வாளா கிடப்பீர்களாயின் உங்கள் நாடு பேதைகள் பிறக்கும் நாடாய்த் தீரும். ஆதலால் நீங்கள் நாள்தோறும் கல்லை வணங்குவதில் செலவிடும் பணத்தையும் அன்பையும் பெண்கள் அறிவு வளர்ச்சிக்காக உபயோகப்படுத்துங்கள். உள்ள நிலையை உள்ளவாறு எடுத்துரைத்த மேயோவுக்கு வந்தனஞ் செலுத்தி விரைவில் முன்னேற இதுவே தருணம்.

விதவைகள் பரிதாப நிலைமை.

இப்பரந்த உலகின் எப்பாகத்திலும் நடைபெறாத கொடுமைகள் இந்நாட்டில் தான் வழங்கப்படுகிறது. இதற்கு அத்தாட்சி வேண்டுமாகில் நீங்கள் வேறொன்றையும் தேடி யலையவேண்டாம். இந் நாட்டிலுள்ள விதவைப் பெண்களின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்று நோக்குங்கள்.

சிறிய பையனுக்கும், சிறிய பெண்ணுக்கும் செல்வக் கல்யாணம் நடைபெறுகிறது. பையன் பள்ளியிலிருக்கும் போதே இறந்து விடுகிறான். பெண் தன் தாய் மடியில் துயிலும்போதே விதவையாகி விடுகிறாள். தீர்ந்தது அத்துடன் அவளது இவ்வுலக இன்பங்கள்! அவளை மற்றவர் கண்ணால் காண்பது அபசகுனம். சுபகாரியங்களில் அவள் தலையிடக் கூடாது. சில வகுப்பார்கள் அவள் தலையை மொட்டை யடித்து விடுவார்கள். மஞ்சள் குளிப்பில்லை. நல்ல ஆடையில்லை, ஆபரணமில்லை, புஷ்பமில்லை, வயிறு நிறைய உண்டியில்லை. வீட்டுவேலை மிகுதியால் உறக்கமில்லை, சதா சந்யாசிக்கோலம், நித்தமும் விரதம். இவ்விதம் தேகம் வெளுத்துப்போய் இன்பமென்பதே என்னவென்றறியாத மானிட உருவங்கள் எத்தனைகோடி இருளில் அடைபட்டுக் கிடக்கின்றன! அந்தோ!

ஐந்து வயதில் ஒரு பையன் கல்யாணம் செய்யலாம். இருபது வயதில் அவன் மனைவியை அடித்துத் துரத்தி விட்டு மற்றொரு கல்யாணம் செய்துகொள்ளலாம். பத்து பெண் குழந்தைகள் பெற்ற பின்னர் ஆண் மகவு இல்லையென்று தனது 60 வயதில் பிறிதொரு இளங் குமரியை விவாக முடித்துக் கொள்ளலாம். ஆணைப் பிறந்தவனுக்கு

இந்நாட்டில் இவ்வளவு சௌகரியங்களுமுண்டு. ஆனால் பெண்ணுக்கோ ஐந்தில் அறுத்தாலும் ஆறில் அறுத்தாலும் தான் சாகும் வரையில் தன்னைப்போல் மற்றவர்கள் இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதை சதா காலம் பார்த்துக்கொண்டு தனது ஐம்புலன்களையும் அடக்கிக்கட்டி, உலகத்தையும் உலக போகங்களையும் மறந்து, குருடாய் ஊமையாய்ச் செவிடாய் உயிரற்ற பிணமாய் பிறருக் குழைத்து உயிர்துறக்க வேண்டுவதே அவள் "கேட்டு வந்த வரம்".

"இந்துக்களுடைய விவாகத்தில் தலையிட்டால் இந்து சமூகமே கெட்டு, இந்து மதமே பாழடைந்து விடும்" என்றார் நமது சத்தியமூர்த்தி. "பெண்ணுக்கு பத்துப் பன்னிரண்டு வயதாகுமுன்பே கல்யாணம் செய்து விடவேண்டும். இல்லையேல் பாபம் வந்து சூழும் என்று பாராசர் எழுதியிருக்கிறார். நாங்கள் பாபத்துக்குப் பயப்படுவோமா உங்கள் தண்டனைக்குப் பயப்படுவோமா" வென இணக்க வயதுக் கமிட்டியின் முன் வாதித்தார். இந்தச் சத்திய மூர்த்திகள், நடப்பதெல்லாம் பாராசர் கட்டளைப்படியே இருப்பின் நமக்கு வருத்தமில்லை. ஆனால் இவர்கள் மட்டும் இவ்வியாசத்தில் விவரிக்க முடியாத பற்பல விதமான காரியங்களை பாராசர் கட்டளைக்கு மாறாகச் செய்துகொள்ளலாம். அதனால் இவர்களுக்குப் பாபம் சூழவில்லை. ஆனால் பெண்களுக்குச் சரியான வயது வந்த பின்னர் மணமுடிப்பதில் தான் பாராசர் ஞாபகம் வருகிறதென்றால் இதைப்போல் மோசமான வாதம் வேறொன்றுண்டாவென யோசியுங்கள். அதாவது தங்கள் வகுப்பாராகிய ஆண்கள் நடந்து கொள்ள வேண்டிய விஷயங்களுக்கு எந்த ஸ்மிருதியும்

சாஸ்திரமும் கட்டுப்படத் தக்கதல்ல, ஆனால் பெண்கள் மாத்திரம் அவைகளை முக்கியமாகப் பின்பற்ற வேண்டுமாம். நிற்க "பெண்கள் பக்குவமடையு முன்பே மணமுடிக்கா விட்டால் "கற்புநிலை" தவறி விடுவார்கள்" என்றார் மற்றொரு பார்ப்பன சாஸ்திரியார். அப்படியானால் இளமையிலே விதவையாகி விட்ட இவர்கள் பெண்களின் கற்பை இவர்கள் எவ்வண்ணம் காத்து வருகிறார்களென பிறநாட்டார் நகைக்கமாட்டார்களா?

வீட்டில் ஒரு அறையில் விதவைப் பெண்ணின் தாயும் தகப்பனும் துயிலுவார்கள். மற்றொரு அறையில் அண்ணனும் அண்ணியும் துயிலுவார்கள், மூன்றாமறையில் தமக்கையும் அவள் கணவனும் துயிலுவார்கள். இவர்கள் மத்தியில் இவ்வேழை விதவை நாடோறும் தவமிருக்கவேண்டும்! ஹ! ஹா! இந்தியாவின் சக்தியே! இந்து மதமே! ஸ்மிருதியே! சாஸ்திரமே! இதுவோ உங்கள் நிலை!

விதவையான பெண் தன் புருடன் வீட்டில் இருக்கலாம். ஆனால் அங்கு அவள் எல்லோருக்கும் பணியாளாகவே இருக்கவேண்டும். அதிகாலையில் அனைவருக்கும் முன்னதாக எழுந்து வாசல் பெருக்கி நீர் தெளித்து வீடு மெழுகவேண்டும். பாத்திரம் துலக்கவேண்டும். தண்ணீர் எடுக்கவேண்டும். சமையல் செய்யவேண்டும். துணிகள் கசக்கவேண்டும். இரவில் எல்லாரும் துயிலுற்ற பின் அதாவது மற்றவர்கள் ஆணும் பெண்ணுமாக தங்கள் தங்கள் அறைகளுக்குள் படுத்துறங்கப் போவதைப் பார்த்து விட்டுத் துயில வேண்டும். வீட்டில் வாழ்க்கையில் இவர்களுக்கு வேறு எவ்விதமான சுதந்திரமும் இன்பமும் கிடையாது. என்னே! இவர்கள் "தலைவிதி"!

புருடனுடன் பிறந்தவன் சிறிது முரடனாக விருக்கலாம். அவனுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய இவள் பிரியமற்றவளாக விருக்கலாம். அல்லது வீட்டிலுள்ள மாமி இவள் மீது கோபங் கொள்ளலாம். "என் ஜன்னல் கதவைத் திறந்து பார்த்தாய்? வீதிக்கு என் போனாய்? மாடியின்மீது உனக்கு என்ன வேலை? என்று மாமன் மாமி கொழுநன் உதைக்கலாம். இவை பொறுக்கமாட்டாமல் இவ்விதவை தன் 'கொண்ட' விடம் விட்டு தான் பிறந்த விடம் நாடலாம். தனது தாய் தந்தையர்கள் ஏழையாக விருப்பின் இவள் தனது புருடன் சொத்தில் வரும் வருவாயில் சிறிதளவு தனது காலட்சேபத்துக்காகக் கேட்டு மறுக்கப்படலாம்; இவள் நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடரலாம். இவ் வழக்கில் இவளுக்கு உதவி செய்ய இவளுடைய தங்கை புருடனோ, தமக்கை புருடனோ, தாயுடன் பிறந்த மாமனோ, வேறு உறவினனோ முற்படலாம். உடனே கோர்ட்டில் இவளுடைய ஜீவனும்சத்துக்குத் தடையாக இவள் "பதி விரதா தர்மம்" கெட்டுவிட்டாளென சாட்சிகள் விடுத்து இப்பெண்ணை அவதூறுபடுத்தி வாதிப்பார்கள். இவ்வளவு கதைகள் நடந்து சிறிது ஜீவனும்சத்துடனோ அல்லது சிறிதும் அங்கு மார்க்க மில்லாமலோ தாய் வீடு வந்து சேர்ந்த பிறகு அங்கு தன் அண்ணன் தம்பி ஆகியவர்களின் காருபாருகளும் அவர்களது பெண்ஜாதிகளின் கொடுமைகளும் அங்கு இவள் செய்யவேண்டிய வேலைகளும் கொஞ்சமல்ல. என்னே இப்பெண் செய்த "பாக்கியம்".

நிற்க, இயற்கையாய் எழும்படியான உணர்ச்சியை அடக்கமுடியாத பலக் குறைவினாலோ அண்டை அயல் வீட்டு வாலிபன் செய்யும் அட்டகாசத்தாலோ, வேறு நிர்ப்

பந்தத்தாலோ ஏதாவது பிரசவித்து ஊருக்கு பயந்து தனது சிசுவை விட்டெறிந்து, தப்பிக்கத் தெரியாமல் அகப்பட்டுக் கச்சேரிகளில் சிட்சைபெறும் 'அபாக்ய' விதவைகளின் சரித்திரங்களும், பல வாலிபர்களால் வெளியேற்றப்பட்டு ஊரைவிட்டும் நாட்டைவிட்டும் ஓடிப்போனதாக வெளியாகும் விதவைகள் வரலாறும் காலந்தோறும் தினசரிப்பத்திரிகைகளில் வெளியாகின்றதை பார்த்திருக்கலாம்.

நிற்க, கருவைச்சிதைக்க மருந்து (விஷங்கள்) உட்கொண்டு அதனல் கஷ்டம் ஏற்பட்டு சதாநோயோடு வாழும் பெண்களின் பரிதாபமும் கொஞ்சமல்ல. இம்மாதிரியாக பெண்களின்மீது இவ்வித விதவைத்தன்மையைப்போட்டு நீங்கள் அழுத்திக்கொண்டிருப்பதால் உங்கள் இந்து சமூகமும் அதற்காதாரமான மதமும் எவ்வளவு தூரம் அழுகிப் புழுத்து நாற்றமெடுத்துள்ள தென்று நீங்கள் அறியாமல், இளம் விவாஹமே இளம் விதவைக்கு காரண மென்று உணராமல், விவாக விஷயத்தில் தலையிட்டு விவாக வயதையோ விவாக கொள்கையையோ மாற்றினுல் இந்து மதமும் சமூகமும் பாழ்பட்டு விடும் என்று சொல்லக்கூடிய கொள்கைகளும் சாஸ்திரிகளும் இந்நாட்டில் உயிர் வாழ்ந்திருப்பதை நீங்கள் இனியும் சகித்துக்கொண்டிருப்பதை என்னென்றுரைப்பது!

ஒருபெண் ஒருவனை மணத்தவுடன் தனது ஆயுள் பரியந்தம் அவனுக்கே மனைவியாகி விட்டாளாம். ஆதலின் அவன் இறந்தாலும் பிறிதொரு ஆடவனை மணம்செய்து கொள்ளக் கூடாதாம். மற்றும் கணவன் இறக்கும்போதே மனைவியும் "உடன்கட்டை" ஏறவேண்டுமாம். இது இந்து மதத்தின் அச்சும் ஆணியும்போன்ற லட்சியமாம்! ஆங்கில

அரசாங்கத்தார் இந்தச் "சதி"யை நிறுத்தியது பெரும் பிசகேயாகும். இச்சதியை நிறுத்தாமலிருந்திருந்தால் இந் நாட்டில் தற்போது வதியும் 2,68,34,838 விதவை கள் அல் லல் படவேண்டிய திருக்காது. பெரும்பாலர் செத்துத் தொலைந்தாவது இருப்பார்கள். செத்தால் ஒரு நாள் அழு கையும் துக்கமும். இவர்கள் சாகாது வேதனைப்படுவதால், எந்நாளும் துக்கித்து அழ யாரால் முடியும். மற்றும் அழு வதாலும், துக்கப்படுவதாலும் இவ் விதவா வேதனைகள் தீருமோ? சதியை நிறுத்திய ஆங்கிலேய அரசாங்கமே! சதியை நிறுத்திச் சட்டம் செய்தபோது கூக்குரலிட்ட இவ் வைதிகர்களை என்செய்தாய்! 'மதத்தில் தலையிடாதே' என்ற சத்யமூர்த்திகளை அந்நாளில் என்ன செய்தாய்? உனது சட் டத்தை மீறி சதி செய்து அஞ்சாமல் ஜெயிலுக்குப்போன வைதிகன் ஒருவனாவது இந்தியாவில் உளனா? பின்னையேன் மயக்கம்? பெண்கள் விடுதலையில் நீ நாட்டமுற்ற தன்மை யாகில் இக்கோடானுகோடி இந்து விதவைகள் இன்ப முற்று வாழச் சட்டமியற்ற மாட்டாயா? இல்லையேல் நீ சதியை நிறுத்தியது எதற்கொப்பாகு மெனில், ஓர் வெட் டில் இரண்டு துண்டாகச் சாகு மொருவனை அவ் வெட்டி னின்று மீட்டு சிறிது சிறிதாக நாள்தோறும் அவன் அங் கங்களைக் கொய்து வேதனைப் படுத்திச் சாகவைப்பதற்கே யொப்பாகும்.

இந்து மத வேதாந்திகள், வேதங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் "ஆத்மாவிற்கு ஆண் பெண் என்ற தன்மையும் வேறு பாடும் இல்லை" (The Soul has no sex) என்று ஓல மிடுகின்றனவே. அப்படி யிருக்க ஆண் உடலில் உள்ள ஆத்மாவுக்குள்ள சுதந்திரத்தை பெண்ணுடலிலுள்ள ஆத் மாவுக் கில்லையென்று ஏன் வஞ்சிக்கிறீர்கள்?

இவ்விதவைப் பெண்களின் பரிதாப நிலைமை நமது அமெரிக்க மாது மிகவும் உருக்கமான வசனங்களில் எடுத்துக்கூறி இருக்கிறார். அவர் கூறியவற்றில் சிலவாவன:—

"புருஷனிறந்த பின்பு மனைவி புருஷனுடைய வீட்டிலேயே வசிக்கலாம். ஆனால் புருஷனுடைய உறவினர் இடும் வேலைகளை யெல்லாம் செய்யவேண்டும். அவள் புருஷன் வீட்டாருக்கு திருப்திகரமாக பணிவிடைகள் செய்யாவிட்டால் அவளை வீட்டை விட்டு வெளியே தூரத்தினும் தூரத்திவிடலாம். பின்பு விதவை, பிச்சை புகவேண்டும், அல்லது வியபசாரம் செய்து பிழைக்க வேண்டும், இதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை".

"அறுபது வயதுள்ள ஒருவன் சிறுவயதுள்ள பெண்ணை மணம் செய்து கொள்ளலா மென்றும் ஆனால் அவன் இறந்தபின் அப்பெண்ணுக்கு மறு விவாகம் செய்யக்கூடாதெனச் சொல்லுவதும் பொருத்தமாக வில்லை. இதைவிடக் கொடுமை வேறெதுவுமில்லை யெனவே கூறலாம்".

"பால்ய விவாகத்தைத் தடுக்கவேண்டும். விதவைகளுக்கு மறுவிவாகம் செய்விக்கவேண்டும், ஜாதிக்கொடுமைகளை ஒழிக்க வேண்டுமென்று ஊர் ஊராய்க் கூட்டங்கள் கூட்டி மகா நாடுகள் நடத்தி ஹிந்துக்கள் வெகு உரக்கப் பேசுகின்றனர். ஆனால் ஒன்றும் செயலில் நடப்பதில்லை. எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் விதவா விவாகம் நடந்ததாக எப்பொழுதாவது பத்திரிகைகளில் படிக்கின்றோமே ஒழிய, விதவா விவாகம் பல விடங்களில் நடக்கவில்லை யெனவே கூறவேண்டும். மேனாட்டுக் கல்வி கற்ற சிலர் தான் இது விஷயத்தில் ஊக்கங் காட்டி வருகிறார்கள்."

இவ்வம்மை கூறியதில் மறுக்கத்தக்கவைகள் ஒன்றுங் காணோம். இந்தியாவின் சிற்சில நகரங்களில் விதவைப் பெண்களுக்காக விடுதிகள் ஏற்பட்டு, கல்வி கற்பிக்கப்பட்டு, மண முடிக்கப்படுகிறார்களென்பது உண்மையே எனினும், மக்கள் மனதில் விதவைகளை மணம் செய்து கொள்ளுவது "இழிவு" என்றஎண்ணம் உள்ள வரையில் விதவா விவாகம் வெற்றி பெறுவது கடினம். விதவா விவாகத்தைத் செய்து வந்த சிற்சில வகுப்பினரும் "மேல் ஜாதிக்காரர்கள்" என்பவர்களும் நாளடைவில் விதவைகளை மணக்கும் வழக்கத்தை விட்டு வருகிறார்கள். ஏனெனில் விதவா விவாகம் செய்கிறவர்களை "சூத்திரன்" என்ற பதத்தை விட "முண்டைகட்டும் சாதி," "கட்டுப்பெண் கட்டும்சாதி" அறுத்துக் கட்டும் சாதி," என இழிவாக மதித்துப் பேசுகிறார்கள். ஆரிய நாகரீகத்தால் "விதவை மணம் செய்யும் ஜாதிகள்" தாழ்ந்த ஜாதியாக கருதப்படுகின்றது. சாதி மதத்வமும் அதற்காதாரமான சாஸ்திரங்களும் மதமும்அழிந்தொழிந்தாலொழிய உண்மையான விடுதலையை மக்கள் சிறப்பாக பெண்மக்கள் பெற வியலாது. ஆகிலும், தற்கால சாந்தியாக நாட்டுப்பெரியார்களை நாம் வேண்டுவதென்னவெனில்:

பெண்களுக்கும் கல்வி கொடுங்கள். ஆண் மக்களுக்குள்ள சொத்துரிமைகளையும், இதர உரிமைகளையும் பெண்களுக்கும் சமமாக வழங்கும்படியான சட்ட திட்டங்களை இயற்ற முந்துங்கள். புருஷனிறந்துவிட்டால் அவன் சொத்தில் மனைவிக்கும் உரிமையுண்டெனச் சட்டமியற்றுங்கள். பெண்களுக்குக்குக் கல்வியும், அறிவும் சொத்துரிமையும் ஏற்படச் செய்யுங்கள். அக்காலத்தில் விதவா விவாகத்தைப் பற்றி நீங்கள் கவலைகொள்ள வேண்டியதில்லை. ஏனெனில்

சொத்தும் அறிவுமுள்ள விதவையை மணந்துகொள்ளாமல் எந்த ஆடவனும் விட்டு வைத்திருக்கமாட்டான். உங்கள் சாதிச் சட்டங்களும் சமயச் சட்டங்களும் உண்மையான அறிவுச் சுடரால் கொளுத்தப் படும். பெண்கள் தாங்கள் "கேட்டுவந்த வரத்தையும்" "பெற்றுவந்த பாக்கியத்தையும்" விதிக்கப் பெற்ற "தலைவிதியையும்" "பூர்வ ஜென்ம பூஜாபலன்களையும்" உடைத்தெரியும்படியான அறிவையும் ஆற்றலையும் அந்நாளில் பெற்று விடுவார்கள். அந்நாள் எந்நாளோவென ஏக்கமுற வேண்டுவதில்லை. அந்நாள் வெகு விரைவில் சித்திக்கும் என்பதேயாகும்.

பிள்ளைப் பேறு. மணப்பந்தலில், மணமகனால் கட்டப்படும் மாங்கல்யம், "நீ உன் பர்த்தாவோடு இணைபிரியாது வாழ்வாய்" என்று கூறுவதில்லை ஆனால் பின் என்னை? கல்யாணமான சில மாதங்களுள் கர்ப்பக்குறி கண்டால் தான் அவ்வுறுதி ஏற்படும். இல்லையேல் நமது மனைவிகள் துயரை யார் அறிவார்? "மலடு" என்ற சொல் அவள் காதில் விழுந்தால் அனலிலிட்ட புழுப்போல் துடிப்பாள். அதிகாலையில் எழுந்து, பிள்ளையார் தலையில் குடங்குடமாய் தண்ணீரூற்றி அரசமரம் சுற்றுவாள். இம்மாதிரி பல மாதங்கள் செய்தும் கர்ப்பக் குறிகாணுவிடில் பின்னர் சோமவார விரதம், வெள்ளிக் கிழமை விரதம் முதலிய பல விரதங்கள் அனுட்டிப்பாள். பின்னர் நாகர் பூசை, நாகர் பிரதிஷ்டை முதலானவை நடைபெறும். சோதிடனை அழைத்து கிரக தோஷம் தீருவதற்காக "சாந்தி" கழிப்பார்கள். கோவில் அர்ச்சனை, அபிஷேகாதிகள் செய்விப்பர். தீர்த்த யாத்திரை செல்வர். பின்

னரும் கர்ப்பக்குறி காணவிடில், மாங்கல்ய பலன் துற்பலமேயாகி விடும்! புருஷன் வேறொரு பெண்ணை மணந்தாக வேண்டும். அவனுக்குப் பிரியமில்லாவிடினும் வீட்டிலுள்ள "கிழங்கள்" மற்றொரு கல்யாணம் செய்வித்தே தீரும். ஏனெனில் "புத்" என்ற நரகத்திலிருந்து மீட்க "புத்திரன்" இருந்தாக வேண்டும்! தன் சந்ததி விருத்திக்கும், தனது சொத்து சுகங்களை யனுபவிப்பதற்கும் பிள்ளை கண்டிப்பாய் இருந்தாக வேண்டும். பிள்ளை பெறவேண்டும் என்ற இவ்வாசையால் பெண்கள் படும் வேதனைகள் எட்டிலடங்கா.

நாட்டுப்புறப் பெண், பிள்ளை பெறுவிடில், பேய் பிடித்தவள் என்று அவளைப் பல தலங்களுக்குக் கூட்டிச் சென்று அவளை ஈரச்சேலையுடனும், விரித்த தலையுடனும் உட்கார வைத்து, புகை போட்டு, "ஓங்காரம் போடாயா" வென்று உடுக்கை தட்டி, அவளை ஆட வைத்து, பிரம்பால் நையப் புடைத்து, கண்டவன் கையால் செருப்படி போட்டு, கடைசியில் அவள் தலையில் ஒரு பெரிய கல்லையெடுத்துவைத்து, "நாம் போறேன்! நாம் போறேன்! நாம் போறேன்! தங் காளை விட்டு" என்று அவளை ஓலமிடச்செய்து, ஒரு மாத்தடியில் கூட்டிச் சென்று, அவள் தலை மயிரில் ஒரு பகுதியை முடிந்து, அம்முடிப்பை மரத்தின்மீதுவைத்து ஆணி அடித்து பின்னர் அம்முடிப்பைத் தலையினின்று கத்தரித்துவிடுவார்கள். இவ்வாட்டத்தை நீங்கள் பார்க்கவேண்டுமானல் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள "நாட்டாராயன் கோவில்" "அப்பச்சிமார் மடம்" "ஈச்சனாரி கோயில்" முதலிய இடங்களுக்குச் சென்று பாருங்கள். ஸ்ரீமதி மேயோ இவ்விடங்களைப் பார்த்திருந்தால் இன்னும் நம் சாக்கடை நாற்றம் அதிகமாகிவிடும். பிள்ளை பெறவேண்டுமென்ற தாகத்

தால் பெண்கள் பற்பலவிதமாகச் செய்யப்படும் வேதனை ஆயிரம் நாவு படைத்த உங்கள் ஆதிசேஷனாலும் சொல்ல முடியாதென்றால், கேவலம் ஒரு மேயோவால் என்னதான் சொல்லிவிடமுடியும்?

பெண்கள் கருவுற்று, பிரசவிக்குந்தருவாயில் அவர்கள படுந்துன்பங்களை ஸ்ரீமதி மேயோ மிகவும் நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார். பிரசவப்பெண்களை தீட்டு என்று ஒதுக்கி வைத்து எவரும் தீண்டாதிருப்பதும், தீண்டப்படாத சாதியென இழித்துக் கூறும் மருத்துவச்சியின் உதவியை அப்போதுமட்டும் நாடி அவளை வீட்டின் ரகசிய அறைக்குள் சேர்த்துக்கொள்வதும், மருத்துவம் செய்ய வருபவள் பிள்ளை பெறாதவளாகவும், பிரசவ வேதனையை அனுபவிக்காதவளாகவும் சிற்சில சந்தர்ப்பங்களில் இருப்பதும், பிரசவிக்கும் பெண்ணுக்கு கந்தலாடை கொடுப்பதும் அவளிருக்கும் அறைக்குள் நல்ல காற்றும் வெளிச்சமும் இல்லாமல் செய்வதும், புகைபோட்டு திணறச்செய்வதும், சரியான படுக்கை விரிப்புகளின்றியும், நல்ல ஆகாரத்தைக் கொடாமலும், பிரசவம் கஷ்டமாகின்ற காலத்து மருத்துவச்சி முரட்டுத்தனமாய் நடந்து கொள்ளுவதாலும் சிசுக்கள் இறந்துவிடுவதும், தாய்களே இறந்துவிடுவதும், அல்லது பிரசவித்தபின் வெகுநாட்களுக்கு வயிற்றுப்போக்கு முதலிய தொந்திரவுகள் ஏற்பட்டு பெண்கள் துன்புறுவதும் மற்றும் இதுபோன்ற-மெய்யாக நமது கிராமாந்தரங்களில் நடைபெறும்-மருத்துவ முறையை ஸ்ரீமதி மேயோ சுட்டிக் காட்டியிருப்பதை மேனாட்டார் பார்த்து நம்மை 'மூடத்தனமும், அநாகரீகமும் குடிகொண்ட மனிதர்' என்று இழிவாக நினைப்பரென்பதில் ஐயமில்லை. எனினும் உள்ள

நிலையை யுள்ளவாறே எடுத்துரைத்து நம்மை சீர்திருத்தத் துறையிலிறக்கிய மேயோவை யாம் நண்பரெனவே மதித்து, விரைவில் நமது பெண்மக்கள் துயரை நீக்க முற்படுவோமாக.

நமது பெண் மக்களுக்கு நாம் சரியான - அதாவது அவர்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான கல்வி தந்து அவர்கள் அறிவை விருத்திசெய்து விடுவோமானல் "இந்திய மாதாவில்" பொறித்துள்ள குறைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். அதுவன்றி ஔவையின் ஞானத்தைப் பண்டிதர்கள் புகழ்வதாலும், சாவித்திரியின் கதையை நடிகர் நடிப்பதாலும், விசுவாவரை என்ற பெண் பாடிய பாசுரங்கள் ரிக்வேதத்தில் இருப்பதாலும், அகஸ்தியரின் மனைவி லோபா முத்திரை பாசுரங்கள் பாடியதாலும்; மைத்ரேயி பாண்டித்தியமும், கார்க்கி கல்வித்திறமும், தேவபூதி தத்துவார்த்தமும் நிரம்பியவர்களெனச் சாஸ்திரிகள் பிரசங்கிப்பதாலும் நமது நாட்டில் தற்காலம் வதியும் பெண்கள் ஞான சிரோன்மணிகளாகி விடமாட்டார்கள்.

நமது பெண்மக்களின் அறியாமையானது நம்மைக் கோழைகளாகவும், மூடர்களாகவும் செய்து விட்டது. வயிறு நிறைய உண்ட குழந்தை பின்னரும் உண்ண மறுத்தால் உடனே தாயானவள் 'அதோ பூச்சாண்டி! வாயைத் திற' வெனப் பயமுறுத்தி சோற்றை வாயினுள் திணிக்கிருள். இதனல் குழந்தைக்கு பூச்சாண்டி பயமும், அஜீரணமும் சுகக்கேடும் உண்டாகிறது. பகலெல்லாம் உறங்கினதாலோ, உடல் வேதனையாலோ மற்றெவ்வகையாலோ உறக்கமின்றி விழித்திருக்கும் குழந்தையை தொட்டிலில் போட்டு 'இதோ பூனை! அதோ நாய்!' என்று மிரட்டி அப்

பிள்ளை மனதில் பயத்தை உண்டுபண்ணுவதும், வெளியில் மைதானத்தில், நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் குழந்தைகள் ஆடிப்பாடி உற்சாக முறுவதைத் தடுத்து "அந்தப் புளிய மரத்தில் பேய் இருக்கிறது, இந்த வேப்ப மரத்தில் முனியிருக்கிறது, இரண்டு பிள்ளைகளைக் கொன்றுவிட்டது, நீ வீட்டை விட்டு வெளியில் போகாதே" என்று மிரட்டி சதா பயமுறச் செய்வதும், அடுத்த வீட்டுக் குழந்தையுடன் தன் குழந்தை சண்டையிட்டால், உடனே தாயானவள் பறந்தோடி பிள்ளையை வீட்டினுள் கொண்டுவந்து பூசை போடுவதும், கண்ட கண்ட நகைகளை யெல்லாம் சிசுக்கள் மீது போட்டு, "வெளியில் போகாதே, திருடன்-கழுத்தை திருகிவிடுவான்" என்று பயமுறுத்திப் பிள்ளைகளை கோழைகளாக்குவதும் நமது பெண்கள் அறியாமையன்றோ!

"கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்று கற்பித்த கற்பலங்காரப் பாடத்தால், பகுத்தறிவில்லாமல், மூட நம்பிக்கைகள் துவண்டு, சரியென்றும் தப்பென்றும் ஆராயாமல் நடக்கும் நிலைமை ஒழியவேண்டும். பெண் வருத்தம் தெரியாத மிருகத்தனமான எத்தனை புருஷர்கள் சதா சம்போகப் பிரியர்களாய், வருடமொன்று தவறினும் குழந்தையொன்று தவறாமல் பிறக்கச் செய்கிறார்கள். அந்தோ! வயிறுநிறைய கர்ப்பம், கையில் ஒரு குழந்தை, இடுப்பில் ஒரு குழந்தை, பெண்ணுக்கு தேகம் வெளுத்து, கண்கள் பிதுங்கி மெலிந்த தோற்றத்தோடு இருந்தாலும் புருஷனுடைய சிற்றறிவுக்குப் பயந்து வீட்டு வேலைகளை கவனித்துக்கொள்ள வேண்டும். வற்றிப்போன மார்ப்பாலானாலும் சவலைக் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கவேண்டும்! சவலையின் வயிறு பெருத்து, கால்க

ளும், கைகளும் மெலிந்து விகாரத்தோற்ற முற்றிருக்கும். இவ்வாறான காட்சிகளை ஊர்கள்தோறும் எவ்வளவு வேண்டு மானாலுங் கண்ணுள்ளவர்கள் காணலாமே! பெண்களுக்கு நல்லுணர்வும், சுதந்திரப்பொலிவும், சொத்துரிமையும், கல்வி யறிவும் இருக்குமானால் "கல்லையும் புல்லையும்" புருஷராகக் கொள்வரோ? அவ்விதம் கொள்வது தங்கள் தலைவிதியென மதிப்பரோ? இல்லை! இல்லை. முக்காலும் இல்லை!.

நமது மடமை.

குறித்து மேயோ கூறுவது:—"ஹிந்துக்கள் மூட நம்பிக்கை யுள்ளவர்கள். எதாவது ஒருவருக்கு நோய் வந்து விட்டால் கடவுளே அந்த நோயை விட்டிற்குக் கொண்டுவந்து விட்டதாகக் கருதுகிறார்கள்".

மாரியாத்தாள், காளியாத்தாள், பிளேக் மாரியாத்தாள் முதலிய 'தேவதைக்கு' பூசை போடும் வழக்கம் மேலே கூறிய கூற்றை மெய்ப்பிக்கும்.

"மற்றும், பெண்கள் ஆண்களைவிட அதிக மூட வழக்கங்களில் நம்பிக்கையுள்ளவர்கள். எவருக்காவது நோய் வந்துவிட்டால் அதற்கு வேண்டிய மருந்து, அல்லது ரண சிகிச்சை முதலிய முறைகளை அவர்கள் தேடுவதில்லை. 'குல தெய்வத்திற்கு பூஜை போடுகிறேன், வீரனுக்குப் பொங்க லிடுகிறேன், காளிக்கு அபிஷேகம் செய்கிறேன், இன்னும் எத்தனையோ சாமிகளுக்கு திருப்தி உண்டாகும் வண்ணம் காணிக்கை செலுத்துகிறேன், நோய் சொஸ்தமாகட்டும்' என பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். வியாதி குண மடைந்து விட்டால் தங்கள் வீட்டிலுள்ள பாத்திரம் முதல்

தங்களுடைய நகைகளை எல்லாவற்றையும் விற்று சாமிக ளுக்கு பூஜை போடுவார்கள். வியாதி குணமடையாது நோய் வாய்ப்பட்டவர் இறந்துவிடுவாராயின், தெய்வத் துக்கு கண்ணில்லாமல் போய்விட்டது, எத்தனையோ சாமி களை வேண்டிக்கொண்டேன், ஒன்றும் பயன்பட வில்லை. யென வீட்டிலுள்ள பெண்கள் குய்யோ முறையோ வென்றுகத்திக் கூக்குரலிட்டு, வாயிலும் வயிற்றிலும் அடித் துக்கொண்டு சுவரில் மோதிக்கொள்வார்கள். பின்பு 'நாமென்ன செய்வது, எல்லாம் விதியின் பயன், யாரை நொந்து ஆவதென்ன' என்று சில சமயங்களில் மனதைத் தேற்றிக்கொள்வார்கள். என்ன மடமை! என்ன பேதமை!

மேயோவே! இப்பாழான இந்துக்களின் மனதை நீ எவ்வளவு நன்றாக அறிந்து கொண்டனை! இவர்கள் ஞானத் தையும், தத்துவார்த்தங்களையும் நீ ஏடுகளில் தேடி யலைய வில்லை என்று ஓங்காரமிடுகிறார்களே!

ஒருநாட்டின் சமய ஞானமும், தத்துவமும் அந்நாட்டு ஜனங்கள் உண்மை நெறிபற்றி ஒழுக்கத்துடனும், பகுத்தறிவுடனும் நடக்க இடந்தாமல், அவர்களை சாதி வேற்றுமை உயர்வு-தாழ்வு மூட நம்பிக்கை-வீண் சடங்கு, தப்பான எண்ணங்களால் வேதனைப்படல், முதலியவைக ளில் அழுத்தி வைத்திருக்குமாயின் அந்த ஞானத்தையும் தத்துவத்தையும் கொளுத்தி எறிதல் சாலச் சிறந்ததே.

உங்கள் நாட்டாருக்குள்ளும் இம் மௌடீகம் ஓரளவு காணக் கிடக்கிறது. நீங்களும் பிரார்த்தனையால் நோயைச் சொஸ்தமாக்க வெண்ணி உங்கள் நேரத்தையும் அறிவை யும் பாழ்படுத்திக் கொள்ளுகிறீர்கள். நீங்களும் குருமார்

களென்ற தரகர்களை ஏற்படுத்தி அவர்கள் கால்களைவணங்குகிறீர்கள். நீங்களும் உங்கள் பெண்களை அக்குருமாருக்கு இணையாக கன்னிகா மடத்தில் மொட்டை யடித்து விட்டு வைத்திருக்கிறீர்கள். எம்மதமானாலும், மதம் என்ற கட்டுப்பாட்டில் யார் இருக்கிறார்களோ அவர்கள் ஓரளவு தங்கள் அறிவையும் சுதந்திரத்தையும் அடகு வைத்தவர்களாகவே இருப்பார்கள். இவ்வடிமைத் தனத்தை நீக்கவே எங்கள் நாட்டில் 'சுயமரியாதை' இயக்கம் தோன்றியிருக்கிறது. இவ்வியக்கத்தின் நோக்கங்களும் பலன்களும் உன்னுடான மேல் நாட்டையும் எதிர்காலத்தில் எட்டிப் பார்க்கும். மதத்தின் அழிவால் மக்கள் விடுதலையும், மக்கள் விடுதலையால் தேச விடுதலையும் சித்திக்கும், அதுவே எங்கள் சுயராஜ்யம்!

ஆங்கில ஆட்சி. இந்தியாவையும் இங்கிலாந்தையும் ஆட்சி புரிவது ஆங்கில அரசாங்கமே. எனினும் இவ்வாட்சியில் இங்கிலாந்தும் இந்தியாவும் அடைந்து வரும் நன்மைகளை ஆராய்ந்து பார்க்கின் சொல்லுக்கடங்காத வேற்றுமைகள் காணப்பெறும். ஆங்கில நாட்டின் பேரழகையும், செல்வப் பெருக்கையும் போர் ஆற்றலையும், சுதந்தரப் பொலிவையும், பல்வேறு தொழில், ஊக்கம், முயற்சி, வல்லமை, ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகியவைகளையும், பொதுவாக அந்நாட்டு மக்களின் மேன்மைப் பாட்டையும், அந்நாடு கண்டார் யாரே புகழாதுள்ளார்! ஆகவே இங்கிலாந்தினின்று ஆங்கில வாட்சியின் திறத்தைப் பார்க்கின் அது மிகவும் மேலானதும், விரும்பத் தக்கதுமாகவே காணப்பெறும். அந்நாட்டு மக்களுக்கு

அது கணக்கற்ற நன்மைகளை நாடோறும் செய்த வண்ண மாயிருக்கிறது. அந்நாட்டின் அபிவிருத்திக்கான பொருள் களையும், செல்வங்களையும் அதே தேடிப்பிடிக்கிறது. அவை எங்கிருப்பினும் சரியே. ஏழுலகங்களுக்கும் அது தனது முயற்சியோடு கூடியமக்களை விமானங்களில் அனுப்பி தன் னுட்டு மக்களின் அபிவிருத்தியையே குறியாகக் கொண்டு செங்கோலாட்சி புரிகின்றது. எனவே இந்நிலையில் பார்க் கும்போது, ஆங்கிலவாட்சியைப் போன்ற ஒப்பற்ற வாட்சி உலகினில் எப்பாகத்திலும் காண்டலரிதே.

ஆனல் நேராக இங்கிலாந்தினின்றும் ஆங்கில வாட்சி யைப் பின் தொடர்ந்து இந்தியாவுக்கு வாருங்கள். இவ் வாட்சியால் ஆங்கில மக்கள் அடையப்பெறும் நன்மைகளை யும், இந்தியமக்கள் அடைந்துள்ள நன்மைகளையும் சீர்தூக் கிப் பாருங்கள். அளவிலாவது, குணத்திலாவது நீங்கள் ஒற்றுமை காண முடியுமா? ஆகாயக்கப்பல் முதல், அரை யங்குல இரும்பாணி வரையுள்ள எந்தச்சாதனமும் நமது நாட்டில் செய்யக்கூடிய தொழில் முயற்சிகளைக் காணோம். நம்முடைய பணமும், மூலாதாரப் பொருள்களும், உலோ கங்களும் கப்பல் கப்பலாய் வாரிச் செல்லப்படுகின்றன. அவற்றிற்குப் பதிலாக ஆங்கில நாட்டுக் கைத்தொழில் சாமான்கள் நமது சந்தைகளில் குவிக்கப்படுகின்றன. அச் சாமான்களை நமது நாட்டிலேயே செய்யத்தக்க முயற்சி களை இவ்வாங்கில அரசாங்கம் இந்நாட்டில் சிந்திப்பதே யில்லை. நமது மக்களைப் பசியால் வாடாமல் சந்தோஷமா கத் தொழில் புரிந்து, சுயமரியாதையோடு வாழ வைக்க வில்லை. நமது மக்களைப் போர்வீரர்களாகவும் தன் மதிப் புள்ளவர்களாகவும் இவ்வாட்சி செய்யவில்லை. நம் நாட்டு

மக்களை ஆகாயக்கப்பல், நீராவிக்கப்பல், மலைபோன்ற இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், விஞ்ஞான சாஸ்திரங்கள் ஆகியவற்றில் தேர்ச்சிபெற இவ்வரசாங்கம் செய்யவுமில்லை. ஆனால் இதே ஆட்சி தன்னுடைய ஆங்கில நாட்டில் தன் மக்களுக்கு இவை எல்லாம் செய்துள்ளது.

இந்தியர்களும், ஆங்கிலேயரைப்போல் ஏன் முயற்சித்தல் கூடாது? முயற்சி யில்லாமல் ஏன் வீணாக ஆங்கிலேயரின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமையும் துவேஷமும் கொள்ளவேண்டும்? அரசாங்கத்தை வீணாகக் குறை கூறிக் கொண்டிராமல் தங்கள்நேரத்தையும்,செல்வத்தையும்,முயற்சியையும் தங்கள் அபிவிருத்தியில் இந்தியர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று யாரேனுமொரு மேதாவி கூறலாகும். அத்தகையோருக்கு பதில் விடுக்க இக்கட்டுரை இடந்தராது. எனினும் சுருக்கமாகக் கூறிவிட்டு நமது விஷயத்தைத் தொடர்வோம். மக்கள் முன்னேற்ற மடையக் கூடிய சகல துறைகளிலும் அரசாங்கத்தினுடைய ஆதரவும், அநுகூலமும் தேவை. இங்கிலாந்தில் அமைக்கப் பெற்றிருக்கும் ஆங்கில வரசாங்கம் அந்நாட்டு மக்களுக்குச் சொந்தமானது. இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கும் ஆங்கில அரசாட்சியில் இந்தியருக்குச் சொந்தமில்லை. மேலும் இந்திய மக்களுக்காக இவ்வாட்சி ஏற்படுத்தப்படவுமில்லை. எனிலோ, இவ்வாட்சி ஆங்கிலநாட்டு மக்களின் மேன்மைக்காகவே இந்தியாவில் ஸ்தாபிதம் செய்யப் பெற்றது. ஆதலால் இவ்வாட்சி ஆங்கிலநாட்டு மக்களுக்கு மேன்மையாகவும், இந்நாட்டு மக்களுக்கு "கொடுமை"யாகவும் காணப்பெறுதல் கண்கூடு. ஆனது பற்றியே இந்தியாவிலுள்ள ஆங்கிலவாட்சியை யாம் வெறுக்கிறோம்.

இதுவே போல் இந்தியாவெனும் இங்கிலாந்தில் ஆங்கில ஆட்சிக்குத் துணையாக குண்டுகளும், துப்பாக்கிகளும், அவைகளைக் கையாட பெருமிதமான சேனைகளும், அச்சேனைகளைக் குறித்த இடத்திற்கு ஏற்றிச் செல்ல ரயில் பாதைகளும், மோட்டார் வண்டிகளும், நீராவிக்கப்பல்களும், ஆகாய விமானங்களுமுண்டு. இவற்றைப் பராமரிக்க இந்தியரின் வரிப்பணத்தில் கோடி கோடியாகப் பங்குமுண்டு. ஆனால் யான் கூறப்புகும் ஆட்சிக்கு குண்டு, பீரங்கிகள் இல்லாவிடினும், அவைகளைவிட வல்லமை பொருந்திய வேறு பல ஆயுதங்களும், ஆங்கில ஆட்சியைக் காட்டினும் வல்லமையான, அசைக்க முடியாத, ஆட்சியமைப்பும் உண்டு. இதுதான் "பார்ப்பன வாட்சி" இவ்வாட்சித் திறத்தை பார்ப்பனன் என்ற நிலையில் பார்ப்போமேயானால் மிகவும் உன்னதமானதும், போற்றத் தகுந்ததுமாகத் தென்படும் என்பதில் ஐயமில்லை. மனிதனுடைய அறிவு எவ்வளவு தூரத்திற்கு எட்டிப் பார்க்க முடியுமோ அவ்வளவு தூரம் இப்பார்ப்பனர்கள் எட்டிப் பார்த்து விட்டார்கள். ஆங்கிலம் படித்த மக்கள் ஆகாய விமானத்தில் தற்போது பறந்து செல்கின்றனர். ஆனால் பார்ப்பன மக்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரேயே ரதங்களில் பறந்து சென்றதாக எழுதிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். சந்திர மண்டலத்திலுள்ள உயிர்ப்பிராணிகளோடு ஆங்கில மேதாவிகள் பேசுவதற்கு தற்காலம் முயற்சிக்கிறார்கள். ஆனால் இப் பார்ப்பனர்கள் அதற்கும் அப்பாலுள்ள எல்லா உலகங்களிலுள்ள பிதுர்க்களுக்கும் ஆதிகாலந் தொட்டு நாளது வரையில் அறுசுவை புண்டிகளையும் அனுப்பிவைத்து வருகிறார்கள். இப்பார்ப்

பன ஆட்சியில் அடங்கியுள்ள பார்ப்பன மக்களுக்கு சகல உரிமைகளும், சுகபோக பாக்கியங்களும் உண்டு. ஆங்கில ஆட்சி பெயரளவில் "பிரிட்டிஷ் காமன்வெல்த்" அதாவது ஆங்கிலப் பொதுச் சொத்து, என்ற தத்துவத்தோடு விளங்குவதுபோல இப்பார்ப்பன ஆட்சியும் சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, மோட்சம், நரகம், விடுதலை, நிஷ்காமிய கருமம் எல்லாவுயிர்களிலும் நான் இருக்கிறேன் என்ற உரைகளோடு கூடிய 'இந்து மதத்தை" தத்துவமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வருகிறது.

இவ்வாட்சிக்கு வேதம், ஸ்மிருதி, ஆகமம், இதிகாசம், புராணம், சாஸ்திரம், ஆகிய ஆயுதங்களும், மற்றும் தர்ப்பைப் புல், பஞ்சாங்கம், சரியை, கிரியை, யோகம், ஞானம், உத்திராட்சம், விபூதி, நாமம், பூணூல், ஜெபம், மந்திரம், பூஜை ஆகிய கணக்கற்ற உபாயங்களும், பஞ்சாங்கப்பார்ப்பனன், புரோகிதப் பார்ப்பனன், குருக்கள் பார்ப்பனன், கோயில் பார்ப்பனன், ஆச்சாரிப் பார்ப்பனன் ஆகிய சைன்யங்களும், மடாதிபதி, சாஸ்திரி, கனபாடி, லோககுரு, சங்கராச்சாரி போன்ற சேனைத்தலைவர்களும், கோயில்கள், குளங்கள், தீர்த்த விசேடங்கள், தாசி வேசி இல்லங்கள் ஆகிய பெருங்கோட்டை கொத்தளங்களும், உண்டு. மற்றும் இவ்வாட்சிக்குப் பக்க பலமாக கணக்கையன் என்ற பார்ப்பனன்,எழுத்துக்கூலிப்பார்ப்பனன்,வாத்தியார்ப்பார்ப்பனன், கச்சேரிப் பார்ப்பனன், தாகுப் பார்ப்பனன். காப்பிக்கடைப் பார்ப்பனன், ஓட்டல் பார்ப்பனன், தண்ணீர்ப் பந்தல் பார்ப்பனன், வக்கீல் பார்ப்பனன், தாசில் பார்ப்பனன், முன்சிப் பார்ப்பனன், ராஜியப் பார்ப்பனன், காங்கிரசுப் பார்ப்பனன், பத்திரிகை பார்ப்பனன், பிரசங்கப் பார்ப்

பனன், பாகவதப்பார்ப்பனன், சங்கீதப் பார்ப்பனன், நாடகப் பார்ப்பனன் ஆகிய கணக்கற்ற பிரசாரக் கூட்டங்களும் உண்டு. நான்கு வர்ணம், ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஒரு தர்மம், ஒவ்வொரு தர்மத்துக்கும் ஒவ்வொரு சாஸ்திரம் ஆகிய சட்ட திட்டங்களும், கடந்த ஜென்மங்களுண்டு, கடக்கப்போகும் ஜென்மங்களுண்டு. விதைத்தவினையை அறுப்பாய் என்றும், பரிகாரமுண்டு என்றும், சாந்திசெய் சடங்குசெய், யாத்திரைசெய், பூஜைசெய், பார்ப்பானுக்குத்தானஞ் செய் என்ற நியதிகளும், ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்டிருக்கும். சர்க்கார் வரியைக்காட்டிலும் பெருவாரியான பணச் செலவோடும் இவ்வாட்சி நடைபெற்று வருகிறது. ஆனால் இவ்வாட்சியால் பார்ப்பனன் மட்டும் சகல மேன்மைகளையும் அடைந்திருக்கிறான். பார்ப்பனரல்லாதானுக்கு சகல விதமான தாழ்மையும் அவமதிப்பும் இவ்வாட்சியில் அளிக்கப்பட்டிருக்கிறது.

"பார்ப்பனனைக் குறைசொல்வானேன், கொடைக்கானல் பார்ப்பனன் பஞ்சுமெத்தைபோட்டு காலாள் கையாட்களோடு மோட்டார் வாகனத்தில் குடும்ப சகிதமாய் சுக போக மனுபவிப்பதைக்கண்டு பொறாமைகொள்வதும், வக்கில் பார்ப்பனன் இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கொள்ளையடிப்பதைக் கண்டு துவேஷப்படுவதும், சிம்லாப் பார்ப்பனன் துரைபோல சட்டைமாட்டி, மேஜைமீது உட்கார்ந்து உஸ்கி, பிராந்தி, ஒயினோடு சாப்பிடுவதையும் கண்டு ஆத்திரப்படுவதும் கூடாது. பார்ப்பனரல்லாத நீங்களும் அவர்களைப்போல் படித்து முன்னுக்கு வாருங்கள். பார்ப்பனனை நிந்திக்கும் நேரத்தையும், திறத்தையும் நீங்கள் முன்னேற்றமடைவதில் செலவிடுங்கள்" என்று யாரோனுமொரு

'மேதாவி' கூறலாம். அத்தகையோருக்கு விடையளிப்பது லேசான காரியமல்ல வெனினும் சுருக்கமாகக் கூறுவோம்.

பார்ப்பன வஞ்சகம்

கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், சாதி ஆகிய சகலமும் பார்ப்பனர்களாலே பார்ப்பனர்களுக்காக சிருஷ்டிக்கப்பட்டது. இதில் பார்ப்பனர்கள் முன்னேறுவதற்கு சகல உரிமைகளுமுண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற மடைவதற்கு இப்பார்ப்பனக் கடவுள்களும், மதமும், சாஸ்திரங்களும், சாதிகளும் இடங்கொடுக்காமல் பல நூற்றுண்டுகளாக மக்களைக் "கொடுமை" ப் படுத்தி வருகின்றனர். மனிதனில் மனிதன் பிறப்பினால் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற கொள்கையும், ஒருமனிதனைப் பிறமனிதன் கண்ணால் பார்க்கக்கூடாது என்ற கொள்கையும் இருக்கும் வரையில் மக்கள் எப்படி முன்னேற முடியும்? இவ்விருபதாம் நூற்றுண்டிலும் நாகரீகம் வாய்ந்த ஆங்கில துரைத்தனத்தின் ஆதீனத்தின் கீழுள்ள பக்திசிரத்தையுள்ள மைசூர் மன்னரின் நாட்டிலுள்ள பண்டிதப் பார்ப்பனன் சமஸ்கிருத வியாகரணத்தை பார்ப்பனரல்லாத ஏனைய மக்களுக்கு சொல்லிக்கொடுக்க மறுத்தனன் என்றால் என்னே பார்ப்பனக்கொடுமை! மக்களின் பிறவியில் உயர்வு, தாழ்வு இல்லை என்ற கொள்கையை காங்கிரசுக் கமிட்டியில் தீர்மானித்தவுடன் ஒப்போம்! ஒப்போம்! என வெளியேறிய ராஜகோபாலாச்சாரிகளை வைத்துள்ள பிராமணியத்தின் கொடுமையை அளவிட்டுக்கூற முடியுமா? தர்மத்திலும், கல்வியிலும், தயையிலும் பிரக்யாதி பெற்ற

திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள பிராமணீயக் கொடுமை என் போன்றோர்களைச் சிறையிலிட்டு வாட்டியதென்றால் என்னே இப்பார்ப்பனக் கொடுமை! நாய்களும், பன்றிகளும் மலமிட்டுச்செல்லும் பாதைகளில் மக்கள் நடக்கவொண்ணாதெனப் போராடும் பார்ப்பனீய வாட்சியில் மக்கள் முன்னேறுவதெப்படி? பார்ப்பனரல்லாதாரின் மூடத்தனமே பார்ப்பன சைன்யங்களுக்கு பெரும் விருந்தளிக்கும் கோட்டையாக நிற்கிறது. இக்கோட்டையை அழித்தாலொழிய பார்ப்பன வாதிக்கத்தால் ஏற்பட்டிருக்கும் கொடுமையைப் போக்க வியலாது. இம்மூடத்தனம் படிப்பாலும், பாண்டித்யத்தாலும், கவித்திறத்தாலும், சக்திபூஜையாலும், அகச்சான்று புறச்சான்று தேடித் திரிவதாலும், வேதாசலங்களாலும், ஞான தேசிகர்களாலும் உறுதிப்படுமே யொழிய ஒழிந்து போகாது. ஆனால் கடவுள், மதம், சாஸ்திரம், புராணம், நம்பிக்கை யாகியவைகளை யெல்லாம் பகுத்தறிவு கொண்டு அலசிப் பார்த்து, காரிய காரணங்களைக் கொண்டு நிறுத்துப் பார்த்து, யுக்திவாதங்களால் தகர்த்துப் பார்த்து, எவ்வெவை மக்களின் முன்னேற்றத்திற்கு தடைகல்லாய் நிற்கின்றனவோ அவற்றைஎல்லாம் பிடிங்கித்தள்ள சுயமரியாதைத் திருக்கூட்டத்தாரால்தான் முடியும். இக்கூட்டத்தினர்க்கு நன்னூல்படிப்பும் நிகண்டறிவும், பாண்டித்யமும், பலமொழித்திறனும், ஆராய்ச்சி நுட்பமும் தேவையில்லை. வயிற்றுக்குச் சோறு, உடலுக்கு ஆடை, நிழலுக்கு வீடு, ஒழுக்கமுள்ள வாழ்வு ஆகியவைகளைத் தேடியடையும் ஆற்றலே போதுமானது.

ஆங்கில வாட்சியை விரட்டி யடிக்கப் போதிய ஆற்றல் நம்மிடமில்லை. அவர்களைப்போல் நம்மிடமும் நுப்

பாக்கிச் சைன்யங்கள் இருப்பின் எதிர்த்துப் போராடி
அவர்களை இந் நாட்டினின்றும் விரட்டலாம். அது
வீண்பேச்சேயாகும். அத்தகைய வலிமை நம்முள் என்
றென்றைக்கும் ஏற்படப் போவதில்லை. நம்முடைய தற்
கால நிலையில் நாம் ஆங்கில நிழலின்றி ஜீவிக்க முடியாத
நிலையிலிருக்கிறோம். வீணாகச் சுயேச்சை, சுயேச்சை என்று
சீனிவாசன்களும், போசுகளும், நேருகளும், கத்துவதைக்
கேட்டு நாமும் மனமயங்கிக் கத்தித் திரிவோமானால்
124—A. சட்டத்தின் கீழ் நமது வாலிபர் பலர் கைதி செய்
யப்பட்டு சிறையில் வதிய நேரிடும். அதனால் நமது நாட்
டுக்கோ, மக்களுக்கோ இம்மியளவு நன்மையேனும் சித்
திக்காது. நம்மை கஷ்டப்பட விட்டு விட்டு சுயேச்சை
வாதிகள் திரைமறைவில் கூத்தாடிக் களிப்பரே யன்றி
வேறில்லை. ஆங்கிலக் கொடியின் கீழுள்ள வேறுபல
வெள்ளைநாட்டினர் அனுபவித்துவரும் சுதந்தர நிலைமையை
நமக்கும் தந்தருளுமாறு நாம் இவ்வாங்கில வாட்சியை வற்
புறுத்தி வாயளவில் போராடலாம். ஆனால் அதற்கும் நம்மில்
யோக்யதை யில்லை, பார்ப்பனீய வாட்சி நம்மைச்சொந்த
நாட்டிலேயே அந்நியர்களாவும், பகைவர்களாகவும் செய்து
விட்டது. நம்மில் உயர்வு, தாழ்வு, கற்பித்து நம்மைப் பல
சாதிகளாகப் பிரித்து நம்பிக்கை யின்மை துவேஷம் ஆகிய
சுழல்காற்றில் சிக்குறச் செய்துள்ளது. நாம் இக்காற்றால்
சுழலச் சுழல ஒருவருக்கொருவர் மோதிமிதித்துக் கொண்
டிருக்கிறோம். நாம் ராஜீய விடுதலையைப்பற்றி நினைக்குமுன்
இப்பார்ப்பனக் கொடுமையினின்றும் விடுதலை பெறல்வேண்
டும், நமக்கு எதிரிடையாய் நிற்பது நாம் கடவுளிடத்திலும்
மதத்தினிடத்திலும், சாத்திரத்தினிடத்திலும் வைத்துள்ள

மூடநம்பிக்கையேயாகும். இதைத்தகர்த் தெரிவோமாகில் பார்ப்பனீயம் தானுகவே தொலையும்.

பார்ப்பனீயக் கோடுமை. இந்தியாவைக் கண்டுசென்ற மேயோ வெனும்மாது தனது "இந்தியமாதா" வெனும் புத்தகத்தில் பார்ப்பனீயக்கொடுமையைப்பற்றி ஒரு அத்தியாயம் வரைந்துள்ளார். அதை அப்படியே வாசகர்களுக்குத் தருகிறேன்.

மேயோ கூறுவது:— "சென்னை ராஜதானிதான் பார்ப்பனீய இந்துமதத்தின் இருப்பிடமாகும். பூர்வீகக் குடிகளான கருநிறமுள்ள திராவிடமக்களின் இருப்பிடமும் சென்னை ராஜதானியே. பார்ப்பனீய இந்துமதம் திராவிடர்களை சின்னுபின்னப் படுத்தி, பறையர்களெனவும், கீழ்ஜாதியார்களெனவும் கூறி அடிமையாக ஒதுக்கி வைத்ததுடன், அவர்களை அறிவில்லாதவர்களாயும், கல்வி இல்லாதவர்களாயும் செய்து நசுக்கி வைத்தது. இந்தச் சமயத்தில் பிரிட்டிஷார் வந்துசேர்ந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர். ஜனங்களும் கொஞ்சங் கொஞ்சமாக தங்கள் உரிமையைப் பெற்றனர். ஜனநாயக ஆட்சி நிலவ ஆரம்பித்தது.

திராவிட மக்களும் காலக்கிரமத்தில் தாங்கள் நெடுகாளாகத் தூங்கிக்கொண்டிருந்த உறக்கத்திலிருந்து கண்விழித்துக்கொண்டனர். திராவிட மக்களைக்கண்டு மற்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தாரும் தலை தூக்கத் தொடங்கினர். பார்ப்பனர்களுக்கு எதிராக 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்ற ஒரு கட்சி தோன்றியது. இக்கட்சிக்கு அதிக பலமிருப்பதால்,

சென்னை சட்டசபையில் பார்ப்பனர் வகித்திருந்த அரசியல் ஆதிக்கத்தை பறிமுதல்செய்து, அதிகாரங்களைப் பார்ப்பனரல்லாதார் கைப்பற்றிக் கொண்டனர். இது இந்துதேச சரித்திரத்தில் எழுதப்படவேண்டிய ஒரு முக்கிய சம்பவமாகும்.

தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவரும், செல்வந்தரும் அரசியல் துறையில் வேலை செய்து வருபவரும், பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவருமான ஒருவரை சென்னையில் சந்தித்தேன். அவர் மிகவும் ஊக்கமும் உற்சாகமும் உள்ளவர். தாராளமாகப் பேசும் இயல்புள்ளவர். அவருடன் நான் வெகுநேரம் வரையிலும் அந்தரங்கமாக சம்பாஷித்துக்கொண்டிருந்தேன். பிராமணர்களைப்பற்றி விவரமாகக் கூறும்படி அவரை வேண்டிக்கொண்டேன்.

அவர் கூறியதாவது:- பண்டைக்காலத்தில் எல்லா மனிதர்களும் அவரவர்கள் விருப்பப்படி வாழ்ந்துவந்தபோது பிராமணன் மட்டும் கல்விகற்கத் தொடங்கினான். பிராமணன் இயற்கையிலேயே மிகவும் தந்திரசாலியாதலால், அவன் கல்விகற்றதும் புராண சாஸ்திரங்களையெல்லாம் தன்வசமாக்கிக்கொண்டு 'பிராமணனே எல்லா ஜாதியாரிலும் உயர்ந்தவன், பிராமணனே அனைவருக்கும் குரு' என அந்த சாஸ்திரங்களில் எழுதிவைத்துவிட்டான். ஆண்டுகள் பல கழிந்தன. பிராமணர்களைத் தவிர வேறு எவரும் கல்விகற்கவில்லை. பிராமணன்தான் கல்வி கற்றவன். அவனைத்தவிர வேறு எவரும் புராணங்களையும் சாஸ்திரங்களையும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கக்கூடாதென பிராமணன் புஸ்தகத்தில் எழுதிவைத்து விட்டபடியால் பிற ஜாதியார் அவைகளில் நம்பிக்கை வைத்து அவனை 'பூதேவர்'

என மதித்து அவனுக்குக் கீழ்படிந்து நடக்க ஆரம்பித்தனர். ஆகவே எல்லா ஹிந்துக்களுக்கும் பிராமணனே தலைவனானன். அவன் கூறிய மொழிக்கு எதிர்மொழி கூற எவருக்கும் தைரியமில்லை. அவன் ஆணைக்கு மறுமொழி கூறாமல் அவனிட்ட வேலைகளை எல்லாம் அவன் தாள் பணிந்து இருகைகூப்பிச் செய்துவந்தனர். ஆங்கிலேயர் வந்து எல்லாச் சாதியார்களும் கல்விபயிலலாமென்ற உரிமையை அளித்து பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கும்வரை ஹிந்து இந்தியா மேற்கூறிய நிலைமையிலேயே இருந்துவந்தது.

சென்னை மாகாணத்திலே நாங்கள் பிராமணர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். பல்லாண்டுகளாக பிராமணன் உயர்ந்தநிலையில் இருந்து வந்ததனாலும், பேய்க்கூட்டங்களைப்போல் தந்திரமும் சூழ்ச்சியு முள்ளவனாக விருந்தபடியாலும், அவனை எதிர்த்துப்போராடி வெல்வது அதிக கஷ்டமாகத் தானிருக்கிறது. பத்திரிகைகள் பிராமணர் வசமிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகங்களில் 100-க்கு 80-பிராமணன் கையிலிருக்கின்றன. நீதி ஸ்தலங்கள், கச்சேரிகள் எல்லாம் பிராமணனுக்குச் சொந்தம். கீழ்த்தர குமஸ்தா உத்தியோகத்திலிருந்து உயர்தர நீதிபதி உத்தியோகம் வரை பிராமணன் வசமே இருக்கின்றன. அதிகாரங்கள் தங்கள்கையில் அகப்பட்டுக் கொள்ளவே ஜனங்களை விசேஷமாக பெண்களை அதிகமாகப் பயமுறுத்த ஆரம்பித்தனர். ஏனெனில் நாங்க ளெல்லாம் ஏழைகள், கல்வியில்லாதவர்கள். பிராமணர்களுடைய சூழ்ச்சியை அறியாமல் அவர்கள் கூறிவந்த மூடப்பழக்க வழக்கங்களில் நம்பிக்கை வைத்துவிட்டோம். ஆகவே பூதேவர்களாகிய

பிராமணர்களுக்கு நாங்கள் அடிமைகளாகி விட்டோம். எங்களை நசுக்கி கசக்கிப் பிழிவதற்கு பிரிட்டிஷார் தடையாயிருப்பதால் பிரிட்டிஷார்மீது பிராமணன் சீறி விழுகிறான். ஆத்திரத்துடன் துள்ளிக்குதிக்கிறான். பெரியதேசாபிமானி போல் போலி வேடந் தரித்து மேடைகள் மீது நின்று கொண்டு பிரிட்டிஷார் நாட்டை விட்டுப் போய்விடவேண்டுமென்று உறக்கக்கத்துகிறான். போதும்! போதும்! பிரிட்டிஷார் போய்விட்டால் பிராமணனுக்குக் கொண்டாட்டந்தான். எங்கள்மீது நன்றாக குதிரைச்சவாரி செய்வான். எங்கள் மூச்சைப் பிடித்துக் கொல்லத் தொடங்குவான். பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியா என்ன நிலைமையிலிருந்ததோ அந்த நிலைமை மறுபடியும் வந்துவிடும். பண்டைக் காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த புரோகிதாட்சி மறுபடியும் வந்து விடும். நாங்களெல்லோரும் மீண்டும் அடிமைகளாக வேண்டியதுதான். இன்னும் மூடநம்பிக்கைகள் நம்மை விட்டபாடில்லை. இந்நிலைமையிலேயே நமக்கு இத்தனை இன்னல்களிருக்கின்றன. இன்னும் பண்டைய புரோகிதாட்சி வந்து விட்டால் எங்கள் பாடு திண்டாட்டந்தான். தயை செய்து சற்று செவிசாய்த்துக் கேட்க வேண்டுகிறேன்.

பார்ப்பன வரிப்பளு

சர்க்காருக்கு கொடுக்கும் வரிகளைக்காட்டிலும் பிராமணனுக்கு அதிகமான வரிகளைக்கொடுக்கிறோம். பிறந்த தினத்திலிருந்து இறக்கும் வரை ஒருஜீந்து பிராமணனுக்கு வரி கொடுத்துக் கொண்டேயிருக்கிறான். குழந்தை பிறந்தவுடன் பிராமணனுக்கு தக்ஷிணை கொடுக்க

வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை சுகமாய் வளராதாம். குழந்தைபிறந்த 16-வது நாள் 'தீட்டுக்கழியும்' சடங்கென்று ஒரு விழா நடத்தவேண்டும். அதற்கும் பிராமணனுக்கு . தட்சணை கொடுக்கவேண்டும். சிறிது நாள் கழித்து குழந்தைக்குப் பெயரிட வேண்டும், அதற்கும் அவனுக்கு தட்சணை உண்டு. ஒரு வருடம் கழித்து ஆண்டு நிறைவு விழா வந்துவிடும். அப்பொழுது பிராமணனுக்கு கொண்டாட்டந்தான்.

பின்பு குழந்தைக்கு சாதம் ஊட்டவேண்டும். அதற்கும் பிராமணனுக்கு தட்சணையுண்டு. குழந்தை ஆண்குழந்தையாய் இருந்தால் குழந்தைக்கு குடுமி வைக்க வேண்டும். அதற்கும் பிராமணனுக்கு தக்ஷணை உண்டு. ஏழாவது வயதில் குழந்தைக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கவேண்டும். அப்பொழுதும் பிராமணனுக்கு கொண்டாட்டந்தான். கொஞ்சம் செல்வவந்தர்கள் வீடாயிருந்தால் தங்கத்தினுல் பேனு செய்து அதை பிராமணனுக்குத் தத்தம் பண்ண வேண்டும்.

பெண் குழந்தையாயிருந்தால், 16-வயதுக்குள் கல்யாணம் செய்விக்க வேண்டும். இச்சமயத்தில் பிராமணனுக்கு கொழுத்தபணம் கிடைக்கும். கிரகணதினம் வந்தால் அப்பொழுதும் பிராமணனுக்கு ஏராளமான தக்ஷணை கிடைக்கும், இன்னும் ருதுசாந்தி முதலிய வைபவங்களிருக்கின்றன. இவ்விதமாக பலதடவைகளில் பிராமணனுக்கு உயிருள்ள மட்டும் தக்ஷணை கொடுக்கவேண்டும். இது இத்துடன் நின்றபாடில்லை. இறந்த பின்பும் பிராமணப்பேய் நம்மை விட்டு விடாது. பிராமணனுக்குப் பணம் கொடுக்காமல் பிரேதத்தை அடக்கம் செய்யக்

கூடாது. பிரேதத்தை அடக்கம் செய்யும் பொழுது பிராமணனுக்கு கொழுத்த தக்ஷிணை கொடுக்கவேண்டும். ஒருவன் இறந்து ஒரு வருடம்வரை மாதா மாதம் அவனுடைய மகன் சிரார்த்தம் கொடுக்கவேண்டும். ஏனெனில் பிராமணன் உண்பதும், உடுப்பதும், குடிப்பதும் பிதுர்களுக்குத் திருப்தி செய்யக்கூடியதாம். பின்பு ஒவ்வொரு வருடமும், இறந்தவனுடைய மகன் பிராமணனுக்கு, வயிறு நிறைய விருந்தளிக்க வேண்டும். இந்துமதாச் சாரப்படி இந்த வருமானமெல்லாம் பெற பிராமணனுக்கு உரிமையிருக்கிறதெனக் கூறுகிறான். பிராமணனுக்குக் கொடுக்க வேண்டியவைகளைக் கொடுக்காதவன் நரகத்தில் போய் விழுந்து விடுவான் என்று பிராமணன் சொல்லுகிறான். இந்த சடங்குகள் நடக்கும் பொழுதெல்லாம், பிராமணனுடைய பாதங்களை தண்ணீரால் கழுவி அந்த அழுக்குத் தண்ணீரை ஜனங்கள் குடிக்கவேண்டுமாம். ஏழைகளை பல மூட வழக்கங்களில் நம்பச்செய்து, அவர்களை ஏமாற்றிப் பணம்பறித்து சோம்பேறியாக பிராமணன் வாழ்ந்து வருகிறான். சர்க்கார் உத்தியோகமோ, அல்லது வக்கீல் உத்தியோகமோ தவிர வேறு எந்த உத்தியோகமும் பிராமணன் பார்ப்பதில்லை. சென்னை மாகாணத்தில் 15 லட்சம் பிராமணர்களிருக்கிறார்கள். இவர்களுக்கு அடிமையாக, இவர்களுக்கு உழைத்துப் போடுவதற்கு சுமார் நான்கு கோடியே பத்து லட்சம் பிராமணரல்லாதார் இருக்கின்றனர். ஆகையால் நாங்கள் விடுதலை பெற்று, சுதந்தரமடைந்து, பிறர் உதவியின்றி வாழும் ஆற்றல் அடையும் வரை, நாட்டில் சமாதானத்தையும், பாதுகாப்பையுமளிக்க நம் தேசத்தை அன்னிய தேசத்தவர் ஆளுவதே பொருத்தமானது. எங்களை ஏமாற்றி, எங்களுடைய பணத்தைப் பிய்த்துப் பிடுங்

கித் தின்று கொண்டே, எங்களைத் தீண்டாதவர்களென்றும் நாங்கள் தொட்டால் அசுத்தமாகிவிடுமென்றும் கூறும் 15 லட்சம் பிராமணர்களுக்கு அடிமையாக நாங்கள் வாழ்வதை விட எங்களைப் பாதுகாத்துவரும் அன்னியர் ஆளுகையே எவ்வளவோ மேலானது"

மேற்கண்ட வர்ணனை இந்து சமூகத்தின் கீழ்நிலையி லுள்ள கனவானால் மிஸ் மேயோவுக்குக் கூறப்பட்டவை. இவைகளை மேல்நாட்டார் படித்துப் பார்க்கின் பிராமண ரின் எண்ணிக்கையற்ற வஞ்சகங்களில் சிறிதேனும் அறிந்து கொள்வார்களாதலால் பிரசங்க மேடைப் பார்ப்பன ருக்கு பாதகமேற்படும். ஆனது பற்றியே 'இந்தியமாதா' வெனும் புத்தகத்தின்மீது ஆத்திரத்தோடு கிளம்பினர்கள்.

பார்ப்பன அடிமைகள்.

மேற்கூறியவற்றால் பார்ப்பனச் சாயம் முற்றிலும் வெளியாகவில்லை. இன்னும் சொல்ல வேண்டியவை எத்தனையோ உள. அவற்றைப்பேசப்புகின் இச்சிறிய புத்தகம் இடம் தராது. சுருங்கக்கூறுமிடத்து பார்ப்பனன் நம்முடைய பெண்டாட்டி பிள்ளைகள் தவிர மற்றெல்லா வற்றின்மீதும் கைவைத்துவிட்டான். இல்லை இல்லை. சில விடங்களில் நம்முடைய பெண்ஜாதி பிள்ளைகளையும் சொந்த மாக்கிக் கொண்டான். இதைத் தெரியாதவர்கள் மலையா ளத்துக்குச்சென்று தெரிந்து கொள்ளட்டும். அவற்றைப் பற்றி இங்கு விரித்தெழுத இடமில்லை. நம்பூதிரிப்பார்ப் பானுக்கு தங்கள் பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக் கொடுத்து அதனால் மேன்மையுண்டென எண்ணிக்கொண்டிருக்கும் பரிதாபகரமான இந்து ஜாதியார் மலையாளப்பிரதேசத்தில்

இன்றையதினமும் வாழ்ந்து வருகின்றனர். சிலவாண்டுக ளுக்குமுன் கொச்சிக்கடுத்த எர்ணுக்குளத்தில் ஒரு கன வானைச் சந்தித்தேன். அவரைப்பற்றி அவரையே விசா ரித்தபோது அவர் பெரியதனவந்தர் என்று தெரியவந்தது. அவருடைய சுற்றத்தார் பலரும் உயர்ந்த பதவிகளில் இருக் கின்றனர். கல்விகேள்விகளிலே திறமை வாய்ந்தவர். பெரிய மனிதருக்கு வேண்டிய யோக்யதைகள் பூராவும் இருந்தன. எனினும் இவற்றையெல்லாம் கூறியதால் மட் டும் தன்னுடைய உயர்வான நிலைமையைச் சொல்லி விட்ட தாக அவர் மனதுக்கு சமாதானமில்லை, ஆதலால் எல்லாம் சொல்லியான பிறகு அப்பக்கத்தில் மிகவும் செல்வந்தரான ஒரு நம்பூதிரிப் பார்ப்பானுடைய பெயரைச் சொல்லி அவ ரைத் தெரியுமா? என்று கேட்டார். நான் கேள்விப்பட் டிருக்கிறேன் என்றேன். ஹ! ஹா!! இப்பக்கங்களில் அவ ரைத் தெரியாதவர் இருக்கவே மாட்டார்கள். அத்திரு மேனி குடும்பத்துக்கும் எங்கள் வீட்டுக்கும் பரம்பரையாய் 'சம்பந்தம் உண்டு' எனச் சொல்லி மகிழ்ந்தார். தன்னு டையசெல்வத்தாலும் படிப்பாலும் மச்சு மாளிகை காலாள் கையாட்களாலும் உயர்ந்த உத்தியோகத்தாலும் தனது குடும்பத்திற்கு உயர்வு மேம்படவில்லை. ஆனல் ஒரு பார்ப் பனன் தனது பெண்டுகளுடன் கூடிச் சுகிப்பதால்தான் அப்பெருமை பூர்த்தியாகிறதென்ற எண்ணமும் வழக்கமும் கொண்ட வாழ்க்கையுள்ள ஹிந்துமதத்தை என் செய் வது?

இந்நாட்டில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, உயர்ந்த கல்வியறிவு பெற்று, உயர்ந்த நிலைமையிலிருப்பவர் முதல் சாமான்ய ஏழைகள் வரையுள்ள பல குடும்பத்தின் பெண்

களைப் பார்ப்பானுக்கு தாசிகளாக இருக்க ஹிந்து மதம் செய்துவிட்டது. நாற்பது லட்சம் ஜனத்தொகைகொண்ட தேசத்தைக் கட்டியாளும் மகாராணியாரையும் பார்ப்பானே தான் சம்பந்தமாகக் கொள்ள வேண்டும் என்று ஹிந்து மதம் இன்னும் இடங் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பெரிய பூபாகத்தைக் கட்டியாண்டிடினும் மேல்நாடு பல சென்று கல்வி கற்றிடினும் பாமரரின் பணத்தை தன் னெடைக்குத் தாசிவிட்டுப் பார்ப்பனருக்கு வழங்கி ராஜ ரிஷிப்பட்டம் பெறும் ஆள்வார் மகாராஜாக்களையும் ஹிந்து மதம் வைத்துக் கொண்டிருக்கிறது. என்னே! இம்மதப் பெருமை! என்னே இம்மதத்தால் பார்ப்பனர்க்கிருக்கும் ஏக போகவுரிமை!! என்னே! இருபது கோடி மக்களை இருபதாம் நாற்றாண்டிலும் இவர்கள் ஏமாற்றிவரும் திறமை!!!

பஞ்சமர் துயரம். பறையனும் சக்கிலியனும் காலமெலாம் கவுண்டர்களுடைய காடு தோட்டங்க ளில் கூலி வேலைசெய்து சாவதற்காகவே சிருட்டிக்கப்பட்டார்களா? காலை முதல் மாலை வரை பாடு பட்டதல்லாமல் இரவிலும் பட்டிகாத்து ஒருவேளை ஆகார மேனும் வயிறு நிறைய உண்ணுமல் வாடியலைவதற்காகவா அவன் பிறந்தான்? நல்ல ஆடைகள் உடுத்தி பிறரைப்போல் சந்தோஷிக்க அவனுக்கு மார்க்க மேதேனுமில்லையா? ஊரின் பள்ளத்தாக்குகளில் உள்ள சின்னஞ்சிறு குடிசை களில் அவன் காலமெல்லாம் வாழவா? குடிப்பதற்கும் நல்ல தண்ணீரில்லாமல் அழுக்கடைந்த குட்டை நீரையே குடித்து அவன் சாகவா? அவனுடைய குழந்தைகள் கல்வி யும், பல திறப்பட்ட கைத்தொழிலும் கற்க மார்க்கமின்றி

ஆடு மாடுகள் மேய்க்கவா உங்கள் ஆண்டவனால் சிருட்டிக்கப்பட்டார்கள்? அவர்கள் பெண்களும் ஆண்களும் நீங்கள் மிருகங்களைவிடக் கேவலமாக மதித்து மிகவும் இழிந்த வசைச்சொல் கூறி அழைக்கப்படவா பிறந்துள்ளார்கள்? நீங்கள் அவர்களை அடித்தாலும், வைதாலும், வேறு கொடுமைகள் பல செய்தாலும், அவற்றினின்று தப்பித்துக் கொள்ள அவர்களுக்கு மார்க்கம் எக்காலமும் சித்திக்கப் போவதில்லையா? என்பதே நமது கவலை.

உங்கள் தீண்டாமை விலக்குத் தீர்மானங்கள் இவைகளைச் சாதித்து விடுமா என்று கேட்கிறேன். உங்கள் சமய வேடங்கள் இம்மாறுதல் அளிக்குமா என்று கேட்கிறேன். "கோயில் நுழைவு" ஒன்றுமாத்திரம் எங்கள் பஞ்சமனை உயர்த்தும் என்றநம்பிக்கை எனக்கு இல்லை. இம்மையிலே அவனைக் கொடுமைப்படுத்தும் அக்கடவுள் அவனுக்கு மறுமையில் ஏதோ தாவல்லது என்றநம்பிக்கையும் எனக்கில்லை. மற்றும் அவன் பக்தி மார்க்கத்தில் மூழ்கி உங்களைப் போல ஆனந்தக்கூத்தாட அவனுக்கு நேரமில்லை-காலமில்லை. வயிற்றிலிருக்கும் கருக்குழந்தையும் தொட்டிலில் தூங்கும் சிசுக்குழந்தையும் போக, அவன் குடிசையிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் காலைமுதல் மாலைவரை காடு கரைகளில் திணறத் திணற உழைத்தால்தான் அரை வேளைக் கஞ்சிக்காகிலும் மார்க்கமுண்டு. ஆதலின் அவனுக்கு உங்கள் கோவில் உற்சவாதிகள் வேண்டாம். அவனுக்குப் பலமும், பணமும், நேரமும் ஏற்படும்போது அக்கோவில்களையும் அதிலுள்ள சாமிகளையும் ஆட்டிவைக்கும் சக்தி அவனுக்கு ஏற்பட்டுவிடும். அதைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்.

இன்றையதினம் அவனுக்கு வேண்டுவது வேலைக்குத் தகுந்த சம்பளம். இதைத் தந்து விடுவீர்களாயின் அவன் வயிறார உண்டு உடல் வளர்க்க முடியும். அவர்களுடைய கேவலமான நிலைமையைக் கவனித்து, விசாரித்து பரிகாரம் தேட உடனே ஒரு விசாரணைக் கமிட்டி தேவை. சைமன் கமிஷன் புஞ்சைப் புளியம்பட்டியிலுள்ள கருப்பச் சக்கிலியனுடைய குறைகளை அறியவில்லை, விசாரிக்கவுமில்லை, யாரும் எடுத்துரைக்கவுமில்லை. அவனுடைய பையனை தாலூகா போர்டு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்க வைக்க அவனுக்குப் பிரியமுண்டு. ஆனால் அவனுடைய பையனை ஆடு மேய்க்கச் சேர்க்காவிடில், அவனையும் பண்ணையத்திலிருந்து தூரத்துவதாக அவனுடைய "கவுண்டர்" சொல்லுகிறார். மற்றும் அவனுடைய பையன் பழனி, ஆடு மேய்த்து ஐந்து வள்ளம் சம்பாதித்தால்தான் ஒரு ஜீவனுடைய காலம் தள்ளிவரும். இல்லையேல் கருப்பனுடைய படியில் பழனி குடிக்க முடியாது. இந்நிலையில் உங்களுடைய கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் என்ன செய்யும் என்று கேட்கிறேன். எங்கள் பழனிக்கு முதலில் வேண்டுவது வயிறு நிறையக் கஞ்சியும், இடுப்பு நிறைய ஆடையும். இவைகளை நீங்கள் இலவசமாக சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து கொடுக்க முடியுமானால் அவனும் படித்து முன்னுக்கு வருவான். இல்லையேல் இல்லை.

பஞ்சமர்களுக்கு தர்க்காஸ்து கொடுத்து விட்டோம் என்று சர்க்காரும் பெருமை பாராட்டுகிறது. வெறும் மேடு பள்ளத்தால் அவனுக்கு என்ன பயன்? அதைத் திருத்தி வேலி போட்டு, பட்டி சேர்த்து, உழவு ஓட்டி விதைத்து அறுத்தெடுக்க அவனுக்கு முட்டுவளிப்பணம் எங்கே? நீங்

கள் கொடுத்த தர்க்காஸ்து நிலத்தின் பலன்களை அநுப வித்து வருவது யார் என்று விசாரணை செய்து அறிந்து பரிகாரம் தேடுங்கள். இரண்டு படி காடு தர்க்காஸ்தில் கிடைப்பதற்குள் அவன் கணக்கையனுக்கும், மணியகார னுக்கும் ரொக்கமானல் குறைந்தது ஐம்பது ரூபாயும் கட னனல் குறைந்தது நூறு ரூபா 'புரோ' நோட்டும் எழுதிக் கொடுக்கும் சங்கதியும் உங்களுக்குத் தெரியாதா?

பறையனையும் சக்கிலியனையும் மிகவும் கேவலமாக மதிக்கிறீர்கள். ஆனல் அவர்களில் இளம் விதவைகள் இல்லை. அவர்களில் தேவதாசிகள் இல்லை. அவர்களில் விபசார விடுதிகள் இல்லை. அவர்கள் சதா சர்வகாலமும் வக்கில் மூட்டைகள் சுமந்துகொண்டு கச்சேரி வாசல்களில் அலைவதில்லை. கோயமுத்தூர் ஜில்லா குடித்தனக் கவுண் டர்களைப்போல அவர்கள் குத்தி விழுந்திக்கொண்டு தூக்கு மேடைகளில் ஏறிச் சாவதில்லை.

குறுகிய இட்டேரிகளில் நீங்கள் செல்லும்போது உங் களைக் கண்டவுடன் அவன் ஓரே ஓட்டமாய் கள்ளியோரத் தில் ஓடி, தனது காலிலுள்ள செருப்புகளை கழற்றிவிட்டு, தலை குனிந்து கைகள் கூப்பி சுவாமி அல்லது புத்தி என்று வணங்கி நின்று நீங்கள் இறுமாப்புடன் அவனைக் கடந்து சென்ற பின்னர் அவன் தன் வழி நோக்கிச் செல்கிறன்.

உங்களோடு அவன் பேச நேர்ந்தால் தனது மிதியடி களை தூரமாக வைத்துவிட்டு மேல் துண்டு இருப்பின் அதைச் சுருட்டி இடுப்பில் கட்டிக்கொண்டு 'சுவாமி புத்தி' அல்லது 'எசமாங்கோ' என்று மிகவும் பயத்துடன் ஒரு கையை மடக்கி மார்மீதும் மறு கையை வாய்மீதும் வைத் துக்கொண்டு பேசுகிறன். ஆனல் நீங்களோ எடுத்த எடுப்

யில் எண்டா படுவா! என்றும், செருப்படி! சாட்டையடி! என்றும் மூர்க்கத்தனமாகவே பேசுகின்றீர்கள்.

உங்களுக்கு ஆகாத ஒரு சக்கிலியன் வெள்ளை வேஷ்டி கட்டிக்கொண்டு வந்தால் 'ஏண்டா உனக்கு ஜம்பம் ஏறிப் போச்சோ' என்று உதைப்பீர்கள். ஏதோ நாலு பண முள்ளவன் தன் குடிசைக்கு வில்லையோடு போட்டிருந்தால் அவன் உங்கள் எவனுக்குச் சிறிது பின் வாங்கவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்துவிட்டால் உடனே 'அவனை எண்டா சக்கிலிய நாயே! உனக்கு வில்லையோடு மேய்த்துகொண்ட ஆணவமா' என்று புடைப்பீர்கள்.

குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் உங்கள் வாய்க் கால்களில் அவன் தண்ணீர் மொள்ளவந்தால் ஒரு குடம் தண்ணீருக்காக ஒருமணிநேரம் வேலைவாங்குவீர்கள். இல்லை யேல் கல்லெடுத்து விரட்டுவீர்கள்.

ஆனல் உங்கள் வீட்டில் பிணம் வீழ்ந்தால் சாமவேளை யாயினும் ஏமவேளையாயினும் சக்கிலியரைக் கூப்பிட்டு உங் கள் உறவினர் வீடு இரண்டு காதவழி யிருப்பினும் செய்தி சொல்லி அவனைக் கால் நடையாய் அனுப்புவீர்கள். அவன் வழிச் செலவுக்குக் காலணுவும் கொடுக்கமாட்டீர்கள். கட் டுச் சாதமும் இல்லை, செய்தி சொன்ன விடத்தில் புளிதண் ணீருமில்லை, ஆனல் நாலுபடி தானியம் கொடுப்பார்கள். அவன் நடந்த அலுப்புத்தீர கள்ளுக்கடையில் கொடுத்து நாலுபடி குடித்துவிட்டு ஊர் வந்து சேருவான். உங்கள் வீட்டுப்பிணம் சுடுகாடோ இடுகாடோ போய்ச் சேரும் வரை பறையர் சக்கிலியர் வயிற்றில் கள்ளைக் குடங் குட மாய் ஊற்றி ஆடிப்பாடி அழச் செய்வீர்கள். ஆனல் அவர் கள் வீட்டில் யாராவது செத்துப்போனல் சடங்கு செய்யக்

காலணவும் கொடாமல் தடி எடுத்துப் புடைக்க வருவீர்கள். நீங்கள் காவடி எடுத்தாலும் பந்த சேர்வை எடுத்தாலும் கரகமெடுத்தாலும் கம்பமெடுத்தாலும் உங்களோடு சரியாக நன்றாக ஒன்றாக ஆடிப்பாடி சக்கிலியன் தப்பட்டை அடிக்கலாம். அவன்மீது நீங்கள் மோதிவிழலாம், நன்றாய்த் தட்டவில்லையென்று கைப்பிரம்பால் சாத்தலாம், அவன் தப்பட்டையை வாங்கி நீங்களே தட்டலாம், ஆனால் அவனுக்கும் உங்கள் கோயில் சுவாமிக்கும் கடுமையான விரோதம்! அவன் கோயிலுட் புகுந்தால் சுவாமி பறந்துவிடும்!

நீங்கள் அவர்களை உங்கள் பிள்ளைகளோடு சேர்த்து மாடு மேய்க்கலாம், வேலி அடைக்கலாம், பாத்தி பிடிக்கலாம், தண்ணீர் விலக்கலாம், ஏர் ஓட்டலாம், பாம்பு அடிக்கலாம், தாம்பு ஓட்டலாம், தானியம் தூற்றலாம், புடைக்கலாம், வாரிக்கொண்டு வந்ததை வீட்டினுள் வாங்கி வைக்கலாம்; ஆனால் உங்கள் பிள்ளைகளோடு அவர்கள் பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் உட்கார்ந்து படிக்க விடாமல் கொடுமைப் படுத்துகிறீர்கள்! தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளையும் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற சர்க்காரின் கண்டிப்பான உத்திரவு இருப்பதால் அவர்களை ஏதோ பள்ளிக்கூட ஒட்டுத் திண்ணையிலோ வாசலிலோ இருக்க நீங்கள் கஷ்டத்தோடு அனுமதித்திருக்கிறீர்கள்!

நீங்கள் எவ்வளவு தான் கொடுமைப்படுத்திய போதிலும், அடித்தாலும், உதைத்தாலும், பேசினாலும், சக்கிலியனும் பறையனும் கஞ்சிக்கு மடிந்தாலும், அதே நிலையில் தலைமுறைக் கணக்காக வாழ்ந்து வருவதால் அதையே தமது வாழ்வின் லட்சியமெனக் கருதியும் அதைவிட மேலான நிலையைக் கனவிலும் கருதிப்பாராமலும் 'ஈன

மான சாதியிற் பிறந்தோம்' இதுவே நமது கதி என்ற தப்பான எண்ணத்தாலும் அவர்களிடம் காசு பணம், ஆள் அம்பு, காடு தோட்டம், உத்தியோகம் அதிகாரம், எதுவும் இல்லாத காரணத்தாலும், அவர்கள் சதா சர்வகாலமும் உங்களிடம் நாய்போல் விசுவாசத்துடன் இருந்து வருகிறார்கள். நீங்கள் அடிக்கும் போதெல்லாம் சக்கிலியன் உங்கள் காலில் விழுகிறான். நீங்கள் உதைக்கும்போதெல்லாம் குனிந்து கொடுக்கிறான். நீங்கள் வையும் போதெல்லாம் தனது கன்னத்தில் போட்டுக்கொள்ளுகிறான். நீங்கள் அவன் படியைக் குறைக்கும்போதெல்லாம் அவன் தன் வயிற்றைப்பிசைந்து கண்ணீர் வடிக்கிறான். உங்கள் சாலையில் நிற்கும் எருதுகளுக்கு நீங்கள் விலை கொடுத்து வாங்கியதால் அவைகளிடம் ஒரு வேளை கடினவேலை வாங்கினும் மறுவேளை ஓய்வு கொடுத்து தேய்த்துக் குளிப்பாட்டி அள்ளை மேவப்புல்லும் கொட்டையும் தவிடும் தண்ணீரும் கொடுக்கிறீர்கள். ஆனால் இவ்விலைதலை யொன்றுமில்லாத எருதுகளான- எருதுகளைவிட அதிகமாக உழைத்துவரும் பறையர் சக்கிலியர் ஆகிய பண்ணையாட்களை நீங்கள் எலும்புந் தோலுமாய் வைத்திருக்கிறீர்கள்; இதற்கொரு முடிவில்லையா? எல்லையில்லையா?

பஞ்சமர்களை உயர்த்தும் வழிகள்.

பஞ்சமர்களுக்கெனத் தனிப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதில் பிள்ளைகளுக்கு கல்வியும், கணக்கும், சித்திரமும் கைத்தொழிலும், சரித்திரமும், சாஸ்திரமும் அரசாங்கச் செலவில் போதிக்கப்படவேண்டும். இப்பள்ளிச் சிறுவர், சிறுமிகள்

படித்து தொழில் புரிந்து வாழ்வு நடத்தும்வரை இவர்கள் அரசாங்கச் செலவிலே போஷிக்கப்படவேண்டும். இது கட்டாயப்படுத்தப்பட வேண்டும். இவ்விதமாக நாளைய தினம் ஏற்பாடு செய்வீர்களாகில் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகட்குள் பஞ்சமர் நிலை வேறாகிவிடும். இதைச் செய்யும்படி சீர்திருத்தக்காரர் போராடவேண்டும். மேட்டூர் திட்டங்களும் அண்ணாமலைக் கல்லூரிகளும், மற்றெல்லாத் திட்டங்களும், நிறுத்தப்பட்டு, அப்பணமெல்லாம் பஞ்சமச் சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி கைத்தொழில் கற்று முன்னேற்றமடையச் செலவு செய்யப்படல் வேண்டும்.

கல்வியின்மையாலும், பொருளாதார நிலையாலும் பஞ்சமர் கீழ்ப்பட்டு நிற்கின்றனர் என்பதை நாம் எடுத்துக்காட்டி ஒப்புக்கொண்ட போதிலும், கல்வியும் பொருளாதாரமும் அவர்களைஉயர்ந்தநிலைக்குக்கொண்டுவந்தபோழ்திலும், அவர்களை சமூக நிலையில் தாழ்மைப்படுத்தி வைக்கும் கொடிய பேய் மற்றொன்று உளது அது தான் மதம், அது தான் சாதி. இவையிரண்டும் ஒழிந்தாலன்றி பஞ்சமர் எனப்படுவோர் மனிதராக வாழ இயலாது. ஏனெனில் இன்றைய தினம் ஐகோர்ட்டு ஜட்ஜியாக வேலைபார்க்கும் ஒரு ஈழவ சாதியைச் சேர்ந்தவர் வைக்கத்துப் பாதைகளில் நடக்கவொட்டாமலும், கல்பாத்தி அக்கிராரத்தில் நுழையவொட்டாமலும், சட்ட பூர்வமாக தடுக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். தாழ்ந்தவகுப்பைச்சார்ந்தவர்கள் எவ்வளவு படித்த போதிலும், எவ்வளவு அதிகாரமிருப்பினும், பணமிருப்பினும், பட்டை பட்டையாக சாம்பலடித்து காய்களை கழுத்து நிறையத் தொங்கவிட்டுக்கொண்டாலும், அவன் பறையன், அவன் சக்கிலியன்' என்ற காரணம் சொல்லி அவனை

பொதுக் குளங்கள், கிணறுகள், கோவில்கள் மடங்கள் ஆகியவற்றின் பாத்யம் மறுக்கப்படுவதைப் பார்க்கிறோம். ஆனது பற்றியே செங்கல்பட்டில் கூடிய சுயமரியாதை மகா நாட்டில், பறையர், சக்கிலியர், நாயக்கர், அய்யர், அய்யங்கார், நாயுடு, முதலியார், கவுண்டர் ஆகிய சகல வேற்றுமை குறிகளான சாதிப்பட்டங்கள் ஒழிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நாட்டு ஆபாசங்களைத் திரட்டிக்குவித்த மிஸ். மேயோ பஞ்சமர் விஷயமாகக் கூறுவது.—

"அயல் தேசத்தார் இந்தியர்களை நிறவேற்றுமையுடன் நடத்துகிறார்களென இந்திய அரசியல் வாதிகள் சொல்லுகின்றனர். ஆனால் இந்தியாவில் கோடிக்கணக்கான ஜனங்களை கல்வியில்லாதவர்களென்றும் தீண்டாதவர்களென்றும் ஒதுக்கி வைத்து அவர்களை மிக இழிவாக நடத்துவதற்கு என்ன சமாதானம் கூறுகிறார்கள். தன் தேச மக்களுக்கே-தன் சகோதர சகோதரிகளுக்கே சாதாரண பிறப்புரிமைகள் கூட வழங்குவதற்கு விருப்பமில்லாத அரசியல் வாதிகள் பிற தேசத்தார் தங்களிடம் நிற வேற்றுமை காண்பிக்கிறார்கள் என்று குறை கூறுவதால் என்ன பயன்?"

இக் கேள்வியாகப்பட்டது இந்திய அரசியல் வாதிகளின் தொண்டையைக் கவ்விப் பிடிப்பதுபோல் இருக்கிறது. தீண்டாமை தீண்டாமை என்று ஓலமிடும் காந்தியடிகள் தீண்டாமை நீங்குவதற்காக காரியத்தில் எதைச் சாதித்து விட்டார்? என்று அறிய ஆசைப்படுகிறேன். அவர் தமது சபர்மதி ஆசிரமத்தில் உயர்ந்த சாதிப் பையன்களையும் பெண்களையும் சேர்த்துக்கொள்ளாமல் தீண்டாத வகுப்புப் பிள்ளைகளில் நூறுபேரையாவது கூட்டித் திரட்டி அவர்க

ளுக்குக் கல்வி, ஒழுக்கம், கைத்தொழில் ஆகியவற்றை பயிற்றுவித்திருப்பாராயின் அவர் உண்மையாகவே மகாத்மாவாயிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் வாயால் தீண்டாமை விலக்கை ஓதிக் கொண்டும், வயிற்றில் வர்ணு சிரமக்குரங்கைக் கட்டிக்கொண்டு மிருப்பதால் காந்தியைப் போன்ற பைத்தியக்காரர் வேறொருவரில்லையென வரப் போகும் சந்ததியார் எள்ளி நகையாடுவர் என்பதில் ஐய மில்லை.

மற்றும் பல காங்கிரஸ் சபைகளும், ஹிந்து மகாசபை களும், தலைவர்களும் தீண்டாமையுடன் வாய்ப்போர் புரிவ தால் பயனென்ன? என்று கேட்கிறேன். காரியத்தில் தீண் டப்படாதவருடைய நிலையை உயர்த்த, சமூக நிலையை உயர்த்த, கல்வி நிலையை உயர்த்த, செல்வ நிலைமையை உயர்த்த இவர்கள் என்ன செய்து விட்டார்கள்? பிள்ளை யைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதுபோல ஒருபக் கம் தீண்டாமை விலக்குத் தீர்மானமும், மற்றொரு பக்கம் வர்ணுசிரம மகாநாடுகளுங் கூட்டுவிப்பதால் என்ன பயன் விளையப்போகிறது?

பிறவியில் வேற்றுமை உண்டா?

"அமரிக்க நாட்டில் நீக்ரோஜாதியார் கேவலமாக நடத்தப்படுகையில் இந்தியாவில் தீண்டாதாரைப்பற்றிப் பேச மேயோவுக்கு என்ன யோக்கியதை யிருக்கிறது" என சிலர் கண்டித்தார்கள். கடவுள் நம்பிக்கையுள்ள அமெரிக்க வெள்ளையர்கள் கருப்பு நீக்ரோ சாதியாரைத் தங்கள் பக்கத்தில் அணுகவொட்டாமல் தடுப்பதில் அதிசய மொன்றுமில்லை, அக்காருண்ய

மான கடவுள், பாரபட்சமற்ற கடவுள், சர்வசக்தியுள்ள கடவுள் அமெரிக்க நாட்டில் சில மனிதர்களை வெண்மையாகவும் செம்மையாகவும், ரூபலாவண்யத்தோடும் படைத்துவிட்டு, அதே நாட்டில் கன்னங்கரேலென்று உதடுபிதுங்கிய சுருட்டைக் கருப்பன்களை ஏன் படைத்தார்? என்று விளங்கவில்லை. இன்றெல்லாம் பாடு பட்டாலும் இன்னு மிந்த ஜன்மமே பாடுபட்டாலும் நீக்ரோவை அமெரிக்க வெள்ளையனைப் போல் செய்யமுடியாது. சர்வசக்தனை கடவுளாலும் செய்ய முடியாதென்றே தோன்றுகிறது. ஏனெனில் அவருக்கு அது முடிக்கும் திறமையிருந்தால் வெகு காலத்திற்கு முன்பே முடித்திருப்பார். அவருக்கு அத்திறமை இல்லாதிருப்பதால்தான் தனது சிருஷ்டிகளான நீக்ரோக்களின் அவமதிப்பை பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனல் இந்நாட்டிலிருக்கும் பஞ்சமர்களை நன்றாகப் படிக்கவைத்து அவர்களுக்கு நல்ல அதிகாரம் கொடுத்து, அவர்களும் துரைபோல சட்டைமாட்டிக் கொண்டால் பார்ப்பனப் பெண்கள் தாராளமாக மணந்துகொள்ள முன் வருவார்கள். ஆனல் ஒருநீக்ரோவை எந்தநிலையில் உயர்த்தினுலும், அவனுடைய கருப்பு நிறமும் பிதுங்கிய உதடும், சுருட்டைத்தலையும், விகாரமான பார்வையும் அவனிடமிருந்து நல்ல ரூபலாவண்யமுள்ள பெண்களை விரட்டிவிடும். இதிலிருந்து என்ன விளங்குகிறதென்றால், பார்ப்பனனுக்கும் பறையனுக்கும் செயற்கையான வித்தியாசங்களேயன்றி இயற்கையான வித்யாசங்கள் இல்லை என்பதே. கருத்த பார்ப்பனனுமுண்டு. வெளுத்த பறையனுமுண்டு. பறையனுக்கும்சக்கிலியனுக்கும் சகலஉரிமைகளையும்வழங்கி

ஞல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அவன் பார்ப்பனனை விட உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட முடியும்.

சைவர்களின் பிதற்றல்.

திருநெல்வேலியில் கூடிய சைவப் பெரியார் தனிக்கூட்டத்தில் தலைமை வகித்த அன்பர், அன்பெனும் சிவனின் தொண்டர், அன்பே சைவமெனும் பக்தர், சைவ அன்பைப்போல் பிறமதங்களில் அன்பில்லை யென்ற ஆராய்ச்சியாளர் என்ன சொன்னூர்? சாதிபேதமின்றி எல்லோரையும் கடவுள் வழிபாட்டுக்காக கோயிலுள் அனுமதிக்கலாம், ஆனுல் சில சாதியார் அசுத்தமாக இருக்கிற படியால் அனுமதிக்கப் படுவதில்லை—என்ருர்.

ஐயா! சைவப்பெரியாரே! தாங்கள் கோரும் 'சுத்தம்' அகச்சுத்தமா, புறச்சுத்தமா? அகச் சுத்தமாயின், அகச் சுத்த முள்ளவனுக்கு கோவில் எதற்கு? புறச்சுத்தமாயின், நாளையதினமிருந்து தங்களை ஒரு அழுக்குள்ள குடிசையில் குடியிருக்கச்செய்து, திருநெல்வேலியிலுள்ள கக்கூசு மலங்களையெல்லாம் வாரியெடுத்து அப்புறப்படுத்துவதைத் தங்களுக்குத் தொழிலாகக் கொடுத்து, அதற்காக தங்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளங்கொடுத்து, கிணற்றிலும் அநுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டால் தாங்கள் 'சுத்தமாக' இருக்க முடியுமா?

ஹே! வெட்கங்கெட்ட பெரியாரே! தங்களுடைய, அன்பும், அறிவும், ஆராய்ச்சியும், சமயப்பற்றும் இதை என் உணர முடியாமற்போயிற்று? சைவத்தில் ததும்பும் 'அன்பு' கிறிஸ்தவ மதத்திலுமில்லை என்ற பெரியீர்! சைவத்

தினல், - கொடுஞ் சைவத்தினல், அழுக்குற்று, அடிபுற்று, அடிமைப்பட்டு, கொடுமைப்பட்டு, சிறுமைப்பட்டுக் கிடந்த எத்துணே 'பஞ்சமர்' குடும்பங்களை கிறிஸ்து மதம் ரட்சித்து, அவர்களைக்குளிப்பாட்டி, நல்லகல்வி தந்து, கைத்தொழில் தந்து அவர்களை லாயர்களாகவும், பண்டிதர்களாகவும், போலீஸ் இன்ஸ்பெக்டர்களாகவும், தாசில்தார்களாகவும், முன்சீப்பு களாகவும் மற்றும் பல துறைகளில் அவர்களை உயர்த்தியும், அமர்த்தியும் உங்கள் சைவவேளாளர்களை அவர்கள் காலில் விழச் செய்துள்ளது. அவர்கள் உணவைக் கருதியும், உடையைக் கருதியும், அவர்களைத் தாழ்த்தி வைக்காமல் உயர்த்திப்பார்க்கும் தன்மை அக்கிறிஸ்தவக் கடவுளுக்கும் கிறிஸ்தவ மிஷினரிகளுக்கும், கிறிஸ்தவ அன்பிற்கும் உள தென்பதை அறிந்து கொள்ளுங்கள். பழனி என்ற சைவப் பெயரையும், ராமன் என்ற வைணவப் பெயரையும் அவர்கள் மாற்றி சைமன், மோஸஸ் என்ற நாமங்களைச் சூட்டியவுடன் அவர்களை எவ்வளவு உயர்த்திவிடுகிறார்கள் என்பதை அறி யுங்கள். அவ்விதம் பெயர் மாற்றம் உடையவர்களைக் கண்டு தாங்கள் எவ்விதம் வணங்குகிறீர்கள் என்பதை உண ருங்கள்.

பறையர், சக்கிலியர், தொம்பர், தோட்டி, பள்ளர், குறவர், வலையர். எனப்படும் மாசற்ற மனித சாதியாரே! தீண்டப் படாமலும், பார்க்கப் படாமலும் அவதிப்படும் நாயாடிச்சோதர சோதரிகளே! நீங்கள் எழுந்து நில்லுங் கள். கல்வியையும், கைத்தொழிலையும் போற்றுங்கள். சம யத்தையும் சாதியையும் தூற்றுங்கள். சாதியாலும், சம யத்தாலும், நீங்கள் பாழ்பட்டுக் கிடப்பதை உணருங்கள். கல்வியும், கைத்தொழிலும் உங்களை மேம்படச் செய்யு

மென்பதை தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் என்றைய தினம் மேம்பட எண்ணுகிறீர்களோ அன்றைய தினமே சைவத்தையும், வைணவத்தையும், இந்து மதத்தையும், வர்ணாசிரம தர்மத்தையும், சமயத்தையும், சாஸ்திரத்தையும், கோவிலெனப்படும் விபசார விடுதிகளையும் விட்டொழியுங்கள். அவைகளைப் பற்றி மனதிலும் சிந்திக்காதேயுங்கள். நீங்கள் இம்மையில் ஒழுக்கத்தோடு வாழ முயலுங்கள். ஒழுக்கம் உயிரினும் பெரிது என்பதை பறை சாற்றுங்கள். உங்கள் வயிற்றுக்கு சோறும் இடுப்புக்கு ஆடையும், நிழலுக்கு வீடும், தேடி அடைந்து ஆனந்தமடையுங்கள். அதற்கெதிராக வுள்ளதெது வாகிலும்—கடவுளாகிலும்—உடைத்தெறியுங்கள். நீங்கள் தாங்கமுடியாத துயரங்களைச் சுமந்து நிற்கிறீர்கள். இதைவிட அதிகமான துயரங்களை மறுமையில் உள்ளதாகக் கூறப்படும் நரகத்திலும் காண முடியாது. ஆதலால் மறுமையைப் பற்றிச் சிந்திக்காமல் இம்மையில் போராடி வெற்றி கூறுங்கள்.

குற்றங் கூறுபவன் நமது நண்பனே.

காதரைன் மேயோவெனும் அமெரிக்க மாதால் எழுதிப்ரசுரிக்கப்பட்ட "இந்திய மாதா" வெனும் புத்தகத்தில் இந்தியா அவதூறு செய்யப்பட்டிருப்பதாய் என் தேசத்தார் பலர் வெம்பி வீழ்ந்தனர். அவ்விதம் வெம்பி வீழ்ந்தவர் ஒருவராயினும் இந்தியமாதாவில் கண்ட விடயங்கள் முழுப்பொய்யெனச் சாதிக்கவில்லை. சிலர் பிறநாடுகளிலும் இக்குற்றங்கள் இல்லையா என்றனர். சிலர் மனித சமூகத்தில் குற்றங்கள் இருப்பது இயல்பே எனக்கூறித் திருப்தியுற்றனர். மற்றுஞ் சிலர் மிகைபடக் கூறிய கூற்றென்றும்

கூறினர். நாம் நாள்தோறும் சாப்பிடும் அரிசி, பருப்பு, காய்கறி இவைகளெல்லாம் நாள்தோறும் நம் கண்ணிற்குச் சிறிதாகவே காணப்பட்ட போதிலும், ஒரு வருட காலத்தில் நமது வயிற்றினுட் புகுந்து சென்ற ஜல திட பதார்த்தங்களின் அளவையும், நிறையையும் யாராகிலுமொருவர் குறிப்பிட்டு வைத்திருந்து நமக்குக் காட்டினால், அந்த விவரங்களைப் பார்த்து நாம் திகைத்துப் போவோமென்பதில் ஐயமில்லை. அதுபோலவே ஏதோ நாம் கண்டுங்காணமல் நம்முள் நாடோறும் நடைபெற்று வரும் குறைபாடுகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் மேயோ ஒன்ருகத் திரட்டிப் புத்தக ரூபமாக வெளியிட்டதால் அது நம் கண்ணிற்கு மிகைபடத் தெரிவது வியப்பல்ல. நடு நிலையிலிருந்து உண்மையை ஒப்புக்கொண்டு சீர்திருத்தம் செய்யும் மனமுடையோர் நம் நாட்டு சூழல்களைப்பற்றி மேயோ கூற வேண்டியதைக் குறைத்தே கூறினர் என்பர்.

மிஸ் மேயோ சர்க்காரின் கங்காணியாகவே வந்து, இந்தியருடைய நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் குற்றங்கண்டு கூறி, இவ்வளவு கேவலமாகவிருக்கும் இந்தியர் சுயராஜ்ஜியத்திற்கு எப்படி லாயக்கானவர்கள்? என்பதையே அடிப்படையாகக் கொண்டு விஷயங்களை முடித்திருப்பதாகவும், இந்தியரிடம் சில குறைகள் இருக்கின்றன என்பதையும், அவற்றைப் போக்க வேண்டியது அவசியம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுவதாகவும் ஆனுல் அவைகளுக்கு ராஜீயப்பூச்சுப் பூசி, அதனுல் இந்தியர் சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லையென்று ஸ்தாபிக்க முயல்வது போக்கிரித்தனமாகும் என்றும், சமூக சூழல்கள் எல்லா நாட்டிலும், எல்லா ஜனங்களிடமும் இருக்கின்றன என்பதாகவும்

எனதன்பைக் கவர்ந்த டாக்டர். பி. வரதராஜுலு எழுதியிருக்கிறார்.

இதில் மேயோ, வெள்ளைக்கார ஆட்சியை உலகத்தில் வலுப்படுத்தும் கொள்கை யுடையார் என்பதையும், இந்தியரை உலகத்தார் முன்னிலையில் அவமதித்துக் கூறி இந்தியாவைப்பற்றி நிற்கும் ஆங்கில அரசாங்கத்தின் இருப்புக் கைகளை பலப்படுத்தவே இப்புத்தகம் எழுதியுள்ளார் என்பதையும் யான் கூசாமல் ஒப்புக் கொள்ளுகிறேன். அதுபற்றி மேயோவின் நோக்கத்தையும், குரோதபுத்தியையும், மண்ணாசையையும் யான்மிகவும் அழுத்தமாகக் கண்டிக்கிறேன். ஆனால் அவர் (மிஸ் மேயோ) எந்நோக்கோடு கூறியிருப்பினும், கூறிய விஷயங்கள் உண்மையே என எனது முந்திய கட்டுரைகளில் விளக்கியிருக்கிறேன். என்னை ஒரு சபையின் முன்னிலையில் ஒருவர் அவமதிக்கும் பொருட்டு "நீ முழுக்குடியன்" என்று கூறி அவமதித்தால், அவருடைய நோக்கத்தையும் மற்றதையும் கவனிக்காமல் என்னிடமிருக்கும் குடிக்கும் தன்மையை அது முழுக் குடியாயினும் அரைக்குடியாயினும், அளவில் சண்டை போட்டு காலத்தை வீணாக்காமல் உடனே அகற்றிக்கொள்ள வேண்டுவது எனது முதற்கடமையாகும் என்பதை நண்பர் ஒப்புக்கொள்வர் என்றே நினைக்கின்றேன். அன்றியும் எனது குடிக்கும் வழக்கத்தை நீக்கிக்கொண்டு, பிறர் யாரும் என்னை அவ்விதம் அவமதியாது இருக்கும்படியான சந்தர்ப்பத்தை அந்த அவமதித்த நண்பன் எனக்கு அளித்தது பற்றி யான் அவனை வாழ்த்தவும் கடமைப்பட்டுள்ளேன்.

பிற நாட்டிற்கும் நமது நாட்டிற்கும் உள்ள வேற்றுமை.

இரண்டாவதாக திரு. நாயுடுகார் கூறியது "சமூக ஊழல்கள் எல்லா நாட்டிலும், எல்லா ஜனங்களிடமும் இருக்கின்றன" என்பது. ஊழல்கள் எல்லா நாட்டிலும் எல்லா ஜனங்களிடமுமிருந்த போதிலும் உலகத்தில் பல்வேறு நாட்டினரும் சுதந்தரத்தோடு சுயவாட்சி புரிந்து வாழ்வதேன்? இந்தியா வெனும் இந்நாடு மட்டும் பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடப்பதேன்? இதற்குற்ற சமாதானம் நமது நண்பர் கூறுவாராக. நம்முடைய நாட்டிலிருக்கும் ஊழல்களுக்கும் பிற நாட்டினில் காணப்படும் ஊழல்களுக்கும் அடிப்படையான வேற்றுமை யுண்டு. நாம் தொட்டது தொண்ணூறுக்கும் மதம் மதம் என்று கூக்குரலிடுகிறோம். நாம் உண்பதிலிருந்து மலம் கழிக்கும் வரையிலும், விடியற்கால முதற்கொண்டு உறங்கும் வரையிலும், உறக்கத்திலும் பிறந்தது முதற் கொண்டு சாகும் வரையிலும், செத்த பின்னிட்டும், மூச்சு வாங்குதல், விடுதல், எல்லாவற்றிற்கும் மதப்போர்வை போர்த்தி இருக்கிறோம். நம்முடைய மத உணர்ச்சி நம்முடைய மூடத்தனங்கட்கு அரண் செய்யா நிற்கிறது. மேல் நாடுகளில் அங்ஙனமல்ல; அவர்களுடைய அறியாமை நல்ல படிப்பினால் அகன்றுவிடும் தன்மை பொருந்தியது. அவர்களிடம் எவ்வளவு ஊழல் பொருந்தியிருப்பினும் நாம் ஒரு தேயத்தினர், ஒரு சாதியினர், நம்முடைய வாழ்விலும் தாழ்விலும் நமக்கு சம பங்குண்டு என்ற எண்ணத்தோடு கூடித் தொழில் புரிந்து வாழ்கின்றனர். அவர்களுடைய வேற்றுமைகளெல்லாம் தொழில் குறித்தும், பணம் குறித்தும் நிற்பன. தொழில் மாற்றத்தாலும் செல்வ மாற்றத்தாலும்

அவ் வேற்றுமைகள் யாவும் நிலையில்லாது மாறுவன. ஒரு காலத்தில் எவராலும் சீந்தப்படாமல் தெருக்களில் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த பையன் மற்றொரு காலத்தில் பிரதம மந்திரிஸ்தானம் வகித்து ராஜ ராஜாக்களோடு கலந்து விருந்துண்ணும் பெருமையை நாம் காதால் கேட்டோம். சாமானிய தொழிலாளி குடும்பத்தில் பிறந்த ஒருவன் மத குருவாகி முடிமன்னர்கள் எல்லாம் தலைவணங்கத்தக்க பெரியோராய் விளங்குவதையும் நாம் பார்த்தோம்.

ஆனால் இந்நாட்டிலோ வெனில் கனம் டாக்டர் சுப்பராயன் முதன் மந்திரியாயினும் சரி, வைசியராய் ஆயினும் சரி, ரயில்வே போர்ட்டர் ஆயினும் சரி, அவர் நமது வர்ணு சிரமிகள் கண்ணில் "சூத்திர" னுகவே (இழிவான மனிதனுகவே) காணப்படுவார். அதுபோலவே கல்வியிலும் ஒழுக்கத்திலும், பக்தியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கிய, திருவாங்கூர் ஸ்ரீ நாராயணகுரு சுவாமிகள் நமது நம்பூதிரிப்பார்ப்பனர்கள்முன் நிலையில் தீண்டப்படாதாராகவே பாவிக்கப்பட்டது மன்றி, நாய்களும், பன்றிகளும் நடமாடும் பாதைகளில் நடக்க அநுமதிக்கப்படவுமில்லை. எனவே நம்மை அடிமைகளாகவும், மேல் நாட்டாரை அரசர்களாகவும் செய்து வைத்துள்ளது இந்த அடிப்படையான வேற்றுமை யொன்றுதான் என்பதை எனது நண்பர் இனியாவது கண்டு தெளியட்டும்.

நாம் அடிமைப் பட்டுக் கிடப்பதேன்?

நமது சொந்த நாட்டிலேயே நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களாகவும், எதிரிகளாகவும் நமக்குள் அன்பின்றி, ஒற்றுமையின்றி, சகோதர பாவனையின்றி வாழச் செய்யும் மதச் சம்பிரதாயங்க

ளும், சாதிக்கட்டுகளும், மூடப்பழக்க வழக்கங்களும் இருக்கும் வரையில் நாம் பிறநாட்டாரைப் போன்று தலை தூக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

'சுயராஜ்யம்' நமது பிறப்புரிமை என்பதை யாவரும் மறுக்கவில்லை. ஆனால் சுயராஜ்யத்தைப் பற்றி நாம் சிந்திக்கவும் யோக்கியதை யற்றவர்களென்பதை சரித்திரம் நிரூபித்து விட்டது. பாழான ஆரியர்கள் (பார்ப்பனர்கள்-ஹிந்துக்கள்) என்றையதினம் இந்தியாவில் அடிவைத்தார்களோ அன்றையதினமே இந்நாட்டை சனி பிடித்தது. அவர் இந்நாட்டில் பரப்பிவிட்ட "மனு தர்மங்களால்" நமது சமூகம் நாலு வர்ணங்களாகவும், மற்றொரு வர்ணமாகவும், பல்வேறு சாதிகளாகவும் பிரிந்து, ஒருவனை மற்றொருவன் வேறென மதிக்க வைத்து ஒருவனைக் கண்டால் மற்றவன் துவேஷிக்கும்படியாக ஒரு சாதிக்கொரு நீதி வகுத்து, ஒருவன் நடக்கும் பாதையில் மற்றவன் நடவாமல் படிக்கும், ஒருவன் குளிக்கும் ஓடையில் மற்றவன் குளிக்காமல்படிக்கும், ஒருவன் படிக்கும் பள்ளியில் மற்றவன் படியாமல் படிக்கும், ஒருவன் செய்யும் தொழிலை மற்றவன் செய்யாமற்படிக்கும், ஒருவன் வணங்கும் கோவிலில் மற்றவன் வணங்காமல் படிக்கும் ஒருவன் படிக்கும் வேதத்தை மற்றவன் படிக்காமற்படிக்கும் ஏற்பட்டு விட்டதால் நாம் சிதறுண்டு அடிமைப் பட்டுக் கிடக்கிறோம்.

ஹிந்துக்களென்னும் ஆரியப் பார்ப்பனருடைய மதக் கோட்பாடுகள் நம்மைப் பலவாறாகப் பிரித்து, நம்மில் ஒற்றுமை குன்றச் செய்து விட்டதால் நம்மைப் பல நூற்றாண்டுகளாகப் பல தேயத்தினர் சூறையாடிச் சென்றனர். ஆப்கானியர் நாட்டைக் கொள்ளையடித்தனர், மொகலாயர்

நாட்டில் அமுல் நடத்தினர், பாரசீகர் நாட்டில் தலைமை கொண்டனர், பிரான்சு தேசத்தார் வந்து போர் செய்து தோற்கடித்தனர், உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து பல்வேறு நாட்டினர் வந்து நம்மை நாசப்படுத்தினர். இப்போதும் பிறநாடுகள் நம்முடைய செல்வங்களையெல்லாம் நாள்தோறும் சுரண்டிச் சுரண்டி நம்மைப் பாப்பர்களாக்கி விட்டன. நம்முடைய நாட்டை நாம் ஆளவேண்டுவது நமது பிறப்புரிமையே எனினும் நமது 'கர்மபலன்' நம்மை வேறாக்கி விட்டது இளமையில் சோம்பலுற்றவன் முதுமையில் வறுமையால் கஷ்டப்படுவது போலவும், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்தவன் இறுதியில் கடனாளியாவது போலவும், அளவுக்கு மீறிப் போகம் செய்தவன் கடைசியில் ஆண்மை யிழப்பது போலவும், பருவத்தில் பயிர் செய்யாதவன் அறுவடைக்காலத்தில் ஓலமிடுவதுபோலவும், நாம் செய்த 'கர்மங்களின்' பலனை நாம் அனுபவித்துக்கொண்டு வருகிறோம்.

அந்நியருக்கு அடிமைப்பட்டுக்கிடப்பதே இந்தியாவின் " தலைவிதி" யாகும். அதிலிருந்து மீண்டு கொள்ள ஆஸ்திகச் சங்கங்களாலும், சைவப்பெரியார் தனிக்கூட்டங்களாலும், வர்ணாசிரமிகள்மகாநாடுகளாலும், காங்கிரஸ் ராஜீபக்தீர் மானங்களாலும், தேசிய வாதியின் வீரத்தொனியாலும், சட்டசபைப் பிரவேசத்தாலும், சட்டசபையை பகிஷ்கரித்தலாலும், உத்தியோகம் ஏற்றுக்கொள்ளுதலாலும்,உத்தியோகம் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதாலும், ராமாயணப் பிரசங்கங்களாலும், சத்காலட்சேபங்களாலும், ஆலயவழிபாட்டினாலும், தாசிகள் நாட்டியத்தாலும், பார்ப்பனர்கள் ஜபங்களாலும், வேள்வியாலும், யாகத்தாலும், தவத்தா

லும், சிந்தனையாலும், மற்ற மந்திர தந்திரங்களாலும் ஒரு காலமும் முடியவே முடியாது. உங்கள் 'தலைவிதி' உங்களை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கையில் நீங்கள் சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை யென்றும், சமூக ஊழல்களுக்கு ராஜீயப் பூச்சு பூசுவது போக்கிரிதனம் என்றும் சுயராஜ்யம் வந்தபின் எல்லாம் சரிப்படுத்திக்கொள்ளுவோம் என்றும் பைத்தியம் தீர்ந்தபின் கல்யாணம் செய்வதா? கல்யாணம் செய்தபின் பைத்தியம் தீருவதா?'' என்றும் நீங்கள் பிதற்றித்திரிவதால் 'சுயராஜ்யம்' வந்துவிடாது. சைமன் கமிஷனாலும் உங்கள் தலைவிதி தீராது. சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதாலும் உங்கள் 'தலைவிதி' போகாது. கடைசியாக சட்டசபை வெடிகுண்டுகளும் உங்கள் கர்மபலனை வேருக்காது.

நீங்கள் வடகலை நாமம் போட்டாலும், தென்கலை நாமம் போட்டாலும். அதை நீங்கள் பட்டை பட்டையாய்ப் போட்டாலும், சன்ன சன்னமாய்ப் போட்டாலும், நீங்கள் துளசிமணி தரித்தாலும், நாலாயிரப் பிரபந்தங்கள் படித்தாலும், உங்கள் 'கர்மபலன்' ஓடாது. நீங்கள் கண்ணு மூக்கு தெரியாமல் விபூதி பூசிக்கொண்டாலும், கழுத்தொடிய தாவடங்கள் பூண்டாலும், சரியை, கிரியை, யோகங்களைப் பயின்றாலும், பன்னிரு திருமுறைகளைப் படித்தாலும், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களைக் கேட்டாலும், வேத இதிகாசங்களில் நம்பிக்கை பூண்டாலும், அகச்சான்று புறச்சான்று தேடிப்பிடித்தாலும், கலைகளையும், ஓவியங்களையும் நீங்கள் வளர்த்தாலும், நீங்கள் உலகத்தைக் காத்து ரட்சிக்கும் அவதாரங்களுக்காக தவங்கிடந்தாலும், உங்கள் விஷ்ணுவும் சிவனும் பூமியில் பிரசன்ன

மானாலும், கிழக்கே உதிக்கும் கதிரவன் மேற்கே உதித்தாலும் உங்கள் "கர்மபலன்" உங்களைவிட் டகலாதென்பது முக்காலும் திண்ணம்.

விடுதலைக்கு வழி என்ன?

"கர்ம" கர்த்தாக்கள் நீங்கள். நீங்கள் செய்த கர்மங்களின் பலாபலத்தை நீங்கள் அநுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் விரும்பினால் இக் கர்மபலனை உடைத்தெறியும் வல்லமை உங்களிடமே காணப்பெறுவீர்கள். ஒரு வீட்டைக் கட்ட உங்களுக்குத் திறன் இருக்குமாகில், அவ்வீட்டால் உங்களுக்கு இம்சை உண்டாகும் போது அதை இடித்துத்தள்ளும் ஆற்றலும் உங்களிடமே தான் இருக்கிறது. வீட்டை இடித்தெறிய மனங்கொள்ளாமல் ஐயோ, வீட்டால் துன்பம் ஏற்பட்டு விட்டதே, வீட்டைக்கட்டிய "கர்மபலனை" அநுபவித்தே தீரவேண்டும் என்று நீங்கள் எண்ணி வாளா கிடந்தால் அவ்வீடு இருக்கும் வரையிலும், அவ்வீட்டைக் கட்டிய "கர்மபலன்" உங்களை விட்டகலாது. அத்துன்பத்தைப் போக்குமாறு நீங்கள் உங்கள் சிவனையும், விஷ்ணுவையும் வேண்டினாலும் தீராது. உங்கள் துன்பம் நீங்கவேண்டுமானால், உங்களுக்கு துன்பத்தை விளைவிக்கும் வீட்டை உங்களுடைய வலிமையால் நீங்களே கட்டிய வீட்டை நீங்களே தகர்த்தெறியவேண்டும். ஐயோ! கலைகள் போகின்றனவே ஐயோ! சித்திரம் போகிறதே என்று தயங்குவீர்களாகில், உங்கள் "கர்மபலன்" உங்களை விட்டகலாது.

இன்றைய தினம் நீங்கள் அநுபவித்து வரும் "கர்மபலன்" என்னவென்று மேலே சொல்லிவிட்டேன். அது

தான் நீங்கள் பார்ப்பனீயத்துக்கு இடங்கொடுத்து, தாழ்மைப்பட்டு, அவதிப்பட்டு, அடிமைப்பட்டு மூடநம்பிக்கைகளாலும்,மதவெறியாலும்,வீண்சடங்குகளாலும் நாசமுற்று சேதமுற்று அதனால் வேற்றுமைப்பட்டு அந்நிய ஆதிக்கத்தால் பிடிபட்டுக் கிடப்பதாகும். இப்பார்ப்பனீயத்தை என்றையதினம் ஒழிக்கின்றீர்களோ அன்றையதினமே உங்கள் "கர்மபலன்" உங்களை விட்டகன்று, அன்றையதினமே நீங்கள் மனிதத்தன்மை வாய்ந்து உங்கள் சகோதர சகோதரிகளோடு சரி நிகர் சமானமாக வாழ்வீர்கள். அன்றையதினமே ஆங்கிலவாட்சி தானுகவே இந்தியாவினின்று விலகிக் கொள்ளும்.

மேயோ சொன்னதும் அதுவே.

இதைத்தான் மேயோவும் கூறியுள்ளார். நீங்கள் அதை அறியாமல் வெம்பி வீழ்ந்தீர்கள். பார்ப்பனீயத்தில் நீங்கள் சிக்குண்டு கிடப்பதால், உங்கள் பொருள்களையும் நேரத்தையும் சடங்குகளிலும் கோவில்களிலும் அர்ச்சகர்களிலும் உற்சவங்களிலும் தாசி வேசிகளிலும் வீணுக்குகிறீர்கள். ஆண்டவன் பேரால் மிருகங்களைப் பலி கொடுக்கிறீர்கள். பிள்ளை வரத்துக்காகக் கற்பிழக்கிறீர்கள். தீர்த்தம் தீர்த்தமென்று மலத்தைக் குடிக்கிறீர்கள். இதை எடுத்துக் காட்டினவர்களை குப்பைக்காரியென்று குறைகூறினீர்கள். வெறும் பேச்சுப்பேசி வெட்கமுறுகிறீர்கள். சின்னஞ் சிறுமிகட்குச் சிறுவயதிலேயே விவாகம் செய்து சிற்றின்பத்தாலே சீர்கெட்டுப் போனீர்கள். விபசாரம் வேணும் வேணுமென்கிறீர்கள்.விபசாரத்தைதேவர்களும்கைக்கொண்டுள்ளார்கள் என்று புராணம் படிக்கின்றீர்கள், பெண்களை

அடிமை கொண்டீர்கள். அவர்களுக்கு கல்வி மறுத்தீர்கள், சிறைப்படுத்தினீர்கள், விதவைத்தன்மையை ஏற்படுத்திக் கொடுமைப்படுத்தி அவர்களை துகற்பழித்தீர்கள், கருவழித்தீர்கள், சிசுக்கொலை புரிந்தீர்கள், கர்ப்பிணிகளைக் கவனியாமல் வற்புறுத்தினீர்கள், பூணூல் பார்ப்பனரின் பாதம் வருடினீர்கள், உங்கள் பெண்டு பிள்ளைகளையும், பொருள்களையும், சகல, சுகபோகங்களையும் பார்ப்பனனுக்கு மனுசட்டப்படி சொந்தமாக்கினீர்கள், பஞ்சமர்களை வஞ்சகமாய் நடத்தினீர்கள் அவர்களுக்குக்கல்வி மறுத்தீர்கள், நல்ல உணவு மறுத்தீர்கள், நல்ல உடை மறுத்தீர்கள். நல்ல குடிசை மறுத்தீர்கள் இன்னும் எவ்வளவோ சொல்லுக்கடங்காத ஊழல்களையும் ஆபாசங்களையும் மூடத்தனங்களையும், நீங்கள் ஆபரணமாகப் பூண்டுள்ளீர்கள். இவைதான் நீங்கள் கட்டிய வீடு, இவைகளினின்று நீங்கள் என்று விலகுகிறீர்களோ, இத்துன்ப வீட்டை என்று நீங்கள் தகர்த்தெறிகின்றீர்களோ, அன்றுதான் உங்கள் "கர்மபலன்" உங்களைவிட்டகலும். அன்றுதான் நீங்கள் சுயராஜ்ய வீரர்களாவீர்கள். அத்தகைய வீரத்தனத்தை உங்களுக்கூக் கொடுக்கவே சுயமரியாதை இயக்கம் தோன்றியுள்ளது. அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்து, உங்கள் சுய அறிவு கொண்டு, சகலத்தையும் ஆராய்ந்து, கொள்ளவேண்டியவைகளைக்கொண்டு தள்ள வேண்டியவைகளைத் தள்ளி நீங்கள் ஒழுக்கம், தைரியம், ஆண்மை, வாய்மை, நேர்மை ஆகிய சகல நற்குண சீலர்களாகி அன்புததும்பி, ஒற்றுமையெனும் ஆபரணம் அணிந்து, பறையனும் பார்ப்பனனும் தத்தம் சாதிப் பெயர்களை மறந்து, கைலாகு கொடுத்து ஒன்றுபட்டு, ஒரு முகமாய், ஒரு மனதாய், ஒரு பிடியாய் நிற்பீர்களானல் எம்மேயோவும் உங்களைக் குறைகூறி வசை பாடமாட்டார்.

தன்னாட்சியல்லாத பிறவாட்சிகள் இந்தியாவில் தலை காட்டா.

நமது வந்தனம்.

நம்மை இடித்துக்கூறி அதனால் நம்முடைய கண்களை விழிக்கச்செய்து, நம்முடைய குறைகளை அகற்றி வீழ்த்தி நம்மைமனிதர்களாகவும், சுதந்தர வீரர்களாகவும் எழுந்து நின்று போராடும் உணர்ச்சியை நம்முள் உண்டுபண்ணிய மிஸ். காதரைன் மேயோவுக்கு நமது வந்தனத்தை செலுத்துவோமாக.

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.